இதழ் 11 ஆனி 2021 £4

# சிறுகதை மஞ்சரி

ஆசிரியர்: மு.தயாளன்

மாதஇதழ்




வளர்ந்த வளரும் படைப்பாளிகளுக்கான களம்

# பங்காளர்கள்



பேராசிரியர்
ச. மௌனகுரு
பக்கம் 4



செ. யோகநாதன்
பக்கம் 5



ஃபைசல்
அகமது
பக்கம் 15



சி. ரஞ்சிதா
பக்கம் 19



ஐ. கார்த்திகா
பக்கம் 24



மயில்
மகாலிங்கம்
பக்கம் 28



ஷெல்லிதாசன்
பக்கம் 32



தர்மிகா
உமாசுததர்மா
பக்கம் 36



பேராசிரியர்
செ. யோகராசா
பக்கம் 39



நந்தினி
சேவியர்
பக்கம் 40



# வர்ணங்களைப் புறக்கணிப்போம்...

ஒரு சராசரி மனிதனின் நியாயமான வாழ்க்கை இன்று கேள்விக்குறியாக உள்ளது. நம்பிக்கை என்பது என்ன விலை என்று கேட்பதுபோல் நிலைமை உள்ளது. யார் யாரை நம்புவது என்ற ஐயம் நிறைந்த வினாக்கள் ஒவ்வொரு மனிதனையும் ஆக்கிரமித்துள்ளது.
கடவுளை நம்பிவிட்டால் மனிதனின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என ஒரு சாரார் கோவில்களில் மணி கிலுக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு சாரார் கடவுளா? யாரது என்று கேட்டுப் பரிகாச உலகத்தில் உலவிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியாக மனிதன் தனக்குத்தானே வர்ணம் பூசிக்கொண்டு தன்னை மறைத்துக் கொண்டு வேறொரு விம்பத்தின் பொருளாகத் தன்னை உருவகம் செய்து கொண்டு வாழ முயற்சித்துக் கொண்டிருக்கிறான்.
மொத்தத்தில் மனிதனின் வாழ்க்கையானது திட்டமிடல் இன்றி எழுந்தமானத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் யதார்த்தபூர்வமான உண்மையாகும்.
உலக வாழ்க்கையை வெறுத்து மனைவி மக்களைத் துறந்து சென்ற கௌதமனது அடிவருடிகள் மீண்டும் அந்த வாழ்க்கையை நோக்கியே நகர்கிறார்கள் என்பதும் மதவாதிகளுக்குக் கிடைத்த அடியென்றே நினைக்கிறேன்.
சுதந்திரம் என்கின்ற உயரிய சொற்பிரயோகம் வெறுமனே தனிமனிதனை நோக்கியதாகவும் அவனது சுயநலங்களிற்கான பாதுகாப்பாகவுமே பாவிக்கப்படுகிறது.
சமூகம் ஏங்கிப்போய் செய்வதறியாது ஸ்தம்பித்துப்போய் தனக்கான திசையைத் தேடிக் கொண்டிருக்கிறது.
இலக்கியங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு முற்போக்கு பிற்போக்கு நற்போக்கு என்று தமக்குத்தாமே சிவப்பு மஞ்சள் பச்சை கறுப்பு என்று பிரிந்து நிற்கின்றன.
இந்த இலக்கிய விற்பன்னர்கள் சமூகத்தைப் பாதுகாப்பதாகக் கோஷமெழுப்பிக் கொண்டு சமூகத்தைத் துண்டாக்குவதில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.
எங்கு நாம் செல்கிறோம் எதை நோக்கிச் செல்கிறோம் என்பதன் சூட்சுமம் யாருக்குமே புரிந்ததாகத் தெரியவில்லை. புரியவேண்டுமென்ற நோக்கமும் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. சிவப்பாகட்டும் கறுப்பாகட்டும் ஏன் எந்த நிறமாகட்டும் மனிதர்கள் பசுத்தோல் போர்த்த புலிகளாகவே சமூகத்தில் உலவுவதற்குத் துணை போகின்றவைகளாகவே உள்ளன. இறுதியில் இவை தேவைதானா என்கின்ற மிகமிக அடிப்படையான வினாவிற்கு யாருமே விடையளிக்காமல் அதே பசுத்தோலைப் போர்த்திக்கொண்டு மாயமான்களாகி விடுகின்றனர். இலக்கியத்திற்கான நோக்கம் இங்கு கேள்விக்குறியாகி விடுகிறது.
பின்நவீனம் முன்நவீனம் என்கின்ற வாதப்பிரதிவாதங்களும் எழுத்தாளர்கள் ஒருவரோடொருவர் பொதுவெளியில் மோதிக்கொள்ளும் அநாகரிகச் செயற்பாடுகளுமே இன்று எஞ்சியுள்ளன என்ற கசப்பான உண்மையினை நாம் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்.
இவற்றிலிருந்து நாம் வெளிவந்தாக வேண்டும். அப்போதுதான் மனிதகுலம் இன்றிருக்கும் வைரஸ் நெருக்கடியிலிருந்து தம்மை விலக்கி வாசிப்பு உலகத்துள் புகுந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகும். மனிதகுலம் அதன் பொதுநலம் நோக்கிய சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டுமாயின் வாசிப்பு உலகத்துள் தம்மை அமிழ்த்தியாக வேண்டும். எழுத்தாளர்களும் தம் எழுத்துக்களை மக்கள் நலம் சார்ந்து எழுதி அவர்களுக்கு வழிகாட்டிகளாக வேண்டும்.
இப்படியான போக்குத்தான் இலக்கியத்தின் வளர்ச்சியாகும். வெறுமனே உத்திகளும் மக்களைவிட்டு உள்ளடக்கங்களை காடுகளைநோக்கி நகர்த்தலும் இலக்கிய வளர்ச்சியாகக் கொள்ளப்படாது என்றே நினைக்கின்றேன்.

மு.தயாளன்

# உள்ளடக்கம்...


1 **வர்ணங்களைப் புறக்கணிப்போம்.....**
மு. தயாளன்

2 **உள்ளடக்கம்**

3 **வாசிப்பனுபவம் 7**
மு.தயாளன்

4 **மரணமும் ஒரு வரமே**
பேராசிரியர் மௌனகுரு

5 **திருச்சிற்றம்பலம் - சிறப்புச் சிறுகதை**
செம்பியன் செல்வன்

15 **ஒரு தேநீர் ஒரு குவளை**
∴பைசல் அகமது

19 **ஒரு காகிதப் பூவை வட்டமிடும்....**
சி.ரஞ்சிதா

24 **ஒரு மர(ண)த்தின் புலம்பல்**
ஐ. கிருத்திகா

28 **மடிப்பிச்சை**
மயில் மகாலிங்கம்

32 **தாய்**
ஷெல்லிதாசன்

36 **சின்னக் குருவியின் குட்டித் தூக்கம்**
தர்மிகா உமாதாகுமார்

39 **மஞ்சரி 10 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா

40 **எழுத்தின் அனுபவம்....**
நந்தினி சேவியர்


**மன்னிப்பு:**
மஞ்சரி10 இல் மூன்று தவறுகள் ஏற்பட்டுவிட்டன.
1. நெல்ண்டை அம்மன் கட்டுரை எழுதியவரின் பெயர் **சந்திரா இரவீந்திரகுமாரன்.**
2.இதயராசனின் கதைத் தலைப்பு **முத்துச் சங்கிலியும் கண்மணியக்காவும்** என்பதாகும்.
3. மேகா கதையை எழுதியவர் **காவலூர் அகிலன்** ஆவார்.

**சிறுகதை மஞ்சரி 10 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. அன்றாடங்காய்ச்சி - மா. சிவசோதி
2. முத்துச் சங்கிலியும் கண்மணியக்காவும் - இதயராசன்
3. மேகா - காவலூர் அகிலன்


**நன்றிகள்..**
பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சிரியை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் எனது மனைவி சாருகேசிக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தைத் தந்துதவிய பைசல் அகமது அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


**1000 பேரை இணைப்போம்......**
தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


அட்டை வடிவமைப்பு: ரமணன் நற்குணதயாளன்
அட்டைப்படம் : ஃபைசல் அகமது

**பிரதம ஆசிரியர்** : மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்:** செல்வி த. சரண்யா, வி.மைக்கேல் கொலின்
**ஆலோசகர்கள்** : Dr P. இராசையா , பேராசிரியர் செ. யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:** 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Other countries:** $80/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649

# வாசிப்பனுபவம் 7

**நாவல்:** வீணையடி நீ எனக்கு
**ஆசிரியர் :** வி. மைக்கேல் கொலின்
**வெளியீடு :** மகுடம்

---

**ச**மீபத்தில் வெளியிடப்பெற்ற மைக்கேல் கொலின் அவர்களின் வீணையடி நீயெனக்கு என்ற நாவலின் வாசிப்பனுபவத்தைக் கூறலாமென எண்ணியுள்ளேன். இது விமர்சனமல்ல. முழுக்க முழுக்க எனது அனுபவமே. இது இருபத்திரிகைகளில் 2000 மாம் ஆண்டளவில் தொடராக வெளியிடப்பட்டு 21 வருடங்கள் கழித்து நாவலாக அச்சேறி வந்துள்ளது. தொடர் கதையாக வெளிவந்த இக் கதை நாவலாகச் சிலமாற்றங்களோடு உருவாகியதுபோல் தெரிகிறது.

எந்த ஒரு நாவலும் தன்னுடைய பேசுபொருளாக எதைக் கொண்டாலும் அந்தக் காலகட்ட வரலாறினூடாகப் பயணிக்கவேண்டும். இந்த நாவலின் பேசுபொருள் காதல் என்று வெளியிலே தோற்றினாலும் அது உண்மையல்ல என்றே நினைக்கிறேன். காதல் ஒரு கருவியாகப் பாவிக்கப்பட்டு ஒரு காலகட்டத்தின் வரலாறு நாவலூடாக நகர்த்தப்பட்டுள்ளது என்பதே நிஜமாகும்.

இந்த நாவலின் நாயகர்களான ஜெயரதன் நிவேதா ஆகியவர்கள் வரலாற்றை தம்மோடு அழைத்து வருவதனை காணக் கூடியதாக உள்ளது. இந்தக் கதை நிகழ்ந்த காலகட்டம் இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காலகட்டம். இந்தக் காலகட்டத்தில் பல துன்பங்களை தமிழ்மக்கள் அனுபவித்து வந்த காலமாகும். அந்த நேரத்தில் நிகழ்ந்த இராணுவத்தினரின் பரிசோதனைகளும் நெருக்குவாரங்களும் தெளிவாக நாவலில் காட்டப்பட்டுள்ளன. இது ஒரு வரலாற்றுப் பதிவாகவே எனக்குப்படுகிறது.

நிவேதாவுக்கு இராணுவத்தாரால் நிகழ்ந்த துன்பம் அன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு நிகழ்ந்த துன்பங்களின் தொடர் வரலாற்றைக் காட்டி நிற்கிறது. ஆனால் நிவேதாவோடு சென்ற பெண் எவ்வித பாதிப்புமின்றி வெளியே வந்தது யதார்த்தத்துக்கு முரணானதாகப்பட்டது.

நாவல் உண்மை நிகழ்வுகளோடு நகர்வதால் மேற்கண்ட நிகழ்வு எமக்கு புதிய செய்தியாகவே இருந்தது.

பல்கலைக் கழகங்களில் நடைபெறும் பகிடிவதை நிகழ்வுகள் மாணவர்களின் சுயத்தை அழிக்காதவரை தேவையான ஒன்றே என்ற ஒரு வாதமும் முன் வைக்கப்படுகிறது. இதற்கு வாசகர்களின் அபிப்பிராயம் எதிராகவே இருக்கும் என்றே எண்ணுகிறேன். இப்படியான பகிடிவதைகளினூடாகத்தான் நட்பை அதிகரிக்கலாம் என்று கருதுவது சரியாகப்படவில்லை. பல்கலைக்கழக வாழ்வின் ஒரு பக்கத்தின் மூலையையே ஆசிரியர் காட்ட முனைந்துள்ளார். பல்கலைக் கழக வாழ்வு காதல் போன்ற மெல்லிய உணர்வுகளுக்கப்பால் நகர்ந்து அடுத்த கட்டத்துக்குள் நுழைந்துவிட்ட காலத்திலேயே இந் நாவலின் நிகழ்வுகள் நடக்கின்றன என்பதே உண்மையாகும்.

இதைப் படித்துக் கொண்டிருந்தபோது கவிதைப் புத்தகம் ஒன்றைப் படிக்கின்றேனோ என்ற ஐயமும் உருவானது. அந்தளவுக்குக் கவிதைகள் நிரம்ப இருந்தன. கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

முதலாவது அத்தியாயம் கதையில் சில குழப்பங்களைத் தருகிறது.

எழுத்துநடை அருமையாகவுள்ளது. வாசிக்கத் தொடங்கினால் வைக்காமலேயே வாசிக்கத்தூண்டும் நவீனம்.

கதை விறுவிறுப்பாகவே நகர்கின்றது.

சமூக மாற்றத்தின் பலமான சக்திகளாக பல்கலைக்கழக மாணவர்கள் இருந்தார்கள். அது சம்பந்தமாக எதுவும் இல்லாதமையால் ஆசிரியரின் அடுத்த படைப்புகள் அவையோடு வரும் என்றே நினைக்கிறேன்.

மொத்தத்தில் காதலைக் கொண்டு வரலாற்றை நகர்த்தியமை எனக்குப் பிடித்த ஒரு விடயம்.


சுவை நிறைந்த இந்த நாவல் ஒரு புதிய வருகையே. மேலும் பல நாவல்களைச் சமூகத்திற்குத் தருவார் என்றே நினைக்கிறேன்.

**மு. தயாளன்**

# மரணமும் ஒரு வரமே

**தனித்துப்போன முதிர் வெண்பறவை பறந்து போனது. மரணம்கூட ஒரு வகையில் ஒரு வரம்தான்.**

கரிசல் மண்ணையும் அம்மக்களின் வாழ்வையும் அவர் தம் பேச்சுமொழியையும் நமக்கு அறிமுகம் செய்தவர் கி.ரா ஆவர். முதன் முதலில் எழுத்துலகில் ராஜநாராயணன் என்று அழைக்கப்பட்ட கி.ரா வை 1998 இல் பாண்டிச்சேரியில் குணசேகரன் வீட்டில் ஒருநாள் சந்திக்கிறேன். முதன்முதல் பாண்டிச்சேரி



சென்ற எனக்கு அறிமுகம் செய்ய நண்பர் குணசேகரன் தன் வீட்டிற் குப் பல நாடகக் கலைஞர்களையும் எழுத் தாளர்களையும் பல்கலைக் கழகம் சார்ந்தோரையும் அழைத்திருந்தார் பேரா. பஞ்சாங்கம்,வெளி ரங்க ராஜன், பிரேம், நாடகக் கலைஞர் ஆறுமுகம் எனச் சிலர் ஞாபகம் வருகிறார்கள். அவர்களுள் கி.ராவும் ஒருவர். அப்போதுதான் கிராவை நான் முதன் முதலில் காண்கிறேன்

வெள்ளை வேட்டி வெள்ளை ஜிப்பா, வெள்ளை முடி, வெள்ளைப் பற்கள் தெரியப் பிரகாசமான ஒரு வெள்ளைமனிதராக அவர் எனக்குத் தரிசனம் தந்தார். அவர் பேசப்பேச அவரது வெள்ளை உள்ளம் என்னைக் கொள்ளை கொண்டது. வாழ்வில் மறக்கமுடியாத நல்லதோர் உரையாடல். அவர் என்னிடம் இலங்கை பற்றியும் என் செயற்பாடுகள் பற்றியும் சில கேள்விகள் கேட்கிறார். நான் அனைத்திற்கும் இலங்கைத் தமிழ் பாசையில் ஓம் ஓம் எனப்பதில் அளிக்கிறேன். “ஓம்“ என்பது நாம் இங்கு இயல்பாகப் பாவிக்கும் சொல். அன்றாடப் பேச்சுவழக்கு. ஆமாஆமா என்ற இந்தியத் தமிழுக்குப் பழக்கமானவர் அவர் ஓம் ஓம் என ஒலித்த அந்த ஓங்காரம் அவரைக் கவர்ந்து விட்டிருக்க வேண்டும் இந்த ஓம் ஓம் எனும் ஒலியை அவதானித்த அவதானிப்புத் திறனும் பேச்சுத் தமிழில் காவியம் செய்யும் மஹா நாவலசிரியருமான கிரா ‘‘ஓம்! ஓம்! ஓம்! எத்தனை ஓம்காரங்கள்’’ என அந்த ஓமை ரசிக்கிறார். இந்த ஓமைத் தன் மனைவியும் கேட்க அவாவுற்றார் போலும். பாண்டிச்சேரியை விட்டுப் போகுமுன்னர் எங்கள் வீட்டுக்கும் ஒரு தடவை அவசியம் வாருங்கள் என என்னை அழைக்கிறார். கரும்பு தின்னக் கூலி ஏன்? சற்றுத் தொலைவிலிருந்த அவர் வீட்டுக்கு மறுநாள் நண்பர் குணசேகரனுடன் செல்கிறேன். அவர் வீட்டில் அவர் அன்பு மனைவியாரைக் காணுகின்றேன்.

அலங்கார உருவம் அலங்காரமான புன்னகை அலங்காரமான எளிமை இவைதான் முதலில் என் னைக்கவர்ந்தன. அதுவும் ஓர் வெள்ளை மனமே என்பதை அவர் பேச்சு, செயல்கள் காட்டுகின்றன. வயது சென்ற அத்தம்பதிகளின் வாழ்வு எனக்குப் பல அர்த்தங்களை உணர்த்துகின்றது. வாழ்வை அனுபவித்து வாழ்ந்தனர் இருவரும் குழந்தைகளாக இரு முதிர் பறவைகளாக எனக்குக் காட்சி தருகின்றனர். அதன் பின்னர் பாண்டிச்சேரி போகும் நேரமெல்லாம் இவ்விரு சோடி முதிர் பறவை களையும் தரிசித்து வருதலும் வழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு சந்திப்பும் ஒவ்வொரு அனுபவம் அம்மா வின் காப்பியில் ஒரு தனி ருசி தெரியும். அனுபவஸ்தர் போடும் காப்பி அல்லவா அது?

சுவையும் மணமும் மிகுந்த அக்காப்பியை அருந்தியபடி கி.ரா வுடனும் அம்மாவுடனும் உரையாடிய அந்த இனிய நாட்கள் ஞாபகம் வருகின்றன. சோடிப் பறவைகள் எனக் கூறி மகிழ்ந்தேன். அச்சோடிப் பறவைகளில் பெண்பறவை இந்த ஆண்பறவையை விட்டுச் சில காலத்துக்கு முன் பறந்து விட்டது. பறந்தபோது அதற்கு வயது 95. அதனிலும் மூத்த கி,ரா. என்ற ஆண்பறவை இங்கு தனித்துப்போனது கொடுமை கொடுமை முதுமையில் தனிமை. தனித்துப் போன அந்த முதிர் பறவை மேலும் 3 வருடங்கள் வாழ்ந்து பார்த்தது. வாழ முயன்றது. தனிமையிலும் முதுமையிலும் அந்த ஆண்முதிர்பறவை என்ன நினைத்திருக்கும்? அந்தத் தனிமை வாழ்வை, நினைவுகளை அது எழுத்தில் பதிந்ததா எனத் தெரியவில்லை. ஆனால் தனித்துப்போன அந்த முதிர் பறவையும் இன்று நம்மை விட்டுப் பறந்து போய்விட்டது. எப்படி நாம் இதனைப் பார்க்கலாம்? தனித்துப் போன இந்த முதிர்பறவை தன் தனிமையை வென்றது. தன் முதுமையையும் வென்றது.மரணம் கூட சில நேரங்களில் ஒரு வரம்தான்.

**பேராசிரியர் மௌனகுரு**

# திருச்சிற்றம்பலம்

**சிறப்புச் சிறுகதை**



**செ. யோகநாதன்**

இப்படிச் செய்வான் எனச் சண்மு கலிங்கம் எதிர்பார்க்கவே இல்லை. சண்முகலிங்கம் மட்டுமல்ல திருச் சிற்றம்பலத்தோடு பழகிய வேறு யாருங்கூடத்தான் திருச்சிற்றம்பலத் தின் இந்த முடிவை நினைத்திருக் கமாட்டார்கள்.

சண்முகலிங்கம் புரண்டு புரண்டு படுத்தும் நித்திரையே வரவில்லை. அடுத்த அறையிலிருந்து இலேசாக யாரோ இருமுவது கேட்டது. அந்த மனநிலையில் மெல்லிய இருமலும் மூளையைத் தகர்க்கும் பேரோசை போலச் சண்முகலிங்கத்தின் மன தைத்தாக்க சண்முகலிங்கம் கனத் துக் கறுத்த இருள் செறிந்திருந்த அந்த அறையை விட்டுவெளியே வந்தான்.

வெளியே நிலவு மங்கிக்கிடந்தது. முனையுடைந்த கடற்சிற்பிபோல நிலவும் பிய்ந்ததுபோல வடிவமற்ற பாதியாய் மங்கி சோம்பலான பிரகா சத்தை வீசிக்கொண்டிருந்தது. இரண் டொரு முகிற்திரள் மேலும் கிழிந்து காற்றுத் திசையோடு ஓடிக் கொண் டிருந்தன. இதுபோன்ற ஒரு நிலவுக் காலத்தின் போதுதான் திருச்சிற் றம்பலமும் சண்முகலிங்கமும் முதன் முதலிற் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பு நிகழ்ந்து இரண்டு வருடங் கள் கழிந்திருக்கலாம். திருச்சிற்றம்ப லத்தின் தோற்றமோ பேச்சோ எவரையும் கவரக்கூடியவை அல்ல. அதுவும் அவன் பேசுவது புத்தக வசனங்களை ஒப்புவிப்பது போலக் கேட்டவருக்கே மனதினுள் சிரிப்பைத் தோற்றுவிக்கும். எப்போதும் பின் னாலே முதுகைச் சுரண்டிக்கொண்டி ருக்கும் இடதுகை ஒன்றுதான் அவனை நினைக்கையில் மனதிலே உருவமாய் விழும். அடிக்கடி சுளித் துக்கொள்ளும் அந்த மயிரடந்த புருவங்களின் கீழே நம்பிக்கை வறட்சி தோய்ந்த அவனின் கண்கள் லேசாக அடைபட்டிருந்தன. திருச் சிற்றம்பலத்தின் தடித்த உதடுகள் மலர்வது வெகு அபூர்வம். திடீரென



1962 இல் சிற்பியின் கலைச் செல்வி இதழில் இவருடைய முதற் கதை வெளியானது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்து 1964 இல் இவரது பத்துச் சிறு கதைகளைக் கொண்ட யோக நாதன் சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. அஞ்சலி இதழில் வெளிவந்த ஒளி நமக்கு வேண்டும் குறு நாவல் 1974 இல் நூலாக வெளிவந்து இலங்கை சாகித்ய மண்டலப் பரிசைப்பெற்றது. இந்திய மத்திய அரசின் பரிசு உட்பட தமிழக அரசின் விருதினை நான்கு தடவைகள் பெற்றுள்ளார். 1994 இல் இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் என்று ஒவ்வொன்றும் 650 பக்கங்கள் கொண்ட வெள்ளிப் பாதரசம் ஒரு கூடைக் கொழுந்து ஆகிய இரண்டு தொகுதிகளை வெளியிட்டார். குழந்தை இலக்கியத்திலும் அதிக ஈடுபாடுகாட்டிய செ.யோ அத்துறையில் பல நூல்களை எழுதியதுடன் மூன்று சிறுவர் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ்த் திரைப்படத் துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் இணை இயக்குனராகவும் செயற்பட்டார். இவர் 28-01-2008 திங்கள் மாரடைப்பால் யாழ்ப்பாணத்தில் காலமானார். இவர் இறக்கும்வரை 84 நூல்களை எழுதியுள்ளார். தமிழ்த் தேசியத்திலும் அக்கறை கொண்ட அற்புதமான எழுத்தாளர். இக்கதை நீர்வை பொன்னையன் - செ. கதிர்காமநாதன் இருவருடனும் சேர்ந்து வெளியிட்ட தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

அரிதாக அவன் இதழ்களில் புன்னகை தவழும் அப்படிப் புன்னகைத்தாலும் முகத்திற் பிரகாசம் கொடுத்த சில கணங்களிலே அந்த சிரிப்பு புஸ் என்று அழிந்து விடும். சிரிப்பதையும் ஓர் குற்றமான செயல் என நினைப்பது போலிருந்தது திருச்சிற்றம்பலத்தின்போக்கு.

முல்லைத்தீவுக்கு அரசாங்க எழுதுவினைஞனாக நியமிக்கப்பட்ட சண்முகலிங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு யாருமே அவனுக்குப் பழக்கமாகாத நிலையில் போன முதல் வாரத்தில் கடற்கரையிலுள்ள மீன் பிடிப்படகொன்றின் பக்கத்தில் தனிமையில் உட்கார்ந்திருந்தான். மணல் பரந்து மனிதனுக்கே இனம் புரியாத அமைதியினைக் கொடுக்கும். அக்கடற்கரையில் அலையின் வயிறு குலுங்கும் கத்தலைத் தவிர வேறு ஒலியில்லை. அந்த ஓசை கூட அக்கடற்கரையின் மௌனத்தை ரசிக்க வைக்கும் பின்னணியாக ஒலித்தது. எவ்வளவு துயரச்சுமையோடு போகிறவனது மனதையும் அந்த கடற்கரையின் பரந்த தன்மையும் உயர்ந்து விழுந்து நுரைசீறும் அலைகளின் எழிலும் அந்த கருநீல வண்ணத்தின் குளிர்மையும் கழுவி அமைதி கொடுத்து விடும் என அன்று சண்முகலிங்கம் நினைத்தான். வேலையால் களைத்து அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து மாலை வேளைகளில் கடற்கரையில் போயிருக்கும் சண்முகலிங்கத்திற்கு இந்த அனுபவம் வாழ்வோடு என்றும் பிணைந்திருக்க வேண்டுமென்ற மனவிருப்பமிருந்தது. பணமில்லாமல் அனுபவிக்கும் இச்சுகத்தை அவன் மனதார விரும்பினான்.

அலையின் நீண்ட கரமொன்று நுரையோடு சீறிக் கிளம்பி சோகி ஒன்றைக் கரையில் எற்றி உதைத்துத் திரும்பிற்று. முதுகோட்டில் சிவப்பு வரிகள் நிறைந்த நண்டுக்குஞ்சொன்று கிளு கிளுவென்று வெகுதூரம் மணலுக்கு வந்துகொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்த சண்முகலிங்கம் யாரோ கூப்பிட்ட உணர்வில் பின் புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

இடது கையால் பின்முதுகைச் சுரண்டிக்கொண்டு தன்னை அழைத்த அந்த உருவத்தைச் சண்முகலிங்கம் கண்டிருக்கின்றான். முல்லைத்தீவின் புத்தகக் கடை ஒன்றிலே கண்டதாக நினைவு. ஏன் கூப்பிட்டீர்? என்கிற கேள்வியைச் சண்முகலிங்கத்தின் கண்களாலேயே கிரகித்துக் கொண்ட அந்த மனிதன் அதற்குப் பதிலாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவன் பெயர் திருச்சிற்றம்பலம் முல்லைத்தீவிலுள்ள ஒரே புத்தகக் கடையான சரஸ்வதி புத்தக நிலையத்தில் நிக்கிறான்.

திருச்சிற்றம்பலம் சொன்னவற்றைப் புருவத்தைச் சுழித்துக்கொண்டே சண்முகலிங்கம் கேட்டுக் கொண்டிருந்தான். நேரம் போகப் போக இருவரிடையேயும் ஒரு மன நெருக்கம் தோன்றிற்று. முதற் சந்திப்பிலே தங்களிடையே குறுகிய பிணைப் பொன்று தோன்றி விட்டதாய் இருவரும் தங்களுக்குள் உணர்ந்து கொண்டார்கள். திருச்சிற்றம்பலம் எப்போதுமே உரத்தகுரலிற் பேசுவான். மற்றவர்கள் தன்னைப் பார்த்து கேலி செய்கின்ற வேளைகளில் மட்டுமே அவன் மனச்சோர்வுடன் வாய்க்குள் முணு முணுத்துக்கொண்டு போவான். காற்பெருவிரலால் நிலத்தைத் தேய்த்துக் கொள்வான்.

முல்லைத்தீவில் மத்தியதரவர்க்

கத்துக்குக் கீழ்த்தட்டினருக்குத் தங்குவதற்கென்றுள்ள அந்தப் பெரிய வீட்டில் ஒரு அறையை வாடைக்கு எடுத்து அதில் தனியாக வாழ்ந்தான் சண்முகலிங்கம். அந்தப் பெரிய வீட்டின் எல்லா அறைகளிலும் பலர் வாடகைக்கு இருந்தபோதிலும் அவர்களில் யாருடனும் சண்முலிங்கம் மனம் விட்டு பழகியதில்லை.

சண்முகலிங்கம் முல்லைத்தீவுக்கு உத்தியோகம் பார்க்க வருமுன்பு திருச்சிற்றம்பலம் சரஸ்வதி புத்தக நிலையத் தின் முன்புறத்திலுள்ள ஒடுங்கிய திண்ணையில் தான் படுப்பது வழக்கம். எலும்புகளையே நக்கிச் சுரண்டும் ஊசி நாக்கு அங்கு வீசும் பனிக்காற்றுக்கு அதுவும் கடற்காற்று. கடையின் முன் திண்ணையில் குறண்டிக் கொண்டு சின்னப் போர்வைக்குள் வெடவெடக்கும் திருச்சிற்றம்பலம் ஓயாது மூக்கைச் சிந்தி உறிஞ்சிக் கொண்டிருந்தான். எவ்வளவு தான் தலையைக்காலை மூடினாலும் கிஸ்சென்ற பனிக்காற்று அவன் மூடிப் போர்த்த போர்வைக்குள் நிரம்பிப் பம்மி விழும். ஓயாத தடிமன் காரணமாக விக்ஸ் டப்பி ஒன்றை அவன் தன்னுடைய மடிக்குள் பத்திரமாக வைத்திருந்தான். வந்த புதிதில் திருச்சிற்றம்பலத்தின் இருக்கை பற்றி சண்முகலிங்கம் ஒன்றுமே விசாரிக்கவில்லை. அங்கு இருக்கத் தொடங்கி ஒரு மாதங்களிந்த பின்னர்தான் சண்முகலிங்கத்தோடு ஓரளவு அறிமுகமாயிருந்த இரத்தினசிங்கம் திருச்சிற்றம்பலத்தின் இந்தப் பேய்த்த னமான வேலையைப்பற்றிச் சொன்னான்.

மறுநாள் மாலையில் சண்முகலிங்கமும் திருச்சிற்றம்ப லமும் கடற்கரையில் இருந்து கதைத்துக் கொண்டிருக் கையில் நட்புக் கலந்து தொனித்த அழுத்தமான குரலில் தன்னுடைய அறையிலேயே திருச்சிற்றம்பலத் தையும் வந்து தங்கும்படி சண்முகலிங்கம் வேண்டிக் கொண்டான். திருச்சிற்றம்பலம் ஒரு உதிரித் தொழிலா ளியாக இருந்த போதிலும் தனது நட்புக்கு மிக அவசரமாய் ஒருவன் தேவைப்பட்டதால் மட்டுமல்லாது திருச்சிற்றம்பலத்தின் ஒளிவுமறைவற்ற குணங்கள் காரணமாகவும் திருச்சிற்றம்பலத்தோடு சண்முகலிங்கம் சினேகிதம் வைத்துக் கொண்டான்.

திருச்சிற்றம்பலம் தனது உடமைகளோடு சண்முகலிங்கத் தின் அறைக்கு வந்தான். ஒரு பழைய சூட்கேசுக்குள் உடுப்புகள், அரைப் பழசான மண்ணெண்ணைக்குக்கர், சில புத்தகங்கள். கடதாசிப்பெட்டி நிறைய தட்டுமுட்டுச் சாமான்கள், இவற்றை எல்லாம் விட விசேடகவனத்துடன் கொண்டுவரப்பட்ட இரண்டு படங்கள், ஒன்று விநாய கர்படம், மற்றது அவனின் குடும்பப் படம். அதுவும் ஓடுகின்ற தண்ணீரிலே தோற்றமளிக்கும் பிரதிபிம்பம் போல உருவம் மங்கிக் கிடந்தது.

இவைதான் அவனின் சொத்துக்கள்!

சண்முகலிங்கம் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். மிட்டாய்க்காரனின் மிஷினுக்குள் அரைபட்டுவரும் தும்புமிட்டாய் போல முகிற் குவியல்கள் வானத்தின் கிழக்கு மூலையில் துணுக்குகளாய் ஓடிக்கொண்டிருந்தன. அவ்வேளையில் சண்முகலிங்கத்தின் மனதிற்குள் இனந்தெரியாத பொருமல், கூக்குரல். பயங்கரம் யாவும் கலந்து சீறிற்று.

திருச்சிற்றம்பலம் எங்குபோய் எப்படி....?

தன்னுடைய அந்தச் சொத்துகளை தனது வீட்டு விலாசத்துக்கே அனுப்பும்படியும், தன்னையாருமே தேடவேண்டாம் என்று வெகு உருக்கமாகவும் எழுதி வைத்துவிட்டுத் திருச்சிற்றம்பலம் இன்று பகல் எங்கோ போய்விட்டான். எல்லோரிடமும் அவனைப்பற்றி விசாரித்தாகிவிட்டது. அவன் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் வந்து தன்னிடம் திறப்பைத் தந்துவிட்டுச் சாப்பிடப் போய் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போன வன் மாலைப்பொழுதாகியும் திரும்பிவரவில்லை என்று சொன்னதோடு திருச்சிற்றம்பலம் காணாமற்போனது பற்றிய கவலையை சரஸ்வதி புத்தக நிலையச் சொந்தக்காரன் தீர்த்துக்கொண்டான். திருச்சிற்றம்பலத்தின் இந்த மாதச் சம்பளத்தை இன்னமும் கொடுக்காதபடியால் அப்பணம் தனக்கு இலாபம் என எண்ணி புத்தகக் கடையின் சொந்தக்காரன் சந்தோசங்கொண்டான். நன்றாகக் கேட்டுப் பார்த்ததில் பகல் பத்து மணிக்கு மாங்குளம் என்ற இடத்திற்குப்போன பஸ்ஸில் திருச்சிற்றம்பலம் போனதாக அறிய முடிந்தது.

திருச்சிற்றம்பலம் ஏன் இந்த முடிவுக்கு வந்தான் என்பதை சண்முகலிங்கம் பல தடவை மூளையைக் குழப்பியும் தீர்மானித்துக்கொள்ள முடியவில்லை. சில வேளை திருச்சிற்றம்பலம் தற்கொலை செய்து கொள்வ தற்காக...... இருக்காது. அவன் தன்னுடைய குடும்பத்தை மிகவும் பொறுப்புடன் தாங்கி வாழ்பவன். தன்னுடைய தாய், தங்கச்சி, தம்பி ஆகியோருக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாக அவனே அடிக்கடி சண்முகலிங்கத்துக்குச் சொல்லியிருக்கிறான்.

ஆனால் அவன் சண்முகலிங்கத்திற்கு எழுதின அந்தக் கடிதம் அவனின் அந்தச் சொத்துக்களைத் தன் குடும்பத்தினரிடம் சேர்க்கும்படி எழுதியிருந்த விதம்

தன்னை யாருமே தேடவேண்டாம் என்றும் இனிக்கவலை களற்ற உலகில் தான் வாழப்போவதாயும் எழுதிய உருக்கம்...... இவைகள் யாவும் தற்கொலை செய்யத் தீர்மானித்தவனின் முன் முயற்சிகள் தானே!

திருச்சிற்றம்பலத்திற்கு முப்பத்தியாறு வயதாகிவிட்ட போதிலும் தோற்றமோ நாற்பது வயதை மதிப்பிட வைத்தது. முன்னுச்சி மயிர் முற்றாக உதிர்ந்து ஏறு நெற்றி விழுந்தது. திருச்சிற்றம்பலத்திற்கு உள்ளூர மனதை அரிக்கும் கவலையாக இருந்தது. சண்முகலிங்கம் அறைக்குள் இல்லாத வேளைகளில் கண்ணாடியைத் தலைப்பக்கமாகச் சரித்து பல கோணங்களிலும் வைத்துப் பார்த்து தனது தலையில் விழும் வழுக்கைக்கா கத் தனக்குள் தானே மனம் வெதும்புவான்.

மெல்லிய சன்னமாக உடைந்த குரலில் தன்னுடைய நிலையைச் சொல்லித்தானே மனம் அலுத்துக்கொள்வது அவனுக்கு நித்திய தொழிலாகிவிட்டது. வாழ்ந்து தான் என்ன பிரயோசனம்? என்று மனம் புழுங்குகிற அதே வேளையில் அதே மனம் அவனை மறுபுறத்தில் ஒரு சுயநலக்காரன் பொய்யன் என்று சுட்டிக்காட்டவும் தவறுவதில்லை. தான் வாழ்வதே தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்காக என்று அடிக்கடி சொல்லும் அவனுக்கு மனம் முற்றாக அலுத்துக் களைத்த வேளையில் அதே விரக்தி தோய்ந்த வசனங்களே ஓயாமல் வாயிலும் நினைவிலும் வரும்.

திருச்சிற்றம்பலமே அவனது குடும்பத்தின் சுமைதாங்கி. திருச்சிற்றம்பலத்தின் தாய் பொன்னம்மா ஓயாத நோயாளி. அவனது தங்கச்சி அன்னலெட்சுமிக்கு இருபத்தியேழு வயது. தம்பி விநாயகமூர்த்தி எஸ்.எஸ்.ஸி வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். பொன்னம்மா கணவனை இழந்த பின்பு பலகாரம் சுட்டு விற்று வாழ்க்கையை ஒரு மாதிரித் தாக்காட்டிக் கொள்ள முயன்றபோதும் அது மிகவும் சிரமமாக இருந்தது. அத்தோடு சிறுவயதிலிருந்தே திருச்சிற்றம்பலம் படிப்பில் மிகவும் குறைவாக இருந்தபடியினால் அப்போதே ஏதாவது வேலைக்கு அவனை அனுப்ப முடிவெடுக்கப்பட்டிருந்தது. அன்னலெட்சுமி தாயோடு சேர்ந்து விற்பதற்குப் பலகாரங்கள் செய்வதற்கு உதவி ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள். விநாயகமூர்த்தி நன்றாகப் படிக்கக் கூடியவன். எவ்விதமான கடும் முயற்சிகளுமின்றி எல்லாப் பரீட்சைகளிலும் முதற்தர மாகச் சித்தி எய்தினான். எஸ்.எஸ்.ஸி பரீட்சையிற் சித்தியெய்திய பிறகு சிலருக்கு அவன் ரீயூஷன் சொல்லிக் கொடுத்து அவ்வருவாயிலிருந்தே தொடர்ந்தும் தன் படிப்பைப் படித்துக் கொண்டிருந்தான்.

ஒரு முறை திருச்சிற்றம்பலத்திடம் முல்லைத் தீவுக்கு விநாயகமூர்த்தி வந்தபோது சண்முகலிங்கம் அவனோடு கதைத்திருக்கின்றான். தமையனைப் போலவேதான் விநாயகமூர்த்திக்கு மயிரடர்ந்த புருவமும் தடித்த உதடுகளும் நீளமுகமுமாயினும் துறுதுறுத்த கண்கள் அவனைப் பார்த்த பார்வையில் மனதைப் பதிய வைப்பனவாயிருந்தன. விநாயகமூர்த்தியோடு கதைத்த சில நிமிடங்களிலேயே அவன் புத்திகூர்மையுள்ள திறைமைசாலி என்பதனைச் சண்முகலிங்கம் உணர்ந்து கொண்டான்.

விநாயகமூர்த்திக்கு மேற்படிப்புப் படிக்கவேண்டுமென்ற ஆசை மனம் நிறையவே இருந்ததை அவனுடைய தயக்கமான கதைகளிலிருந்து சண்முகலிங்கம் கிரகித்துக் கொண்டானாயினும் அதையிட்டு எவ்விதமான அனுதாப உணர்ச்சியையோ, உற்சாகத்தையோ காண்பிக்கவில்லை. அதற்கு அவன் மனதிற்குள்ளேயே காரணம் இருந்தது. விநாயகமூர்த்தி அங்கு வந்து நின்ற சில நிமிடங்களுக்குள்ளேயே அந்த இன்ரவியூவுக்குப் போனாயா, இந்த வேலைக்கு மனுப்பண்ணினாயா? என்ற கேள்விகளால் திருச்சிற்றம்பலம் அவனைத் துளைத் தெடுத்துவிட்டான். தமையன் அறையில் இல்லாதபோது விநாயகமூர்த்தி நடந்து கொண்டவிதம் கதைத்த கதைகள் சீறியெழுந்த பெருமூச்சுகள் ஆகியன தனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் சிறப்பிற்கும் திருச்சிற்றம்பலமும் ஒரு தடை என்ற குறுகுறுப் புணர்ச்சியினை மௌனமாக ஆனால் விசனத்தோடு தெரிவிப்பதனைப் போலிருந்தது.

விநாயகமூர்த்தி அங்கிருந்து போய்விட்ட பிறகு திருச்சிற்றம்பலத்தோடு சண்முகலிங்கம் இலேசாகக் கதையைத் தொடங்கினான்.

“விநாயகமூர்த்தி நன்றாகப் படிக்கக்கூடியவன். அவனை ஒரு மாதிரிக் கஸ்டப்பட்டு மேலுக்குப் படிக்க வைத்தால் என்ன?”

மெலிந்து முகம் வாடியிருந்த திருச்சிற்றம்பலம் முதுகைச் சுரண்டிய இடது கையைக் கன்னத்திற்கு இழுத்து உறிஞ்சிக்கொண்டு சிறிது நேரம் மௌனமாயிருந்தான். தனது தடித்த உதடுகளை நாக்கினால் நனைத்து ஈரப் பசையாக்கினான்.

“உமக்கு என்ன? வெகு இலேசாகச் சொல்லிவிட்டீர். இப்போதே நான் படுங்கஸ்டங்களும் ஏற்றிருக்கும்

சுமைகளும் என்னாலே தாங்கமுடியாதவைகளாக உள்ளன. எத்தனை செலவுகள் இவை எல்லாவற்றையும்விட.....''

திருச்சிற்றம்பலத்தின் உடைந்து உருக்குலைந்த குரல் தளதளத்துக் கலங்கிற்று. சிறிது நேரம் கடலின் கதறலைத் தவிர வேறு ஒலிகளின் குறுக்கீடற்ற சூழலில் அவர்கள் இருவருமிருந்தனர்.

''நான் எப்போதாவது போயா விடுமுறை நாள் விசேட நாள் என்று வீட்டிற்குப் போனதை நீர் கண்டிருக்கின்றீரா? தொண்ணூறு மைல் தூரமுள்ள என் வீட்டை தொள்ளாயிரம் மைல் தூரத்திலேயுள்ள இடமாகக் கருதிக் கொண்டு குடும்ப நினைவொன்றையே ஏக்கமாகச் சுமந்துகொண்டு நான் இங்கு எப்படி வாழ்கிறேன் என்று உமக்குத் தெரியாதா!''

அந்த வார்த்தைகள் சுமந்து வந்த துயரம். சண்முகலிங்கத்தின் மன அந்தரகத்தையே சுண்டி இழுத்தது. சண்முகலிங்கத்திற்குக் கிடைக்கும் லீவுகள் எல்லாவற்றையும் அவன் தன்னுடைய வீட்டிற்குப் போய் நின்று வருவதிலேயே கழித்தான். சண்முகலிங்கம் வீட்டிற்குப் போக முன் அறைத்திறப்பைத் திருச்சிற்றம்பலத்திடம் கொடுக்கும்போது மனதின் துயரை முகத்தில் காட்டாது மறைக்கும் முகபாவத்தோடு அவனிடம் திருச்சிற்றம்பலம் திறப்பைப் பெற்றுக்கொள்வான். வீட்டுக்குப் போவது பற்றிய கதை வந்ததாயின் போய்த்தான் என்ன பிரயோசனம்? என்ற தொனிப்பில் ஏதாவது சொல்லி மனதைப் பிளக்கும் வேதனையையும், சஞ்சலத்தையும் நெஞ்சினுள்ளே அடக்கி அந்தப் பேச்சையே திருச்சிற்றம்பலம் வழி மாற்றித் தடம் புரளவைப்பான். இன்றுதான் திருச்சிற்றம்பலம் தன்னுடைய வீட்டிற்குப் போகாமலிருக்கும் காரணமே சண்முகலிங்கத்திற்கு விளங்கிற்று.

''எப்படித்தான் மிச்சம் பிடிக்க முயற்சித்தாலும் ஒரு பிரயோசனமும் இல்லை. என்னுடைய மனதினை இரும்புக்குண்டுகள் போலப் பிரச்சினைகள் நசித்து அமுக்கிக்கொண்டு இருக்கின்றன. சில வேளைகளில் இந்தத் துன்பங்களுக்கு எல்லாம் அஞ்சி அவற்றை மனத்தில் இருந்து பிய்த்தெறிவதற்காக நான் புத்தகங்களிடம் தஞ்சம் அடைவேன். அவை கூடச் சில வேளைகளில் என்னைத் துயர்த்தில் ஆழ்த்திவிடுகின்றன.

விழிகளைத் தாழ்த்தி யோசித்தபடியிருந்த அவனைச் சண்முகலிங்கம் ஆச்சரியத்தோடு பார்த்தான். அவன் குனிந்தபடியே மெலிந்த குரலில் புத்தகத்திலுள்ள வசனங்களை உணர்ச்சி ததும்ப வாசிப்பவனைப் போலக் கதைத்துக் கொண்டிருந்தான். ஓயாமல் புத்தகத்தைப் படித்துக் கதைப்பதைக் குறைத்துக் கொண்டமையினால் புத்தகத் தமிழே பேச்சுத் தமிழாகி, அவன் பேசுவதே மற்றவர்களுக்கு விசித்திரமாகி விட்டது. அவன் பேசுவதை முதலிற் கேட்பவர் அவன் வேண்டுமென்றே அப்படிக் கதைப்பதாய் நினைத்து விடுவார்கள். அவனோடு பழகிய ஆரம்ப நாட்களில் சண்முகலிங்கமும் அவனைப்பற்றி அப்படித்தான் நினைத்தான். பழகியவர்களுக்கே விளங்குபவனாய் இருந்தான்.

தன்னை மறந்து உணர்ச்சியில் சொல்லிக்கொண்டு போன திருச்சிற்றம்பலம் மௌனமாய் ஏதோ மனதினுள் நினைத்து எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். புன்னகை செய்வதே குற்றமென நினைக்கும் அவனது இறுகிய தடித்த உதடுகளில் இலேசான துயர நடுக்கமிருந்தது.

''தம்பி, இப்போது என்னைப் பாரும் எனக்கு முப்பத்தியாறு வயது. ஆனால் நான் அரைக் கிழவனாகி விட்டேன். தங்கச்சிக்கு இருபத்தியேழு வயது. கிராமப்புறத்தில் இருபது வயதிற்குள்ளாகவே பெண்களுக்குத் திருமணமாகிவிடுவதுண்டு. ஊருக்கு நான் மிகவும் ஆசையோடும் ஆர்வத்தோடும் போனால் ''தங்கச்சிக்கு எப்போது திருமணம் செய்து வைக்கப் போகிறாய், என்ற சொந்தக்காரரின் துளைச்சலைத் தாங்கவே முடியாது.... அன்னலெட்சுமிக்கு எப்படி நான் கலியாணம் செய்து வைக்கப் போகின்றேன்? என்னுடைய கதைதான் முடிந்து போய்விட்டது.... தங்கச்சியென்றாலும்....''

மனதில் சாம்பல்பூத்த துயரம் அந்த மௌன நிலவு காலத்தின் இலேசான ஒளியிலும் அவனையும் மீறி அவன் முகத்தில் பீறிட்டழுததைப் பார்த்துவிட்டுச் சண்முகலிங்கம் ஏதோ சொல்வதற்கு வாய் உன்னியபோது திருச்சிற்றம்பலம் வேட்டித்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சினான். அது துளிர்த்த கண்ணீரைத் துடைத்ததோர் பாசாங்கு என்பதைச் சண்முகலிங்கம் மங்கிய வெளிச்சத்தில் தெளிவுறத் தெரிந்து கொண்டபோதும் அதனைக் காணாதவனேபோலப் பாவனை செய்து எதையாவது சொல்லியாகிலும் திருச்சிற்றம்பலத்தை ஆறுதல்படுத்த நினைத்தான்.

''எந்த நாளிலும் கஸ்டம் இருக்கிறதில்லை. வெய்யிலும் நிழலும் மாறி மாறி வருகிறதுதான். நீங்கள் வீணாய் யோசியாதையுங்கோ.''

சண்முகலிங்கத்தின் சாக்குருவி

வேதாந்தத்தைக் கேட்டுத் திருச்சிற்றம்பலத்தின் இறுகிய உதடுகள் கேலியாக நெளியாதபோதிலும் விரக்தி சிரிக்கும் கண்களினால் அவன் சண்முகலிங்கத்தைப் பார்த்தான்.

“நீர் கந்தோரிலே இருந்து எழுத்து வேலை செய்கிறதைத் தவிர வேறு எதையுமே அறியவில்லை, இன்னும் இருபத்திஐந்து வயதிலேயே நானும் இப்படித்தான் வாழ்க்கைக்கு உதவாத பழமொழிகளையும் வெற்றுரை களையும் கூறிக்கொண்டு திரிந்தேன். ஆனால் வாழ்க்கையில் நாங்கள் நேர் நேராக நின்று அனுபவம் பெறுகிறபோது தான் உண்மை நிலைமை தெரியும். வெய்யிலிற்குள் தான் நிற்கின்றேன். இனி எப்போது தான் நிழல் வரும்? நான் இப்போதே அரைக்கிழவன்.... இனி என்னை எவள்தான் கலியாணம் முடிக்கச் சம்மதிப்பாள்?”

திருச்சிற்றம்பலத்தின் மன அவஸ்தைக்கான மூலக்குரல் அவனையறியாமலே வெளியில் ஓசையிட்டது.

“உண்மைதான். இதோ காய்ந்து கருகி விரக்தியே ஒலியாய் உருவாய் நிற்கும் திருச்சிற்றம்பலத்துக்கு இனி நிழல்தான் இருக்கின்றதா? திருச்சிற்றம்பலம் மட்டுமா... அவன் தங்கச்சி அன்னலெட்சுமி... இதுபோல இன்னும் எத்தனை பேர்? இவர்கள் ஓயாத விசாரம் என்ற பாலைவனத்தில் நடந்தலைந்து விரக்தி என்ற மண் மழையினால் மூடுண்டு மடிவதற்கா பிறந்தனர்? சண்முகலிங்கத்தின் மன அரங்கிலே கேள்வியலைகள் உருண்டு எழுந்தன.

கடல், வயிறு கிழிந்து ஓலமிட்டது.

திருச்சிற்றம்பலம் வேலை செய்யும் ‘சரஸ்வதி புத்தகநிலையம்’ அப்படியொன்றும் பெரிய கடையல்ல. பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூட உபகரணங்களோடு வார, மாத இதழ்களும் கதைப் புத்தகங்களும் அங்கு விற்கப்பட்டன. அநேகமாக வியாபாரம் மந்தமாகவே இருக்கும். பொழுதைப் போக்குவதற்காகத் திருச்சிற்றம் பலம் மும்மரமாகப் புத்தகங்கள் வாசிப்பதுண்டு. மனதை எங்கோ பறக்கவிட்டு உணர்வின் எல்லைகளை மீறிப் புதிய உலகினைப் புத்தகங்களிற்கூடாகத் தரிசனம் செய்துகொண்டிருக்கையில் இடையில் மனம் திடீரென்று திசைமாறி விழிப்புறும்போது சுவாரஸ்யம் துக்கமென்னும் கத்தியால் அதலகுதலமாக வெட்டப்பட்டுவிடும். ஏனென்றால் காதல் நாவல்களினை வாசித்துக் கொண் டிருக்கும்போது கதாநாயகன் என்ன சொகுசாய் கம்பீரமாய் வருகின்றான். அவனைத் தேடிக்காதல் ததும்பும் இதயத்தோடு கடற்கரைக்கு அழகுசுந்தரி வருகின்றாள். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் மோகந்ததும்ப மெய்மறந்து பார்த்திருக்கின்றார்கள். அவள்தான் என்ன லாவண்யமாக வெட்கப்படுகிறாள். திருச்சிற்றம்பலத்தின் உணர்வுகள் தகிக்கின்றன அவனுடைய அணைப்பினுள்ளே அந்தக் கதாநாயகி அவளின் கைகளையே தன் கழுத்திற்கு மாலையாக்கி அவள் கைகளை எடுத்துத் தன்தோள்களில் அவன் ஆசையோடு படரவிடுகின்றான். பாதி மூடிய கண்களோடு தோளில் சாயும் அவளின் கன்னத்தோடு முகம் உராயும் கதாநாயகனின் மூச்சு மட்டுமா தகிக்கின்றது. இதோ திருச்சிற்றம்பலத்தின் மூச்சுந்தான் கொதிக்கின்றது.

சட்டென்று திருச்சிற்றம்பலத்தின் மானசீகக் கனவு கலைந்துவிடும். முன் வழுக்கை விழுந்த தலையைத் தடவியபடியே வெறுப்போடு புத்தகத்தை அடித்து மூடி மேசையில் போட்டுக்கொண்டு தன்னைத்தானே அருவருத்துத் திட்டுவான்.

“சீ மண்ணாங்கட்டிக் கனவுகள்! அரைக்கிழவன். அதற்குள் அவருக்குக் கண்டறியாத காதல் நினைவு கள்....”

அந்த வேளையில் சுகத்தோடும் சொகுசோடும் உலகில் வாழ்பவர்கள் அவனுக்கு எதிரியாகிவிடுவார்கள். தன் நிலைமைக்கு அவர்களே காரணஸ்தர் என்ற முடிவின் ஆவேசத்தோடு அவர்கள் முழுப்பேரினதையும் கழுத் தைத் திருகிக் கொல்ல அவனது மனம் ஆவேசங்கொண்டு குமுறும். புருவங்கள் சுழியிட்டு வாய் முணுமுணுக்கும். கடைசியில் இப்படியொரு நாள் மன வெதும்பலில் இருக்கும்போதிலே யாரோ ஒருவன் ‘அண்ணை’ என்று திருச்சிற்றம்பலத்தைக் கூப்பிட்டமைக்காக அவனை அடிப்பதற்குத் திருச்சிற்றம்பலம் வரிந்து கட்டிக்கொண்டு போய்விட்டான்.

“என்னடா, உனக்கு இப்போது வயதென்ன? கலியா ணமாகி மூன்று பிள்ளைகள் உனக்கு. என்னை நீ அண்ணையென்று சொல்லிக் கேலியா செய்கிறாய்? மடையா என்னை அரைக்கிழவன் என்று நினைத்தா கேலி செய்கிறாய்?” வந்தவன் நடுங்கிவிட்டான். தலைதப்பினால் போதும் என்ற யோசனையில் அங்கிருந்து நழுவி மறைந்தான்.

சரஸ்வதி புத்தக நிலையத்திற்கு வருபவர்களில் திருச்சிற்றம்பலத்திற்கு மிகவும் பிடித்தமானவன் இரத்தினசிங்கம். மலர்ந்த முகத்தோடு விளங்கும் அவன் அனாவசியமாக எதையும் கதைக்கமாட்டான்.

அவனும் ஒரு கடைச் சிப்பந்தி அத்தோடு அங்குள்ள ‘கடைச்சிப்பந்திகள் சங்கத்தில்’ செயலாளராகவும் இருந்தான்.

ஏதாவது கதைத்துக்கொண்டிருந்தாலும் அதன் முடிவில் இரத்தினசிங்கம் ஒரு விசயத்தைச் சொல்லத் தவற மாட்டான்.

“மனிதனை மனிதன் சுரண்டிக் கொழுக்கும் உலகிலே நாங்கள் வாழுகின்றோம். வாழ்க்கையின் பண்பற்ற தன்மையையும் அரக்கத்தனமான கொடுமைகளையும் நாம் சகித்துக்கொண்டு வாழ அதுவே விதியென்று வாழக்கூடாது. விதிகளின் அடிமை அல்ல மனிதன். தனியாக நிற்பதன் மூலம் எங்கள் கஸ்டத்தை முறியடிக்க முடியாது. உம்மையும் என்னையும் போன்ற உதிரத் தொழிலாளிகள் விவசாய தொழிலாளி வர்க்கத்தோடு ஒன்றிணைந்து போராடுவதின் மூலமே விமோசனங் காண முடியும்......”

இரத்தினசிங்கம், சண்முகலிங்கத்திற்கும் நண்பனாக இருந்ததால் சிற்றம்பலத்தோடு இரத்தினசிங்கத்தின் நட்பு மேலும் இறுகிற்று. திருச்சிற்றம்பலத்தின் மனப் பலவீனங்களை இரத்தினசிங்கம் மிக அனுதாபத்தோடு கவனித்துப் பதில் சொல்வான். சண்முகலிங்கத்தோடு கதைப்பதற்கும் இரத்தினசிங்கத்தோடு பழகுவதற்கு மிடையே பல வேற்றுமைகளிருப்பதைத் திருச்சிற்றம்பலம் அவதானித்திருந்தான். இரத்தினசிங்கம் திருச்சிற்றம்ப லத்தின் சுகதுக்கம், குடும்ப விவகாரம் ஆகியவை பற்றி வெகு அக்கறையாக விசாரிப்பான். அவனுடைய கதைகளில் ஒளிவுமறைவிருப்பது இல்லை. சண்மு கலிங்கம் தன்னைப்பற்றி விசாரிக்கும் போது ஏதோ ஒரு திரையைத் தனக்கு முன்னர் விரித்துக் கதைப்பது போலவும் சில விடயங்களை மூடிக் கதைப்பது போலவும் தோன்றும் தானும் இரத்தினசிங்கமும் கடைச்சிப்பந்திகளாகவும் சண்முகலிங்கம் அரசாங்க எழுதுவினைஞனாகவும் இருப்பதே அதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் திருச்சிற்றம்பலம் மனதினுள்ளே நினைத்துக் கொண்டான்.

இரத்தினசிங்கம் தன்னிடமுள்ள பல புத்தகங்களைப் படிக்கும்படி திருச்சிற்றம்பலத்திடம் கொடுத்திருக்கின்றான். இதுவரையும் காதல் நவீனங்களையும் துப்பறியும் நாவல்களையுமே ரசித்து வந்த அவனுக்கு இரத்தின சிங்கம் கொடுத்த புத்தகங்களை வாசிப்பது ஆரம்பத்தில் சற்று சிரமமாகவே இருந்தது. ஒருநாள் இரத்தினசிங்கம் ‘தாய்’ என்ற புத்தகத்தைக் கொண்டுவந்து அவனிடம் வாசிக்கும் படி கொடுத்தான். திருச்சிற்றம்பலத்திற்கு முதலில் அதனை வாசிக்க விருப்பமில்லாதபோதும் நடுவிலிருந்து சில பக்கங்களைத் தட்டி வாசித்தான். படித்த பக்கங்கள் பிடித்துக் கொண்டமையால் ஆவலோடு முதலிலிருந்து வாசிக்கத் தொடங்கினான். சுவாரஸ்யத்தோடு புதிய சிந்தினைகளும் அவனது நெஞ்சிலே தோன்றிற்று. அன்று மாலை இரத்தினசிங்கம் ‘வீரம் விளைந்தது’ என்ற இன்னோர் புத்தகத்தைக் கொண்டு வந்து திருச்சிற்றம்பலத்திடம் கொடுத்த போது தலையங்கத்தை ஊடுருவியபடி கேட்டான். “என்னைப் போன்றவர்கள் இந்த வீரக்கதைகளைப் படித்து என்ன செய்ய முடியும்? நானென்ன வீரனா, வெறும் ஏழை மனிதன்.”

சண்முகலிங்கம் போல மௌனமாகவிராது, இரத்தி னசிங்கம் கடகடவென்று சிரித்தான்.

“பணக்காரனும் ஆளணி உள்ளவனுமல்ல வீரன். சோதனைக் கட்டத்தில் மனித சமுதாயத்தின் நன்மைக் காகத் தன்னால் முடிந்ததை எல்லாம் செய்கிறவன்தான் வீரன். நீங்கள் உங்களைப் பற்றி ஒருநாளும் குறைவாக நினைக்கக்கூடாது. எதிலும் தனித்து ஒதுங்கிப் போகக் கூடாது. துன்பப்படுகிறவர்கள் தனித்து நிற்கவில்லை என்பதனை நீங்கள் உணர வேண்டும்.

இரத்தினசிங்கம் அனேகமாக தொழிலாளர் போராட் டங்கள், தொழிற்சங்க இயக்கங்கள், சர்வதேச அரசியல் நிலைமை பற்றித் தெரிவிக்கும் பத்திரிகைகளைக் கடைக்குக் கொண்டு வருவது வழக்கம். ஒரு நாள் கதையோடு கதையாகத் தொழிற்சங்க இயக்கங்கள் பற்றிக் கூறிவிட்டுத் திருச்சிற்றம்பலத்தையும் தங்கள் தொழிற்சங்கத்தில் சேரும்படி இரத்தினசிங்கம் கேட்டான். அப்போது திருச்சிற்றம்பலம் ஏதோ கூறி மழுப்பிவிட்டான்.

சண்முகலிங்கம் திருச்சிற்றம்பலத்தோடு அரசியல் பேசியதில்லை. “நமக்கென்ன, அரசியலில் பங்குபற் றினால் வேலைக்கு ஆபத்து, பேசாமலிருப்போம்” என்று கூறினாலும் இரத்தினசிங்கத்தோடு அரசியல் இயக்கங்கள் பற்றிக் கதைத்துக் கொள்வதுண்டு.

வெளியே வானத்தையே பார்த்துக்கொண்டு சிந்த னையில் ஆழ்ந்திருந்த சண்முகலிங்கம் மீண்டும் அறைக்குள் வந்தான். அவனுடைய மனம் மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. அறைக்குள் இருள் மண்டியிருந்தது. கதவை அடுத்திருந்த சுவரிலுள்ள மின்சாரச் சுவிச்சைத் தட்டினான். அறையெங்கும் ஒளி வெள்ளம் பாய்ந்தது. உரத்த அடக்கமுடியாத சிரிப்பி

னையே கேட்டறியாத திருச்சிற்றம்பலம் வாழ்ந்த அறையின் மேற்கு மூலைச் சுவரிலே விநாயகர் படமும் அவனது குடும்பப் படமும் மாட்டப்பட்டிருந்தன. படங்களின் கீழருகாக மண்ணெண்ணைக் குக்கர் வைக்கப்பட்டிருந்தது. அவனது தட்டு முட்டுச் சாமான் களும் புத்தகங்களுமடங்கிய பெட்டிகளின் மேல் அவன் படுக்கும் பாயும் தலையணையும் ஒழுங்காகக் கிடந்தன. அவனுடைய உடுப்புகள் அடங்கிய சூட்கேஸ் தனியாக ஒரு மூலையில் சாத்தப்பட்டிருந்தது.

சண்முகலிங்கம் நிறம் மங்கிய அந்தக் குடும்பப் படத்தையே கூர்ந்து கவனித்தான். அந்தப் படத் தினுள்ளிருந்து திருச்சிற்றம்பலத்தின் தாயும், அன்னலெட்சுமியும், விநாயகமூர்த்தியும் தன்னையே உறுத்துப் பார்த்து 'எங்கே திருச்சிற்றம்பலம்? எங்கே என் மகன்? எங்கே எங்கள் அண்ணா?' என்று கூவுவது போல இருந்தது. திருச்சிற்றம்பலத்தின் மறைவுக்கு அவன்தான் பதில் சொல்ல வேண்டும். தன் பொருட்களை தன் குடும்பத்திடம் ஒப்படைக்கும்படி உருக்கத்தோடு எழுதி வைத்துவிட்டு மாங்குளம் போன பஸ்ஸிலே திருச்சிற்றம்பலம் ஏறிப் போய் விட்டான். அங்கே நீண்டு ஓடும் புகையிரதத் தண்டவாளங்களை மிதித்து வரும் ராட்சதப் புகையிரதத்தின் சக்கரங்களைத் தன் உடல் மீதேற வைத்து மரணமடையவா அவன் போனான்?

மாலையில் இரத்தினசிங்கத்தைத் தேடிப் பார்த்தபோது அவன் எங்கோ வெளியே போனதாகத் தெரியவந்தது. திருச்சிற்றம்பலம் தன் குடும்பத்தின் சுமைதாங்கி தானேதான் என்று எத்தனையோ தரம் பெருமையடித்துக் கொண்டான். அவற்றையெல்லாம் பொய்யாக்கி விட்டு எங்கோ போனதின் மூலம் தன்னைப் பிறர் துருவித் துருவி ஆராயும் நிலைக்கு ஆளாக்கி விட்டானே என்று நினைத்த போது கசப்புணர்ச்சியும் ஆத்திரமும் சண்முகலிங்கத்தின் மனதினுள்ளே வெடித்துச் சீறின.

'திருச்சிற்றம்பலம் என்னை ஒரு பழிகாரனாக்கிவிட்டு எங்கே நீ போய்விட்டாய்?' எனக்கு இப்படியொரு நிலைமையை ஏற்படுத்தித் தருவதற்குத்தானா உன்னை என்னுடைய அறைக்கு நான்கொண்டு வந்து சேர்த்தேன்?

சண்முகலிங்கத்தின் அறையில் திருச்சிற்றம்பலமும் இரத்தினசிங்கமும் சுவாரஸ்யமாக சண்முகலிங்கத்தோடு கதைத்துக் கொண்டிருந்தபோது மேற்குமூலைச் சுவரில் இருந்த விநாயகர் படத்தையே பார்த்தவண்ணமிருந்த இரத்தினசிங்கம் புன்னகை ததும்பும் முகத்தோடு கேட்டான்.

"என்ன திருச்சிற்றம்பலம், விநாயகர் படத்தை மட்டுந் தான் வைத்து வணங்குகிறீர்? விநாயகர்தான் உமது இஸ்ட தெய்வமா?"

இடது கையினால் பின் முதுகைச் சுரண்டிக் கொண்டி ருந்த திருச்சிற்றம்பலம் தலையைச் சற்று வளைத்துச் சுவரிலிருந்த விநாயகர் படத்தைச் சிலகணங்கள் பார்த்துவிட்டு உரத்த குரலைத் தணித்தபடி சொன்னான்.

"உண்மைதான் விநாயகர்தான் என் இஸ்ட தெய்வம் ஏனென்றால் விநாயகரும் நானும் ஒரே மாதிரித்தான் விநாயகருக்குத் திருமணமே ஆகவில்லை. எனக்கும் அப்படித்தான். விநாயகர் பருத்த உடலுடையவர். ஆனால் சிறிய எலியே அவருக்கு வாகனம். அந்தச் சிறிய எலிதான் பருத்த உடலைச் சுமக்கின்றது. அதுபோலவே வாழ்க்கையில் கனமான சுமைகளை நானும் சுமக்கின்றேன்.

அவன் விரக்தியோடு சொன்னதைக் கேட்ட சண்முக லிங்கம் கடகடவென்று சிரித்தான். ஏறு நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே திருச்சிற்றம்பலம் மௌனமாயிருந்தான்.

இரத்தினசிங்கம் சிலகணங்கள் பேசாதிருந்தான். பிறகு தன் கையிலிருந்த புத்தகத்தின் பக்கமொன்றைப் பிரித்தபடியே திருச்சிற்றம்பலத்தைப் பார்த்தான்.

"எதிலும் விரக்தி கொள்ள வேண்டாம். உன்னைப் போலத்தான் உலகிலேயே பலகோடி மக்கள் நசுக்கப்படுகின்றார்கள். தனித்திருக்கவில்லை நீங்கள். உங்களைப்போன்ற மக்களின் இயக்கத்தோடு பிணைத் துக்கொள்ளுங்கள்."

குறி பார்த்துப் பாயும் துப்பாக்கிக் குண்டுகள்போலச் சீறின அவன் வார்த்தைகள். "இந்தப் பக்கத்தை ஒருமுறை படியும்" இடது கையினால் முதுகைச் சுரண்டி விட்டு அவனுடைய கையிலிருந்த புத்தகத்தை வாங்கி வாசித்தான் திருச்சிற்றமபலம். ஒன்றை நீங்கள் உணர வேண்டும். என்னைப் போன்றவர்கள் அந்தக் காலத்தில் தனியாட்களாக இருந்தோம். சமுதாயத்தின் மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாக இருந்தோம். நீங்களோ இப்போது லட்சக்கணக்கில் இருக்கின்றீர்கள். தனது பலத்தை உணர்ந்து வைத்துள்ள ஒரு தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். உங்களை நசுக்குகின்ற கொடுமைகளையெல்லாம் துகள் துகளாக அழித்தொழித்துப் பிரகாசமான வாழ்வைக் கட்டியெழுப்ப ஒன்று சேருங்கள்! உலகம் உங்களுக்கேயுரியது.

திருச்சிற்றம்பலம் அதைப்படித்துவிட்டு ஒன்றுமே பேசாது சண்முகலிங்கத்தையும் இரத்தினசிங்கத்தையும் பரிதாபத்தோடு பார்த்தபடி எழுந்து அறை மூலைக்குப் போனான்.

அன்றைக்கு அவன் எழுந்து போன அதே மூலை இன்று வெறுமையாகிக் கிடப்பதனைப் பார்த்த சண்முகலிங்கம் பெருமூச்சொன்றை உதிர்த்தான். அப் போது இரவு மூன்று மணி ஆகியிருக்கும். மனம் படபடப்பால் உறக்கம் வராதபோதும் அவனுக்குக் கண்கள் அரைகுறையாக மூடிக்கொண்டு கெஞ்சின. அறையில் நிறைந்த வெளிச்சம்தான். அவனுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. வெளிச்சம் உமிழும் மின் விளக்கையே பார்த்தபடி இருந்தான். திடீரென்று யாரோ அவனை மாங்குளத்திற்கும் அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள். மாங்குளத்திற்கும் முல்லைத் தீவிற்குமிடையே இடைத்தூரம் முப்பது மைல்கள்தான். ஆனால் அந்த வேகமும் எவ்வளவு சீக்கிரத்தில் அந்தக் காரினால் கடக்கப்பட்டுவிட்டது. மாங்குளம் புகையிரத நிலையத்தில் சண்முகலிங்கம் இறங்கியதுதான் தாமதம் திருச்சிற்றம்பலத்தின் தாயும், அன்னலெட்சுமியும், விநாயகமூர்த்தியும் ஓவென்று அலறினார்கள். ‘அண்ண ணைக் கொன்றுவிட்டாயே என் செல்லத்தைக் கொன்று விட்டாயே’ என்ற அழுகையின் பிரலாபம் எங்கும் விம்மியது. சண்முகலிங்கம் ஒன்றுமே பேச வில்லை. புகையிரதத் தண்டவாளங்களைப் பார்த்தான். என்ன நேரம்! புகையிரதச் சக்கரங்கள் திருச்சிற்றம் பலத்தின் உடலைத் துவைத்து நசுக்கியிருந்தன. கழுத்துத் துண்டிக்கப்பட்ட முண்டத்தின் கைகால்கள் சதை சிதறித் தண்டவாளத்தில் அரைந்து இரத்தமும் எலும்புத்துண்டுகளுமாய் விசிறிக் கிடந்தன. திருச்சிற்றம்ப லத்தின் தலைமட்டும் உருக்குலையாமல் இரத்தம் தோய்ந்து தொங்கும் கழுத்துச் சதையோடு கற்களிடைய தனித்துக்கிடந்தது. சண்முகலிங்கத்தின் இதயம் அடைத்தது. அடக்க முடியாத வேதனையோடு நெஞ் சைப் பொத்திக்கொண்டான். அதற்குமேலே தாங்க முடியாத திகிலோடு வியர்வை பொங்கும் உடலோடு சண்முகலிங்கம் துள்ளியெழுந்தான். என்ன கோரக்கனவு! தான் கண்டது கனவென்றறிந்த நிம்மதியிலே முக வியர்வையைத் துடைத்துக் கொண்டு சண்முகலிங்கம் எழுந்த போது கதவை வெளியே யாரோ படபடவென்று தட்டினார்கள். கதவைத் திறந்த சண்முகலிங்கம் திகைத்துப்போய் நின்றுவிட்டான்!

அவன் முன்னே திருச்சிற்றம்பலம் இரத்தினசிங்கத்தோடு நின்றான்.சண்முகலிங்கத்தின் திகைப்புக் கலந்த மௌனத்தைத் திருச்சிற்றம்பலமே கலைத்தான்.

“என்ன பேசாமலே நிற்கிறீர்?”

திகைப்புக் குலையவில்லை சண்முகலிங்கத்திற்கு. “என்ன நீர்.... நீர்..... எங்கே போய்..... எப்படி?

“பயப்படவேண்டாம். நான் தான் திருச்சிற்றம்பலம் உயிரோடு திரும்பி வந்துவிட்டேன்.”

தான் மாங்குளத்திற்கு பஸ்ஸில் ஏறியதைச் சொல்லி விட்டுத் திருச்சிற்றம்பலம் தொடர்ந்தான்.

“உண்மையாகவே இன்று தற்கொலை செய்து கொள்வதற்காகத்தான் நான் இங்கிருந்து மாங்குளத்திற்க பஸ்ஸிலே சென்றேன். என் தற்கொலை முயற்சிக்கு என்ன காரணம் தெரியுமா...? அது ஒரு சுயநலத்தின் தோல்வியினால் ஏற்பட்டது. இதற்காக நான் வெட்கப்ப டுகின்றேன். இன்று பகல் எனக்கு ஒரு கடிதம் வந்தது. விநாயகமூர்த்தியைப் பற்றியது அக்கடிதம். எனது தங்கச்சி எழுதியிருந்தாள். எனது தம்பி விநாயகமூர்த்தி யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு எங்கோ போய்விட்டானாம். இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் என் வாழ்க்கையின் கனவே சரிந்துவிட்டதாய் நான் உணர்ந்தேன். என்னுடைய குடும்பச் சுமையை நானே இதுவரை சுமந்திருந்தேன். விநாயகமூர்த்தியை ஏதாவது ஒரு வேலையில் சேர்ப்பது அவன் உழைப்பையும் சேர்த்துதான் என் தங்கச்சிக்குத் திருமணம் செய்து வைப்பது...(தயக்கக் குரலில்) பிறகு என் வாழ்விற்கும் ஒருத்தியைத் தேடிக்கொள்வது இதுதான் என் நீண்ட நாள் திட்டமாக இருந்தது. இதனால் தான் விநாயக மூர்த்தியை மேலே படிக்கவிடாமல் ஏதாவது தொழி லுக்குப் போகும்படி வற்புறுத்திக்கொண்டிருப்பேன். ஆனால் நேற்றுக் காலையில் வந்த கடிதம் என் கற்பனைகளையே தகர்த்தது. விநாயகமூர்த்தி வீட்டை விட்டுப் போனால் நான்தான் வாழ்நாள் பூராவும் குடும்பச் சுமையைச் சுமக்க வேண்டும். தங்கச்சிக்குத் திருமணம் செய்து முடித்தபின் அம்மாவைப் பார்ப்ப தற்குத் தொடர்ந்து உழைக்க வேண்டும் நானும் மற்றவர்கள் போல திருமணம் செய்து குழந்தை குட்டிகளோடு வாழும் வாழ்வு எனக்குக் கிடையாத ஒன்றாகிவிடுமோ என நினைத்தபோது எனக்கு வாழ்வே வெறுத்தது.... நிம்மதியற்ற தொடர் வாழ்வைவிடத் தற்கொலை நல்லது என்ற முடிவிற்கு வந்தேன். தற்கொலை செய்யும் முடிவோடு மாங்குளம் செல்லும் பஸ்ஸில் ஏறி இருந்து கொண்டே என் நெஞ்சில் உள்ளவர்கள் ஒவ்வொருவரையும் மறக்க முயற்சித்துக்

கொண்டிருந்தேன். எல்லோரையும் மறக்க முடியுமென்று தோன்றிற்று. இவரது நினைவோ (இரத்தினசிங்கத்தைச் சுட்டிக்காட்டி) அகற்ற முடியாத ஒன்றாகிவிட்டது. பஸ்ஸில் போகும்போது இருபுறமும் பார்த்துக் கொண்டிருந்தேன். வயலில் நிறைய விவசாயிகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பற்றியும் இரத்தினசிங்கம் சொன்னது என் நினைவிற்கு வந்தது. இந்த உலகம் உழைக்கின்ற எங்களுக்கே, என்று நான் பல முறை கூட்டங்களில் தொழிலாளிகள் கூறக் கேட்டிருக்கின்றேன். பிறகு நான் கோழைபோலப் புகையிரதத்தின் முன் விழுந்து சாவதா என நினைத்துக் கொண்டேன். ஆனால் என் மறுமனம் தற்கொலைக்கே தூண்டியது. இரவில் பதுங்கிப் பதுங்கித் தண்ட வாளத்திலிருந்து புகையிரதம் வருவதைக் காத்திருந்தேன். இருளின் நடுவே தொலைவில் ஒளியொன்று துலங்கி ஜொலித்தது. என் நெஞ்சில் பல எண்ணங்கள் புரண்டன. இரத்தினசிங்கத்தின் குரல் மாறி மாறிக்கேட்டது. நான் தனியாளில்லை. துணையுள்ளவன். இத்துணையோடு இலட்சக்கணக்கானவர்களின் பலத்தோடு புத்துலகை ஆக்கி மகிழ்வாய் வாழ முடியும் என்ற எண்ணம் என் நெஞ்சில் இருளிடையே ஒளியெனத் தோன்றிற்று.... நான் ஆழச் சிந்தித்தேன். தொலைவில் புகையிரதம் கூவியது. உறுதியான முடிவுடன் என் தற்கொலை முயற்சியைத் தூக்கியெறிந்துவிட்டு புதிய மனிதனாய்த் திரும்பிவிட்டேன்''

திருச்சிற்றம்பலத்தின் முகத்திலே புதிய ஒளி துலங்கிற்று. இலேசான புன்முறுவல் முகத்தை மலர்த்திற்று.

## தகவல் 1 ( மனித மூளை)



மனித இனங்களுக்கிடையே பல வேறுபாடுகள் இருப்பினும் பல பொதுவான பண்புநலன்களும் இருக்கின்றன. பிற விலங்குகளோடு ஒப்பிடுகையில் மனிதர்களுடைய மூளைகள் அசாதாரணமான அளவில் மிகப் பெரிதாக இருக்கின்றன. இது எளிதில் கவனிக்கத்தக்க ஓர் அம்சமாகும். அறுபது கிலோ எடை கொண்ட பாலூட்டிகளின் சராசரி மூளை அளவு 200 கியூபிக் சென்ரிமீற்றராக இருந்தது. 25 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த துவக்ககால மனிதர்களின் மூளை 600 கியூபிக் சென்ரிமீற்றர் அளவு கொண்டவையாக இருந்தன. நவீன சேப்பியன்ஸ் மனிதர்களின் மூளை அளவு 1200 - 1400 கியூபிக் சென்ரிமீற்றராகும்.

பரிணாமவளர்ச்சி பெரிய மூளைகளைத் தேர்ந்தெடுத்தது என்பது நம்மைப் பொறுத்தவரை ஓர் இயல்பான விடயமாகும். நாம் நம்முடைய அறிவுத் திறன் குறித்து ஒரு பெரும் மயக்கத்தில் இருப்பதால் மூளைத்திறன் என வரும்போது அதிகமானதுதான் சிறப்பானது என்று நாம் அனுமானிக்கிறோம். ஆனால் இது உண்மையாக இருந்தால் பூனைக் குடும்பம் கால்குலஸ் போடத் தெரிந்த புலிகளையும் சிறுத்தைகளையும் உருவாக் கியிருக்கும். தவளைகள் தங்களின் சொந்த விண்வெளி ஆராய்ச்சி திட்டத்தைத் துவக்கி இருக்கும். விலங்கின் வகைகளில் பெரிய மூளைகள் ஏன் அரிதாகக் கிடைக்கின்றன?

ஒரு பெரிய மூளையிருந்தால் அது அந்த உடலுக்கு ஒரு பெரிய சுமையாக இருக்கும் என்பதுதான் உண்மை. ஒரு கனமான மூளையை குறிப்பாக ஒரு பெரிய மண்டையோட்டுக்குள் உறைந்துள்ள ஒன்றை போகும் இடமெல்லாம் சுமந்து செல்வது கடினமாக இருந்திருக்கும். அதற்குத் தீனி போடுவது அவ்வளவு இலகுவல்ல. ஹோமோ சேப்பியன்ஸ் இனத்தில் உடலின் மொத்த இடையில் 2-3 வீதமே இருக்கின்ற மூளை உடல் ஓய்வாக இருக்கும்போது உடலின் ஆற்றலில் 25 சதவீதத்தை எடுத்துக் கொள்கிறது. இதனோடு ஒப்பிடுகையில் மற்ற மனிதக் குரங்குகளின் மூளைகளுக்கு வெறும் 8 சதவீத ஆற்றலே தேவைப்படுகிறது. பண்டைய மனிதர்கள் தங்களுடைய பெரிய மூளைகளுக்கு இரண்டு வழிகளில் அதற்கான விலையைக் கொடுத்தனர். முதலில் உணவைத் தேடி அலைவதில் அதிக நேரத்தைச் செலவிட்டனர். இரண்டாவது அவர்களுடைய தசைகள் நலிவுற்றன. அரசாங்கம் தன் நாட்டிற்கு பாதுகாப்பிற்குச் செலவு செய்யவேண்டிய பணத்தைக் கல்விக்குத் திசை திருப்பினால் எப்படி இருக்குமோ மனிதர்கள் தங்களுடைய ஆற்றலைத் தசைகளிலிருந்து நரம்பணுக்களுக்குத் திசை திருப்பியது அப்படித்தானிருந்தது. ஒரு ஹோமோ சேப்பியன்சுடன் ஒரு வாதத்தில் வெல்ல முடியாது ஆனால் அந்த மனிதக் குரங்கால் அவனை நார்நாராகக் கிழித்து விடமுடியும்.

நன்றி: சேப்பியன்ஸ்



# ஒரு நேரம் ஒரு குவளை

**ஃபைசல் அகமது**



“நாக்குத்தானே இதுக்கெல்லாம் காரணம் இந்தாடி கத்தி நாக்க வெட்டி எறி ” கத்தியைக் கொடுத்து நாக்கை வெட்டச் சொல்லும்போது பார்த்துக் கொண்டிருந்த சக்கியாவின் மகள் சட்டெனப் பாய்ந்து கத்தியைப் பறித்து வெளியே தொங்கிக் கொண்டிருந்த நாக்கை ஒரே வெட்டில் துண்டாக்கியதும் அந்த நாய் பொம்மை அழ ஆரம்பித்ததுபோல் முகம் சுருங்கிற்று. கீழே நாயின் நாக்கு விழுந்ததா? இல்லை. அங்கு ஒரு கரப்பான் பூச்சிதான் ஓடியது.

அவள் தன் நாய் பொம்மைக்கு தேநீர் கொடுப்பது வழக்கம். எப்போது பார்த்தாலும் நாயின் வாயுக்குள் தேநீரை ஊற்றி விளையாடுவதையே வேலையாக்கி வைத்திருந்தாள்.

“இந்தாடி நாய்த் தேநீர்” என்றாள் சக்கியா. மகளுக்கு புது வீட்டில் காச்சிய பால் போன்று சந்தோசம் பொங்கிற்று.

காட்டில் எந்த விலங்கு ராஜா? அதுபோல் அவள் வீட்டுப் பண்டம் பாத்திரங்களுக்கு ராஜாவாக இருந்தது அந்தக் குவளை. மான் தோலின் மென்மையுடன் இருக்கும் அதன் வெளிப்புறம். தூர நின்று பார்த்தால் அதன் உதடு அசைவது போலிருக்கும். அது மிகவும் அழகாக இருக்கும். அது ஒரு ராஜ வம்சத்து வீட்டில் இருந்திருக்க வேண்டும். அல்லது ஒரு சிறந்த மந்திரவாதி வைத்திருந்திருக்க வேண்டும். சீன தேசத்து வல்லுனர் கை வண்ணம் போலவும் இருந்தது. இதன் பெறுமதி தெரிந்திருந்தால் அதில் நாய்த் தேநீரைக் கேட்டுப் பிடிவாதமாக இருப்பாளா மகள்.

“இவளொருத்தி அந்திக்கும் சந்திக்கும் தேநீர்தான் கேப்பாள்” என்று எரிந்துகொண்டே அங்குட்டு நடந்தாள் சக்கியா.

குசினிப் பக்கமாகப் போய் அந்தக் குவளையுள் அவளுக்கு மாத்திரம் கொஞ்சம் தேநீரை ஊற்றிப் பருகினாள். பருகும்போது நாய் பொம்மை அழுவதை நிறுத்தியதுபோல் அவளை உற்றுப் பார்த்தது. நாக்கு இருந்திருந்தால் பேசியிருப்பேன் நியாயத்தைக் கேட்டிருப்பேன். என்பதுபோல் அந்த நாயின் கண்கள் இருந்தன.

“டிடிங்.....டிடிங்...” பெல் சத்தம்.

சக்கியாவும் மகளும் போய்க் கதவைத் திறந்தார்கள். எதிர் பார்த்தபடி அங்கு யாருமில்லை. மாறாக இன்னொரு அறை எதிரே தென்பட்டதுபோல் இருந்தது. அதன் கதவைத் திறந்தாள். அது அந்த அறையின் ஜன்னல் கதவு. அவள் அதிர்ச்சியடையவில்லை. அப்போது வீசியது ஒரு கூதல் காற்று. அது இருவர் உடலையும் தள்ளிவிட்டு வீட்டுக்குள் நூழைந்து சென்று குவளையுள் இருந்த மீதித் தேநீரைப் பருகத் தொடங் கியது.

''..ஆ... காத்து நல்லாக் குளிருது எங்கேயோ நல்ல மழ பெய்யுது உம்மோ'' என்றாள் மகள். சக்கியாவின் உடல் உரோமங்கள் எழுந்து நின்றன யாருக்கோ மரியாதை செய்வதுபோல். பிறகு கொஞ்சம் பலத்தைப் பிரயோகித்த காற்று அவள் மார்பில் கிடந்த சேலையை நோகாமல் எடுத்து குளிரால் நடுங்கிய கதவின் சிறு பகுதியில் போட்டது. அந்த நிமிசம் அவள் காற்றை மட்டும் மார்பில் வாங்கிக்கொண்டாள். சில்லென்று வந்த குளிரோடு சில நிமிடம் போராடினாள். பெருத்த மழைத்துளிகள் அவள் மார்பில் விழுந்து மாயமாகின. ஈரத்தின் வாசனை எங்கும் பரவத் தொடங்கியது. இலேசான தலைச் சுற்றலில் நடுங்கிப் போனவளாய் கீழே தரையில் அமர்ந்துகொண்டாள் சக்கியா.

அந்தக் குவளையில் ஆவி பறக்கும் தேநீருடன் சக்கியாவின் முன்னால் வந்து நின்றான் அலான். "என்னாச்சி சக்கியா ஏன் இப்புடி கீழ கிடக்கிற எழும்பு இதக்குடி" என்றான் பரிவோடு. தேநீரை வாங்கிக் குடித்தவளுக்கு மெல்ல தலைச்சுற்றல் நீங்கியது.

"என் உடல் ஆக்கையத்துப் போச்சு" என்று சொல்லியபடி கதவு நிலையில் முதுகைச் சாய்த்தாள். அவள் கண்கள் அலானின் கூரான மூக்கின் பக்கம் சாய்ந்தன. ஆந்து சோந்துபோன அவள் முகத்தை உற்றுப் பார்த்தான் அலான். "உம்மா என்னாச்சி உம்மா உனக்கு" என்றாள் மகள். மகளின் குரலைக் கேட்டவளுக்கு அந்த மழை நாள் ஞாபகம் வந்தது.

அலான் எப்போதும் சோடா மூடியை பற்களால் தான் திறப்பான். ''உஸ்'' என்ற சத்தத்தோடு சீறி வரும் நுரை அவனுக்குப் பிடிக்கும். சக்கியாவின் முதல் சந்திப்பு ஒரு போத்தல் சோடா உடைத்தலில்தான் ஆரம்பித்தது. அந்த ஒரு நிமிட நுரை பொங்கியது போன்றுதான் அவர்களுக்கிடையில் காதலும் பொங் கிற்று.

அன்றும் நல்ல மழை பெய்தது ஞாபகமிருக்கிறது. அதை மழை என்பதை விட தண்ணீரின் இசை எனலாம். தண்ணீரின் இசை என்பதை விட தண்ணீரின் நடனம் எனலாம். தண்ணீர் என்றும் இளமையுடன் இருப்பதால் தான் இத்தனை பெரிய நடனத்தை தன்னால் ஆட முடிகிறது. மேசை மீது குளிர்ந்தபடி இருந்த சோடாப் போத்தலைத் தொட்டதும் சுட்டுவிட்டதுபோல் சட்டென அவள் குளிரின் சிறையிலிருந்து தன் விரல்களை விடுவித்துக்கொண்டாள். அலான் அந்தப் போத்தலை அவளிடமிருந்து வாங்கி அதன் மூடியை பற்களால் கடித்துத் திறந்தான். "உஸ்" என்றது போத்தல். வெள்ளை நுரை பொங்கி வந்தது. அந்த ஹோட்டலில் வேலை செய்யும் பொடியன் இதையெல்லாம் பார்த்தவாறு அர்த்தம் புரிந்ததுபோல் அவன் துளிர் மீசையை தடவினான்.

''சாப்பிட ஏதாச்சும் வேணுமா?'' என்றான் சற்று அருகில் வந்து. "உஸ்" என்ற சோடாப் போத்தலை ஒரு முறை பார்த்தான். வேறு எதுவும் அவர்களைக் கேட்காமல் திரும்பி நடந்தான். மழையில் குடையை நனைத்தபடி உள்ளே அவள் வந்தாள். குடையை மடித்து அருகில் உள்ள சுவர் மூலையில் வைத்தாள். அவள் பெயர் நஸ்தயா என்று சக்கியா அவளை அலானிடம் அறிமுகப்படுத்தினாள். அலானின் நீண்ட மூக்கில் இருந்த மச்சத்தை பார்த்த நஸ்தயா சுடர் குறைந்த ஒளித் துளியாய் சிரித்தாள். "மூக்குல என்ன மச்சமா" என்றாள் பக்கத்துக் கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்தபடி.

''உம்மா..ஹால் பெல் அடிச்சது யாரு.?..இங்க அப்படி யாருமில்லையே..'' என்றாள் மகள்.

"அன்று அலானின் மச்சத்தை அவ்வளவு நேரமாக புகழ்ந்தாளே நஸ்தயா ஏன்? என்ற கேள்வி இப்போது இந்த நேரத்தில் எதற்கு என் மனதில் தோன்ற வேண்டும்" என்று அலானிடம் திருப்பிக் கேட்டாள். அவன் ஏதும் பேசவில்லை.

"யாரையும் காணலியே'' என்றாள் திரும்பவும். மகளின் முகத்தைப் பார்த்துத் தலையசைத்தாள். இருந்த இடத்தை விட்டு மெல்ல எழுந்தாள்.

''அலான் இந்தக் குவளை ஞாபகமிருக்கா?'' என்றாள். மகளை ஒரு கையால் அணைத்து நடந்தாள்.

''ம்..ம் உன் உதடுகளுக்குத்தான் அதிகம் பழக்கப்பட்டி ருக்கு இந்தக் குவளை நஸ்தயா உனக்காக தந்ததாச்சே"

"ம்..ம்.." என்றாள்.

‘‘உம்மா கூதல்ல ஒடம்பெல்லாம் ஊசி போடுற மாதிரி இரிக்கி உள்ள கெதியா வாம்மா போகலாம்..’’ என்று சொல்லி வாய் எடுக்கவில்லை மழையை யாரோ தூண்டிலிட்டுப் பிடிக்க முயற்சிப்பது போன்று மின்னல் அடித்து. அப்போது வீசிக் கொண்டிருந்த காற்றிடமிருந்து தப்பித்து வீட்டினுள் தஞ்சம் புகுந்தது அந்தப் பலா இலை. பாதி மஞ்சளும் பாதி பச்சை நிறமுமாய் இருந்தது. வீட்டுக்குள் புகுந்த மாத்திரத்தில் சுவரோடு ஒட்டிக்கொண்டது. அருகே இருந்த பல்லி என்ன நினைத்ததோ விரண்டோடியது.

தேநீரை அருந்தி முடித்த சக்கியா அந்த மார்பிள் தரையில் அமர்ந்து அலானின் மடியில் சற்று தலையைச் சாய்த்தாள். மகளும் அருகில் அமர்ந்து கொண்டாள். ‘‘டிடிங்…..டிடிங்…..’’ஹால் பெல் அலறும் சத்தம். ‘‘மகள் போய் யாருன்னு பாரு’’ தன் மகளின் தோளில் கையை வைத்து அழுத்திச் சொன்னாள். ”எரசலடிக்குது ஜன்னல சாத்து மகேள்” என்றாள் திரும்பவும்.

‘‘யாருமில்ல வாப்பா’’ என்று போன வேகத்திலே திரும்பி ஓடி வந்தாள் அவள். அப்போது வீடெங்கும் ஒரு குகையின் அமைதி நிலவியது. அரபு மண்ணின் வாசனையும் பரவியது. ஓமானிலிருந்து விடுமுறையில் வந்தபோது கொண்டுவந்த அந்த தொப்பியை மகள் தலையில் அணிந்துகொண்டு வந்து நின்றாள். அது அழகான நூல் அலங்காரங்கள் கொண்ட சற்று உயரமான தொப்பி. ஓமானிகளை அந்தத் தொப்பியோடு பார்த்தால் அதிலும் ஓமான் சிறுவர்கள் அப்படி வடிவாக இருப்பார்கள். மகளின் தலையில் அந்த தொப்பியைப் பார்த்ததும் சக்கியாவுக்குக் குடும்பத்தோடு ஓமானில் இருந்த நாட்களும் கண்ட மலைத் தொடர்களும் குகைகளும் ஞாபகத்திற்கு வந்திற்று. ஓமானில் இருந்த அத்தனை வருடமும் விடுமுறையை அற்புதமாக கழித்தாள்.

மலைத் தொடர்கள் செறிந்த இடமெல்லாம் சென்று பார்த்து வியந்திருந்தாள். அன்றும் அப்படி ஒரு விடுமுறை நாள்தான். ஓமானின் பெரிய அகலமான மலைக் கிணற்றைக் கண்டு வியந்தாள். அது தடாகம் போன்றது. கிணற்றின் உள்ளே இறங்கிப் பார்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த ஏணிப்படி வழியாக உள்ளே இறங்கிப் போய் கிணற்றின் நீல நீரைப் பார்த்துச் சிலிர்த்தாள். உயரத்திலிருந்து சிறுவர்களும் பெரியவர்களும் அந்தத் தெளிந்த நீலத் தண்ணீரில் குதித்துக் குளித்து விளையாடினார்கள். அதில் ஒருவன் தண்ணீரின் அழகையும் அதன் குளிரையும் அரபு மொழியில் வர்ணித்துப் பேசிக்கொண்டு குதித்தான். “ழபாக்” என்ற ஓசையில் தண்ணீர் மேலே உயர்ந்து விழுந்தது. அந்த மலைக் கிணற்றைச் சுற்றிக் கம்பித் தடுப்பு போட்டிருந்தது. அந்தக் கம்பியைப் பிடித்தபடி அலான் தலையை நூறு அடிக்கும் அதிகமான ஆழத்திற்குக் குனிந்து அந்த நீலத் தண்ணீரைப் பார்த்துக் கொண்டு நின்றான். அலானை அண்ணார்ந்து பார்த்து

”அலாஆ…..ன்” என்று சத்தமாகக் கூப்பிட்டாள். கீழே இருந்து நூறு அடி உயர்ந்து மேலே வந்து அலானின் காதுகளைச் சுற்றி வளையமிட்டது அவளின் சத்தம். சற்று நேரம் “அலா….ஆ…ன்” என்று அந்தக் கிணறு கூப்பிட்டது போல்தான் இருந்தது. கழுத்தில் இருந்த துப்பட்டாவை இடுப்பிலே கட்டிக்கொண்டாள். அந்த நீலத் தண்ணீரின் கண்கள் அவளின் மார்பை பார்த்த ஒவ்வொரு கணமும் ஒரு படி மேலே உயர்ந்து அசைந் தது. பக்கத்தில் நின்றிருந்த பிலிப்பைன்ஸ்காரி அவளது தாய் மொழியில் ஏதோ யாருடனோ பேசிக்கொண்டி ருந்தாள். அவளின் கையடக்கத் தொலைபேசி இளஞ் சிவப்பு நிறமாக இருந்தது. அவளின் இன்னொரு கையில் இருந்தது. tea time கடையில் வாங்கிய மசாலா டீ. அதன் ஆவி குட்டிப் பாம்புகள் போல் நெளிந்து மேல் நோக்கிச் சென்றது. “ஜீப் வாஹித்ச் சாய் மசாலா” என்றான் ஒரு இள வயது ஓமானி. அவன் குரல் அலானின் காதுகளில் வந்து பாய்ந்தது. கிணற்றைச் சுற்றியிருந்த உறுண்டைக் கம்பித் தடுப்பில் சாய்ந்துகொண்டிருக்கும் பலரது கைகளிலும் அந்த மசாலா டீ இருப்பதை அவதானித்தான். அந்த tea time கடையும் மிக அருகேதான் இருந்தது. பாதாம் பருப்பை சிறு சிறு துண்டுகளாக்கி டீயில் போட்டிருப்பர். அபாரமான சுவை. “சேட்டா ரெண்டு மசாலா டீ கொடு” என்றான் அலான். ஒரே தடவையில் கிடைத்த இரண்டு ஆஸ்கார் விருதைப்போலக் கைகளில் டீயை ஏந்தி வந்து “சக்கியா மேலே வா டீ குடிப்பம்” என்றான். அவனது குரல் அந்த ஏணிப் படிகளால் இறங்கிப் போய் அவள் காதுகளைக் கடித்தது. அப்போதுதான் அவன் எதிரில் பளிச்சிடும் அந்த உருண்டைக் கம்பியை விரல்களால் மெல்லப் பிடித்து நின்றாள் ஒரு இளம் பெண். அவள்தான் ஓமானின் இறுதிப் பெண்ணோ என வியக்கும் அழகில் ஜொலித்தாள். அன்னநடை போட்டு சக்கியா வெளியே வருவதற்குள் அவன் மசாலா டீயின் முதல் மிடரை அருந்தி ஜொலிக்கும் அந்த அழகியின் பக்கம் கண்களைச் சாய்த்தான்.

அடுத்த மூன்றாவது வினாடியே கண்களை சக்கியாவின் பக்கம் வீழ்த்தவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தான். அதன் பிறகு அந்தக் குதிரை வண்டியை அதன் பிறகு இலைகளை அழகாக வெட்டி பந்து போல் அலங்கரிக் கப்பட்ட மரங்களை என்று எங்கெல்லாமோ அவன் பார்வை பரவியது. சிமெந்துக் கற்கள் பரவிய நடை பாதையில் அந்தக் குதிரை வண்டி ஓடும் சத்தத்தைச் சிலர் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அந்த பூங்காவுக்குள் ஒரு சுற்றுச் சுற்றி வர ஒரு ரியால் வாங்கினார் கிழவர். க்ளக் க்ளக் க்ளக் க்ளக் சத்தம் குதிரை வண்டிக்குப் பின்னால் ஓடிப்போகிறது. "அந்தச் சத்தத்தை வண்டியில் ஏற்ற கிழவர் சம்மதிப் பாரா" என்று சக்கியாவைப் பார்த்துக் கேட்டான் அலான். மசாலா டீயை அருந்தியவள் அரை குறையாக சிரித்தாள்.

"தூக்கத்தில் நாக்கைக் கடித்தவன்போல் வாயைத் திறந்து இடைக்கிடையே சிரிக்கும் அந்தக் கிழவரை எங்கோ பார்த்த மாதிரியும் பழகின மாதிரியுமே இருக்கிறது இந்தக் கிழவர் முகத்தில என்ட வாப்பாட முகம் இருக்கு உங்களுக்கு ஏதாவது தோனுதா"

"எனக்கும் அப்புடித்தான் தோனுது"

செல்போன் மணி அடித்தது. சத்தம் வீட்டின் அமைதியைக் கலைத்தது. சக்கியாவின் ஓமான் நினைவுகளும் சேர்ந்தே கலைந்தது.

"மாஷா வாப்பாட போன எடுங்க"

"ஹலோ யாரு நஸ்தயாவா"

"ஆமா நான்தான். என்ன ஒன்ட வீட்ட நல்ல மழ பெய் யுதா சத்தமா இருக்கி?"

"இல்ல இது மழ இல்ல தண்ணி விழிச்சிட்டிருக்கு தண்ணீட கண்கள்தான் நிலமெல்லாம் விழுந்திட்டிருக்கு"

"இது யார்ர கவித? எல்லாம் இருக்கட்டும் முதல்ல என்ன மன்னிச்சிடு"

"ஏன் உன்ன மன்னிக்க என்னாச்சு"

"எங்க வாப்பா மூனு நாளா வீட்ல இல்ல எங்க கூட சண்ட போட்டு வெளியேறிப் போயிட்டாரு"

"அதேன்? கொஞ்சம் வெவரமாச் சொல்லு"

"எல்லாத்துக்கும் காரணம் நான் ஒனக்குத் தந்த பேத்டே கிப்டு அந்த மாயக் "கப்" தான் அது என்ட வாப்பாட நான்தான் அது தெரியாம ஒனக்குத் தூக்கித் தந்துட்டன் பிளீஸ் என்ன மன்னிச்சிடு ஒனக்கு ஒரு தங்கச் செயின் வாங்கி வச்சிருக்கன். அத கிப்டா தாரன் அந்தக் கப்ப குடுத்திடு சக்கி"

"இதானா விசியம் வந்து எடுத்துக்கோ"

"தேங்ஸ்டி நா இப்பவே வாரன்" அவள் பேசிய செல்போனைக் கீழே வைக்கவில்லை வாசல் கதவடியில் பெல் சத்தம் கேட்டது.

"நஸ்தயா இவ்வளவு வேகமா வந்துட்டாளா?" என்று வியந்தாள் சக்கியா.

"இல்ல நான் நஸ்தயாட வாப்பா. யார்ர வீட்டுலயும் மழ பெய்யல உங்க வீட்டுல மட்டும் மழ பெய்யுது அதான் இங்க வந்தன். என்ர மாயக் குவளை இங்கதான் இருக்கு. என்ர மாயக் குவளைக்கு இன்று பிறந்த நாள் அதுதான் அது இருக்கிற வீட்டுல மட்டும் மழ பெய்யுது" என்றார் வீட்டுக்கு உள்ளே வந்தவர்.

"தேநீர்க் குவளைக்கு பிறந்த நாளா?" என்று அவரைக் கேட்டு வியந்தாள் சக்கியா.

"நீங்க பிறந்த நாள் கொண்டாடலாம் ஆனா என்ர குவளை பிறந்த நாள் கொண்டாடக் கூடாதா? அந்தக் குவளை என் கைக்கு எப்போ வந்துச்சோ அந்த நாள்தான் என்ர குவளையின்ர பிறந்த நாள். அதுன்ர ஒவ்வொரு பிறந்த நாளைக்கும் அது இருக்கிற வீட்ல மட்டும் நல்ல மழ பெய்யும்" என்றார் அவர் உற்சா கத்துடன். அவர் வலது கண் இமை கக்கட்டி வந்தது போல் வீங்கி இருந்தது. அந்தக் குவளையில் சூடான தேநீர் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்து அவரை உபசரித்தான் அலான். அவர் ஆத்திரத்துடன் தேநீரைக் கீழே ஊற்றினார். தேநீர் நிலத்தில் விழாமல் மறைந்து மாயமாய்ப் போனது.

"அந்தக் கப்ப அவர்ட்ட கொடுக்காத" என்றாள் உள்ளே வந்த வேகத்தில். "இவர் என்ட வாப்பா இல்ல" என்றாள் நஸ்தயா.

**வாசிப்பதால் ஒரு மனிதன்**
**பூரணமனிதனாகிறான்**



சி. ரஞ்சிதா

# ஒரு காகிதப் பூவை வட்டமிடும் வண்டு

**அ**வர் அப்படி செய்திருக்ககூடாது…! ச்சீ…ஏன் அவருடைய புத்தி இப்படியெல்லாம் தடம்புரள் கிறது…?…?…! சாதாரண ஒரு வீடியோ 'கோல்'தானே…? நெருங்கிய உறவினர் நண்பர்கள் சகஜமாக முகம்பார்த்து கதைப்பது இன்றைய நாகரிக உலகில் இயல்பானதுதானே…? முறையாக கதைத்துவிட்டு வைத்திருந்தால் இருவருக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்காது… ஒரு பிள்ளைக்கு அப்பாவாகியும்…! அவர் புத்தியை என்னவென்று சொல்வது…? எத்தனை தடவை அவருடைய தவறுகளை ஒரு தாய் போல பொறுத்து அன்பாக பழகியிருப்பேன்…!…! அவருடைய கத்தி போன்ற வார்த்தைகளை…!….ச்சீ…! அவற்றை நினைக்கும்போதே உடம்பெல்லாம் கூசி… ஒடுங்குகின்றது.

மென்மையான சுபாவமும் காரணமின்றி கோபப்படாத குணமும் கொண்ட தேஜாவின் வார்த்தைகள் வாயிற்குள்ளே சிறைபட்டு மனதிற்குள்ளே அவரை திட்டித்தீர்த்தன. அவரை நினைக்கையில் தேஜாவிற்கு வருத்தமும் கோபமும் மட்டுமே மேலிட்டது. விரக்தி எப்பொழுதும் வந்ததில்லை. பிரிந்து மறந்துவிட வேண்டும் என்று அவள் ஒருபோதும் நினைத்ததில்லை. அவருடைய வார்த்தைகளை வெளியில் சொல்லி அழமுடியாமல் தனிமையில் எத்தனையோ தடவைகள் அழுதிருக்கிறாள். தன்னையும் அவர் வீட்டிலுள்ள பெண்களைப் போல நினைக்கமாட்டாரா…? அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் என்பது தேஜாவிற்கு நன்கு தெரியும்.

ராம்நாத்திற்கு இப்பொழுது மனதுக்குள்ளே முள் போல ஏதோவொன்று "சுள்…சுள்…" – தைத்தது. இனம்புரியாத அவமானத்தின் வெட்கம் உடம்பெங்கும் வியர்வை போலப் படர்ந்திருந்தது. இத்தனை வருடங்கள் அவளுடன் பழகி சிந்திக்காமல் வார்த்தைகளை என் விருப்பத்தின்போக்கில் தேள் போல கொட்டியிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவள் கோபப்பட்டாலும் என்னை தவறாக தூற்றியதில்லை…! இன்று "ச்சீ…வை போனை…உன்னோடு இனி என்ன பேச்சு…" - கூறி விட்டாளே…!…! எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன்…! இனி அவளுடன் கதைப்பதை நிறுத்தி விடவேண்டும். கதைப்பதால்தான் இத்தனை பிரச்சினைகளும் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. இவள் என்ன பெரிய எலிசுபத் மகாராணியா…? தவறு இருவர் மீதும்தான். முழு குற்றங்களையும் ஏன் நான் சுமக்க வேண்டும்…? அவள் மீதுதான் முதலாவது தவறு இருக்கின்றது. தெரிந்து தெரிந்து ஏன் என்னோடு பழகவேண்டும்…? எத்தனையோ முறை நானும் கூறினேன்தானே 'நீ உன் பாதையில் செல். நான் என் பாதையில் செல்கிறேன் என்று… தயவுசெய்து விட்டு விலகி சென்றுவிடு என்று…' அதைச் செய்யாமல் எதற்காக என்னை வட்டமிட்டு மனதில் சபலபுத்தியை ஏற்படுத்துகின்றாள்…? என்னை பொருத்தவரை நான் செய்வது சரிதான். விருப்பமில்லையென்றால் விட்டு விலகியிருப்பாள்தானே…? இப்படி நடிகை வேடம் பூண்டு என்னை மயக்க மாட்டாள்தானே…? இயற்கையை வெல்ல நான் என்ன ஞானியா…? என்னுடைய

உணர்வுகளை புரிந்துகொண்டு இஷ்டப்படி நடக்கமுடியவில்லையென்றால் எதற்கு என்மீது பற்று வைக்கவேண்டும்…? வாழ்க்கைப்பட்டு வந்தவள் என்னுடைய உணர்வுகளை புரிந்து நடந்திருந்தால் இப்படியொரு அவமானத்தை இன்று நான்…!…! எல்லாவற்றிற்கும் அவளும் ஒரு காரணம்… ஒரு குழந்தை பெற்றுவிட்டால் கணவனின் தேவைகளை மறந்துவிடுவாளா…?

ராம்நாத் தன்னுடைய தவறுகளுக்குத் தங்க முலாம் பூசி தத்துவ வார்த்தைகளால் மினு மினுப்பை ஏற்ப டுத்தினான். அவனுக்கு உணர்ச்சியை சுவைக்கத்



தெரியும் அடிமையாகிவிடமாட்டான் பண்பாடு கலாசாரம் குடும்ப கட்டமைப்பு பெண்களின் உள்ளுணர்வு – சில தருணங்களில் கேவலமாகத் தோன்றும்.

ராம்நாத்திற்கும் தேஜாவிற்கும் நட்பு அரும்பியது பதுளை மாவட்டத்திலுள்ள ஒரு தனியார் கல்வி நிறுவனத்தில்தான். இருவரும் ஆசிரியப் பணியில் மாணவர்களை இலட்சிய பாதையில் மிளிரவைக்கத் துடிப்பவர்கள். ராம்நாத் நுவரெலியா மேகமலைத் தோட்டத்திலிருந்து பதுளைக்கு வார இறுதி நாட்களில் செல்வது வழக்கம். தேஜா பதுளையிலுள்ள ஒரு தமிழ் பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றினாள். இருவரும் தங்களுடைய கற்பித்தல் நேரங்களைத் தவிர இலக்கியங்களை பற்றி சுவாரஸ்யமாக சம்பா சிப்பார்கள் விமர்சிப்பார்கள் வாதாடுவார்கள். ராம் நாத்தின் எளிமையான நடை உடை இனிமையான பேச்சு மாணவர்களுடன் ஒரு நண்பன் போல பழகும் சுபாவம் ஆழமான அறிவு வெளிப்படையாக எதையும் கதைக்கும் தைரியம் - அவனின் ஒவ்வொரு செயற் பாடுகளும் எல்லை மீறிய காதலை தேஜாவிற்குள் பூத்துக்குலுங்க வைத்துப் பிற ஆண்களே உலகத்தில் இல்லை என்ற நிலைக்கு அவளைக் காதல் பள்ளத்தில் தள்ளியது. காதல் உணர்வு மலர்ந்தவுடன் உடனே ஒரு ஆணிடம் துணிந்து கூறமுடியுமா…? மறைத்து விட்டாள் தேஜா. சில காலம் தனியார் கல்வி நிறுவனம் சந்தர்ப்ப சூழ்நிலையால் மூடப்பட்டதால் ராம்நாத்தின் தொடர்பு குறைந்தது. இருவரும் வெவ்வேறு மாவட் டங்களில் வசித்ததால் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. தொலைபேசியில் உரையாடும் சந்தர்ப்பங்களும் அவரவர் வேலையின் நிமித்தம் தடைப்பட்டது இடைவெளி அகன்றது. தேஜாவின் குடும்பத்தினர் மேகமலைத் தோட்டத்தில் வாழ்வு நடத்தியதால் அவள் பதுளையிலிருந்து மீண்டும் தனது ஊருக்கே இடமாற்றம் பெற்றுகொண்டு சென்றாள். ராம்நாத்தும் தேஜா பணிபுரியும் பாடசாலையிலேயே நான்கு வருடம் பணிபுரிந்து வந்தான். மீண்டும் இருவரின் நட்பும் தொடர்ந்தது. ஆனால் தேஜா அவனுக்கு திருமண மாகியதை எண்ணி மிகவும் கலங்கினாள். நெருப்பில் அகப்பட்ட மலர் போல துடித்தாள். ராம்நாத் ஒரு அப்பாவி. திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தையான அவனுக்கு எப்பொழுதும் பெண்களுடன் தவறான முறையில் பழகும் சிந்தனை எள்ளளவும் ஏற்பட்டதில்லை என்பது தேஜாவிற்கு நன்கு தெரியும். என்னதான் காதலனாக இருந்தாலும் திருமணமாகி ஒரு குழந்தைக்கு தகப்பனான ஒருவனிடம் முறையற்ற விதத்தில் தொடர்பை ஏற்படுத்துவதை இந்த சமூகம் விமர்சன மாலை போட்டு அவருக்கும் குடும்பத்திற்கும் தீராப் பழியை உண்டாக்கும் என்பதை நன்கு அறிந்தே தேஜா அவருடன் பழகினாள்.

“நீங்க ‘ஸ்கூல்’ல ‘பிரி’ ‘டைம்’ இருக்குறபோ ஏன் என்னோட கதைக்கிறதில்ல…’லிட்ரச்சர்’ பத்தி முன்னமாதிரிக் கதைக்கலாம்தானே…” - அன்பாக தேஜா வார்த்தை மலர்களை மென்மையாக தொடுக் கும்வேளை

“உங்களோட கதைச்சுகொண்டு இருந்தா பிறகு டீச்சர்ஸ் யாராவது பொம்பள ஆக்களோட சேட்டவிட்டுக்கொண்டு இருக்கிறேனு சொல்லுவாங்க… சும்மா வந்து பொழுது போக்க என்னால முடியாது…! உங்களுக்கும் பிறகு என்னால ஏதும் பிரச்சின வரும்…” - பதிலுக்கு ராம்நாத் அர்த்தமான வார்த்தைகளைத் தேஜாவிடம் கூறியபோது அவனின் கள்ளங்கபட மற்ற குணத்தை மனதார

எண்ணி போற்றிப் பாராட்டினாள். ராம்நாத்துடன் இணைந்து பாடசாலையில் இலக்கிய மன்ற குழுவில் பணியாற்றும் சந்தர்ப்ப சூழ்நிலை உதயமாகி ஒளி தந்தபோது தேஜாவிற்கு அவனுடன் நெருங்கி பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் கல்வி நடவடிக்கை களால் ஏற்பட்டது. சிறிது சிறிதாக தேஜாவின் காதல் மனத்தை ராம்நாத்தின் அறிவும் அனுபவமும் கண்ணாடியில் வெளிப்படும் விம்பம் போல காட்டிகொடுத்தது. நாகரிகமான சுபாவம் கொண்ட அவன் அதை அவளிடம் வெளிப்படையாக கேட்காமல் குறிப்பால் உணர்ந்து கொண்டான். இருவரின் தகுதியும் இணைவதை அணைபோட்டு தடுத்தது. நட்பு தொடர்ந்தது. தொலை பேசி அழைப்புக்கள் நீண்டது. விருப்பம் பூத்து புதுபொழிவு கண்டது.

பாடசாலையில் அன்றாட கடமைகள் அரங்கேறியது. கீரியும் பாம்பும் போல இருவரின் பார்வையும் நேற்றிரவு நடந்த அந்த சம்பவத்தை அசைப்போட்டு முகம் சுழிக்க வைத்தது. தேஜாவிற்கு ராம்நாத்தின் முகத்தை முன்பு போல பார்த்து கதைக்க இதயம் இடம் கொடுக்க வில்லை. ராம்நாத்தும் எதிர்கொண்டு வார்த்தைகளை விதைக்க திராணியற்றுக் கற்பித்தல் கடமைகளில் கவனத்தைத் திசை திருப்பினான். "என்ன தேஜா டீச்சர் மொகம் வாடி போயிருக்கு! கண் செவந்து இருக்கு வீட்டுல ஏது 'ப்ராம்ளமா…?'" – பிரேமா ஆசிரியர் வினவிய போது

" 'நத்திங்' 'நைட்டு'ல இருந்து தலைவலி டீச்சர்… சரியா தூங்கல அதுதான்" - பதில் அளித்தவாறே தேஜா தன்னுடைய வகுப்பறையை நோக்கி நகர்ந்தாள். பசுமையாக செழித்திருக்கும் தேயிலைச் செடிகளின் பாதைகளிலும் மேடும் பள்ளமும் சரிக்கிவிட காத்தி ருந்ததை அப்பொழுது அவளுக்கு அந்த பாடசாலை படிக்கட்டுக்கள் சொல்லின.

ஒரு மாதம் நதி வெள்ளம் போல பாய்ந்தோடியது. வேலைப்பளுவின் நிமித்தம் கணனியுடன் ஊடாடி எதையோ மின்னஞ்சலில் தேடிக் கொண்டிருந்தான் ராம்நாத். தான் எழுதி வைத்திருந்த ஆய்வுக்கட்டுரை யொன்றின் கோப்புத் தொலைந்த இடம் தெரியாமல் போனதை ஆர்வமாகத் தேடிய அவனுக்கு ஒரு அதிர்ச்சி. தேஜாவிடமிருந்து வந்த மின்னஞ்சல் ஒன்று அவனது கண்களை ஆக்கிரமித்தது. தான் தேடிய கோப்புக் குறித்த எண்ணம் சிதைந்து மின்னஞ்சலில் அப்படி என்ன அனுப்பியிருக்கிறாள் என்பதைக் காண மனம் துடித்தது.ஒரு நிலைப்பட்டது.

அன்புக்குரியவரே…!

என்மீது உங்களுக்கு கோபமா? அல்லது விரக்தியா? தெரியாது…பாடசாலை வளாகத்தில் நாம் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காது செல்வது பெரும் துன்பத்தை தருகின்றது. உங்களை தரக்குறைவாக பேசி அன்று கடிந்திருக்ககூடாது… அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்… உங்களை "வா…போ…" - மரியாதை குறைவாக சுட்டி கோபப்பட்டு வார்த்தைகளால் தாக்கியபோதும் கூட என்னை நீங்கள் "வாடி போடி நீ…" – மரியாதையற்ற வார்த்தைகளை நமது உறவு பூத்து புதுமணம் வீசிய நாட்களில் ஒருநாளேனும் என்னைநோக்கிப் பிரயோகித்ததில்லை.

நான் உங்களுடன் தொடர்பு கொள்வதை நிறுத்திவிட்ட பின்னர் வாழ்வில் ஒரு வெறுமையை உணர்ந்தேன். ஒரு சிறந்த அறிவுமிக்க நண்பனை இழந்துவிட்டோமே என்றொரு ஏக்கம்…இப்படியொரு உறவு இனி யாரிடம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு…? காதலனாக எண்ணி அன்பு கலந்து பேசியும் நண்பனாக சண்டைபிடித்தும் நகைச்சுவையாக பேசும் போது என்னையறியாமல் சிரித்ததும் இந்த ஒரு மாதமாக தொலைந்துவிட்டது…! இந்த நீண்ட கடிதத்தை நீங்கள் பொறுமையாக வாசித்தே ஆகவேண்டும்… இனி யொரு தருணம் நாம் இருவரும் கதைப்பது முயற்கொம்பே…

காதலிப்பது பெருங்குற்றம் என்றிருந்த என் மனதில் காதலை விதைத்தது நீங்கள்தான். ஆனால் அதனை மறைத்து உங்களுக்குத் திருமணமாகியதை மனதில் எண்ணி வேதனைகளை பொறுத்துக் கொண்டேன். அன்பான நமது பழக்கம் எல்லையற்று நீண்டு இடைவெளி குறையவே திடீரென நீங்கள் என்னைத் தனியாகச் சந்திக்க வரவேண்டும் எனக் கூறியதும் அதனை அதிர்ச்சியுடன் மறுத்தேன். ஆனால் பல முறை கேட்டும் வர மறுத்த என்னை உணர்ச்சியற்ற சடம் என்றீர்கள்…! உடம்பில் உனக்கு ஒன்றும் இல்லை என்றீர்கள்…! உன்னைத் திருமணம் செய்பவன் பாவம் என்றீர்கள்…! மானம் உனக்கு இருக்கா…?...!...! – கேட்டீர்கள்…! 'எனக்கு உன்னை பிடித்திருக்கிறது. என்னுடன் ஒருநாள் நீ நிச்சயம் இருக்கவேண்டும்' என்றீர்கள்…! இன்னும் சொல்லமுடியாத எத்த னையோ… அநாகரிகமான வார்த்தைகளை நெருப்பு போல கொட்டினீர்கள்…! கோபப்பட்டு அழுதாளும் தங்களின் பழைய குணங்களைக் காதலித்த எனக்கு நீங்கள் ஒரு உத்தமர் என்பதை மட்டுமே எண்ண வைத்து ஆறுதல் தந்தது மீண்டும் மீண்டும் உறவாட

அழைத்தது. அன்பு கண்களை மறைத்தது.

“இப்பிடியெல்லாம் என்னோட கதைக்கிறீங்களே…! அப்போ என்ன நீங்க உண்மையா… காதலிக்கி றீங்களா…!” - நான் கேட்டபோது

“உங்கள் மீது எனக்கு காதல் என ஒன்றும் இல்லை… விருப்பம் மட்டுமே இருக்கிறது… தனியா இருக்கணும் ஒருநாள்…” - அம்பு போல என்னுடைய இதயத்தை குத்தி கிழித்தீர்கள். யாரும் காதலிக்கும் ஆடவனிடம் எதிர்பார்க்காத வார்த்தைகள் இது. பொறுத்துக் கொண்டேன். எதற்காக என்னுடைய உணர்வுகளுடன் விளையாடினீர்கள்…!…?

“நான் ஒரு கெட்டவன் என்றால் ஏன் என்னுடன் பழகவேண்டும் விட்டு விலகிவிடு” – நாகரிகமாக நீங்கள் கூறியபோது அவ்விடத்திலும் உயிருக்குயிரான காதலனை விட்டுப் பிரிய மனமற்ற எனக்கு ஒரு காமுகனாக உங்களை பார்க்க மனம் இடம் கொடுக்கவில்லை…!

“எத்தனை வருசமாகத் தனிய வா என்று கூப்பிடுறேன் அதை இதுவரைக்கும் செய்யல…இப்போ ‘வீடியோ கோல்’ல கதைக்கத்தானே கூப்பிடுறே…எனக்காக இதை கூடச் செய்யமாட்டீங்களா… இதையும் செய்யலாட்டி உங்களுக்கு இனி நிரந்தர பிரிவுதான்… என்னை மறந்துவிடுங்கள்…!” - இப்படி நீங்க கோபம் கலந்து கேட்டதாலதானே நான் கதைத்தேன். அப்படி… வீடியோ…கோலில்… மு…த்த…ம் கொடுக்கவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது…? எனக்கு ஒன்றும் புரியவில்லை…

பல தடவைகள் நமக்குள் மனக்கசப்பு ஏற்பட்டபோது “நான் செய்தது தவறுதான்…நமது உறவில் மாசுபட்டுவிட்டது… அப்படிக் கதைத்திருக்ககூடாது… ஏன் உங்களிடம் அப்படி தோணுகிறது என தெரியல்ல… எனக்கு யாரையும் இப்பிடிப் பிடிக்கல… ஏதோவொரு பூர்வ ஜென்ம பந்தம் நமக்குள்ள இருக்குதுனு நெனைக் கிறேன்” - நீங்க உணர்வுபூர்வமாகக் கதைத்ததையும் என்னால் மறக்கமுடியவில்லை.

முறையற்ற விதத்தில் உங்களுடன் வாழ்வு நடத்த நான் விலைமகள் அல்ல…! உங்களை உயிரிலும் மேலாக காதலிக்கின்ற ஒரு ஆன்மா…! காதலை போற்றும் நீங்கள் எப்படி என்னையும் என் காதலையும்…! இப்படி…?….?….? என் காதலை…அப்படி… புரிந்துகொண்டீர்கள்…! நீங்கள் யாருடைய வாழ்வையும் சிதைக்கும் எண்ணம் கொண்டவர் அல்லர் என்பதும் விருப்பமின்றி யாரையும் கட்டாயப்படுத்துபவரும் அல்லர் என்பதும் எனக்கு நன்கு தெரியும். தங்களை நேசித்தேன் என்பதற்காக இத்தனை கொடுமையான வார்த்தைகளையும் நான்…மாலையாக அணிய வேண்டுமா…? நீங்கள் முறையற்ற வழியில் என்னை அணுகியது பெருங்குற்றம்… நான் உங்கள் உள்ளத்தைதான் காதலித்தேன்… சிலவேளை திருமணம் செய்திருந்தால்…! நமக்குள் தாம்பத்ய வாழ்வு சிறப்படைந்திருக்கும்… வாழ்வுப்பூஞ்சோலையில் பசுமை வியாபித்திருக்கும்…!

என் மனதை திறந்து உண்மையான காதலை அன்பின் ஆழத்தை பார்க்கத் தவறிவிட்டீர்கள்…!

என்னால் உங்களுக்கு ஒருபோதும் அவப்பேறு ஏற்படக்கூடாது. உங்களது குடும்ப வாழ்விலும் சிக்கல் வந்துவிடக்கூடாது. என்னை நம்பும் பெற்றோருக்கு நான் துரோகம் இழைத்துவிடக்கூடாது. என்னை நம்பி திருமணம் செய்ய வரும் ஒரு ஆடவனை ஏமாற்றி விடக்கூடாது… ஆனால் உங்களை திருமணம் செய்து வாழும் வரம் பெற்றிருந்தால் நான் அதிர்ஸ்டசாலிதான்… உங்களுடைய மனதில் சபல புத்தியை ஏற்படுத்திய பாவத்திற்காக என்னை மன்னித்துவிடுங்கள். என்னுடைய பார்வையில் நீங்கள் எப்பொழுதும் காதலனே… நமக்குள் நடந்த இந்த கசப்பான சம்பவங்கள் நமக்குள்ளேயே இருக்கட்டும்…

ஒரு ஆணிற்கு எப்பொழுதும் பெண்ணின் உணர்வுகளை புரிந்துகொள்ளத்தெரியாது. தெரிந்திருந்தால் வார்த்தை யால் எனது காதல் உணர்வுடன் விளையாடி யிருக்கமாட்டீர்கள்…உங்களை காதலித்து இன்று நான் பெற்றது கண்ணீர் மட்டுமே…!

இவ்வண்ணம்


என்றும் உங்களை மனதில் வைத்துபோற்றும்

தேஜா”

உணர்வுபூர்வமான இந்த கடிதம் ராம்நாத்தின் உள்ளத்தை பெரிதும் பாதித்தது. நேர்மையான சிந்தனை கொண்ட தான் சூழ்நிலை கைதியாகிவிட்டதை எண்ணி உள்ளம் நொந்து கடிதத்தை அழித்துவிடுகின்றான். தேஜாவின் மீது கொண்ட சபலத்தையும்தான். அப்பொழுது சாளரத்தினூடாக வெளித்தெரியும் மாமரத்தின் கூட்டில் வாழும் பறவைகளின் செயற்பாடுகள் ராம்நாத்தின் பார்வையில் புகுந்தது. மூன்று மாம்பழக்குருவிகள்

கூட்டில் அமர்ந்திருக்க உறவற்ற இன்னுமொரு குருவி அந்த கூட்டிற்குள் புகமுடியாது கூட்டை சுற்றிவருகின்றது. ஆண் குருவி உறவற்ற அந்த குருவியை நோக்கி கூடுவதற்கு துடிக்கின்றது நெருங்குகின்றது. உறவற்ற குருவி ஏக்கத்துடன் பறந்துவிடுகின்றது.

தேஜாவிடம் கதைப்பதை நிறுத்தி எப்பொழுதும் போல இலக்கிய பணியிலும் சமூகப்பணியிலும் குடும்ப கடமைகளிலும் ராம்நாத் பயணித்துக்கொண்டிருந்தான். இப்பொழுது இருவரும் வெவ்வேறு பாடசாலைகளில் சேவையாற்றுகின்றனர். சமூகத்தின் மீது அக்கறை கொண்ட ராம்நாத் இன்று தனது மனவலிமையால் திறமையால் பல விருதுகளை தனக்கு சொந்தமாக்கி கொண்டு சாதனையாளனாக மிளிர்கின்றான். அவனது சாதனைகளை பத்திரிகையில் வாசித்து களிப்பு பூத்து பாராட்டு மாலை அணிவிக்க தேஜா மூன்று மாதங்களின் பின் தனது காதலனிடம் தொலைபேசி அழைப்பை தொடுத்தாள். தோற்றுப்போனாள். அவளுடைய அழைபேசியை துண்டித்துவிட்டு இலட்சிய வானில் பறவையாக இலக்கை அடைய ராம்நாத் பறக்கின்றான். தாபம் இன்றி இருப்பதும் ஒரு தனி சுகம் என்பதை ஆத்மார்த்தமாக உணர்கின்றான் அவன். அவள் காகிதப் பூ என்பதையும் அப்பூக்களை வண்டு வட்டமிடுவது பயனற்றது என்பதையும் ராம்நாத் உணர்ந்துவிட்டான் போலும். எது காதல்? எது காமம்? எது வாழ்வின் இலட்சியம்? இருவருக்கும் புரிந்துள்ளது. இருவரின் பார்வையில் வாழ்க்கை பாடங்களை இருவரும் வெவ்வேறு புரிதலுடன் கற்று தேர்ந்துவிட்டனர்.



# மனிதனைத் தேடி....

சுமார் 1350 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பெருவெடிப்பின் விளைவாக பிரபஞ்சத்தில் பருப்பொருள் ஆற்றல்,காலம், வெளி ஆகியவை உருவாயின. பிரபஞ்சத்தின் இந்த அடிப்படைச் சிறப்புக் கூறுகளைப் பற்றிய கதை இயற்பியல் எனப்பட்டது.

அது நிகழ்ந்து சுமார் 3 லட்சம் ஆண்டுகளுக்குப்பிறகு பருப்பொருளும் ஆற்றலும் இணைந்து அணுக்கள் என்ற சிக்கலான அமைப்புகளாக ஆகத் தொடங்கின. பின்னர் அந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து மூலக்கூறுகளாக ஆயின. அணுக்கள் மூலக்கூறுகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான வினைகளின் கதை வேதியியல் என்று அழைக்கப்படுகிறது.

சுமார் 380 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி என்ற ஒரு கோளில் சில குறிப்பிட்ட மூலக்கூறுகள் ஒருங்கிணைந்து உயிரினங்கள் எனும் பெரிய மற்றும் சிக்கலான அமைப்புகளாக உருவெடுத்தன. உயிரினங்களின் கதை உயிரியல் எனப்படுகிறது.

சுமார் 70000 அண்டுகளுக்கு முன்பு ஹோமோ சேப்பியன்ஸ் இனத்தைச் சேர்ந்த உயிரினங்கள் கலாசாரங்கள் என்று அழைக்கப்படுகின்ற மேலும் அதிக விரிவான அமைப்புகளை உருவாக்கத் தொடங்கின. இந்த மனித கலாசாரங்களின் பரிணாம வளர்ச்சிதான் வரலாறு என்று அழைக்கப்படுகின்றது.

மூன்று முக்கிய புரட்சிகள் வரலாற்றின் பாதையைச் செதுக்கின. சுமார் 70000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அறிவுப் புரட்சி வரலாற்றின் துவக்கப் புள்ளியாக அமைந்தது. சுமார் 12000 ஆண்டுகளுக்கு முன்பு உருவான வேளாண் புரட்சி வரலாற்றின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. வெறும் 500 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அறிவியல் புரட்சி வரலாற்றை ஒரேயடியாக முடிவுக்குக் கொண்டு வந்தது. முற்றிலும் வித்தியாசமான ஒன்றைத் துவக்கக் கூடியதாக மாறியுள்ளது. இம் மூன்று புரட்சிகளும் எவ்வாறு மனிதர்களையும் அவர்களுடைய சக உயிரினங்களையும் பாதித்துள்ளன என்பது உண்மையிலே மிகமிகச் சுவராசியமான கதையாகும்.

வரலாறு தோன்றுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்பாகவே மனிதர்கள் இருந்தனர். நவீன மனிதர்களைப்போன்ற விலங்குகள் சுமார் 25 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலாகத் தோன்றின. ஆனால் எண்ணற்ற தலைமுறைகளாக அவை தம்முடைய வாழிடங்களில் இருந்த கோடிக்கணக்கான பிற உயிரினங்களிலிருந்து எந்தவிதத்திலும் தனித்து நிற்கவில்லை.

20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் கிழக்கு ஆபிரிக்காவின் ஊடாக நடந்து சென்றிருந்தால் மனிதர்களை ஒத்த பண்பு நலங்களைக் கொண்ட உயிரினங்களை நீங்கள் எதிர் கொண்டிருப்பீர்கள்.

**எழுதியவர்:**
**யுவால் நோவா ஹராரி**
**தமிழில்: நாகலட்சுமி சண்முகம்**



ஐ. கிருத்திகா

# ஒரு மர(ண)த்தின் புலம்பல்

நான் வேற யாருமில்ல. ஒரு சாதாரண வேப்பமரம். இருபது வருசத்துக்கு முன்னாடி ஒரு காக்கா போட்ட எச்சத்துல உருவான விருட்சம் நான். பதினஞ்சடி உயரம். ஒரு ஆள் கட்டிப்பிடிக்கிற அளவு பருமன், மாணிக்கப்பச்சையில இலைகள், சீசன்ல சத்துமாவு சாப்பிட்ட குழந்தைகள் மாதிரி கொழுகொழுன்னு பழுக்கிற பழங்கள். இதுதான் என்னோட பயோடேட்டா..........."

"என்னை யாரும் விதைக்கல. தண்ணி ஊத்தி வளர்க்கல. காக்காயின் கழிவுலேருந்து உருவானவன் நான். நானா வளர்ந்தேன், மரமானேன். இப்ப நிழல் தந்துக்கிட்டிருக்கேன். பிராணவாயு தர்றேன். மருந்தாகவும் பயன்படறேன். காலக்கொடுமை பாருங்க, என்னை வெட்டப்போறாங்களாம். சாலை யோரத்துல சமர்த்தா நின்னுக்கிட்டிருக்கேன். போற, வர்றவங்க இளைப்பாற சாமரம் வீசறேன். நான் சாலையை விஸ்தரிக்க இடைஞ்சலா இருக்கேனாம். அதனால வெட்டி எறியப்போறாங்களாம்...."

"மனிதர்கள் மட்டும் என் நிழலைத் தேடி வர்ற தில்ல. ஆடு, மாடுகளும் வரும். அசை போட்டுக்கிட்டே படுத் திருக்கும். அப்பெல்லாம் எனக்கு ரொம்ப பெருமையா இருக்கும். நம்மளால நாலுபேர் பயனடை யிறாங்களேன்னு சந்தோசப்படுவேன். அந்த சந்தோசம் பறிபோகப்போவுது....."

"நேத்திக்கு ஒரு ஆண்டிப்பண்டாரம் வந்தாரு. தனக்குள்ளேயே ஏதோ பேசிக்கிட்டு எம்மேல சாய்ஞ்சி உட்கார்ந்தாரு. திடீர்ன்னு, இந்த வாழ்க்கை நிலையில்லாதது, இது வெறும் மாயைன்னு கத்தினாரு. சரியா சொன்னீங்கன்னு பதிலுக்கு கத்தணும் போல இருந்துச்சு. பெருமூச்சு விட்டு அடக்கிக்கிட்டேன்........."

"தினமும் பொழுது விடியிற நேரத்துல ஒரு குயில் வந்து என் கிளையில உட்கார்ந்து கூவும். அது கூவுறதைக் கேட்க ரம்மியமா இருக்கும். நான் அது குரல்ல லயிச்சு போயிடுவேன். நிறைய

விதவிதமான குருவிகள் வரும், அணில் வரும், ஆந்தை வரும், காக்காவும் வரும். ஒரு காக்கா அடிக்கடி வந்து என் கிளையில உட்கார்ந்து என்னை உத்துப் பாக்கும். கொஞ்சநேரம் கழிச்சு பறந்து போயிடும். என்னை விதைச்ச காக்காவோட வம்சமா இருக்கலாமோன்னு எனக்கொரு சந்தேகம். வேற, வேற உடலமைப்போட, பலவிதமான வண்ணங்கள்ல பறவைகளைப் பார்க்கறப்ப இயற்கையைப் பாராட்டணும் போல இருக்கு....."

"நான் இயற்கையை நல்லா ரசிப்பேன். வானத்துல சலங்கைப் பறவைகள் நங்கூர வடிவத்துல பறக்கும் பாருங்க. அது ரொம்பப்பிடிக்கும். ராத்திரி மேகங்களுக்கிடையில மறைஞ்சு, மறைஞ்சு நிலா வேடிக்கைக் காட்டும். அதை ரசிப்பேன்........"

"இயற்கையோட இணைந்த வாழ்க்கைதான் ருசிக்கும். வசந்த காலத்துல என்னோட பூக்கள் நட்சத்திர துணுக்குகளா பூத்திருக்கும். அதோட வாசம் ஆளைக் கிறங்கடிக்கும். பூக்கள் மலரும் பருவத்துல நான் ரொம்ப அழகா இருக்கிறதா எனக்குப்படும். என்னை நானே ரசிப்பேன். ரசிப்புத்திறன்தான் வாழ்க்கையை உயிர்ப்போட வச்சிருக்கறதா எனக்குத் தோணுது. அது இல்லேன்னா நீரற்ற குளம்போல வாழ்க்கை வறட்சியாத்தான் இருக்கும். ஆங்..... நீரற்ற குளம்னு சொன்னவுடனே ஒண்ணு ஞாபகத் துக்கு வருது......."

"எதிர்த்தாப்ல ஒரு குளம் இருக்குப் பாருங்க. அட, அது குளம்தாங்க......அதுல ஒரு காலத்துல நிறைய தண்ணி இருந்துச்சு. அப்பெல்லாம் குறும்புக்கார பசங்க கரையிலேருந்து தொபுக்கடீர்ன்னு தண்ணிக்குள்ள குதிப்பாங்க. யம்மாடியோவ், அதைப்பாத்தாலே எனக்குப் படபடப்பா வரும். பொழுதுக்கும், பாட்டுக்கும் சனங்க குளிக்க வர்றதும் போறதுமா இருப்பாங்க. இன்னிக்குச் சொட்டுத் தண்ணி இல்லாமக் குளம் வறண்டு கிடக்கு. அதைப் பாத்ததும் எனக்கு ஒரு கவிதை தோணுச்சு. சொல்றேன், கேளுங்க......."

**"முன்பு அங்கே ஒரு குளம் இருந்தது.**

**குளத்தில் நிறைய நீர் இருந்தது.**

**நீரில் கொள்ளா மீன்கள் இருந்தன.**

**மீன்கள் கொத்த நாரைகள் வந்தன.**

அரசமரப் பிள்ளையாருக்கு குளத்திலிருந்து அபிஷேகநீர் சென்றது.

இன்று........

**அங்கே மைதானம் உள்ளது.**

**மைதானத்தில்**

**பிள்ளைகள் மட்டைப்பந்து விளையாடுகிறார்கள்.**

**அரசமரப்பிள்ளையார்**

**புழுதியேறி அழுக்காய் கிடக்கிறது.**

**வெக்கைதாங்காமல் அது வெந்து தணிகிறது........"**

"இந்தக் கவிதை தோணினவுடனே எனக்கு ஒருமாதிரியாயிடுச்சு. நல்லவேளையா, பிள்ளையார் வடக்குப்பக்கம் பாக்க உட்கார்ந்திருக்கு. இல்லேன்னா நான் மாட்டிக்கிட்டிருப்பேன். ம்ஹூம்......கஸ்டத்துல சிரிக்கணும்பாங்க. என் கதை அப்படித்தான் இருக்கு. எனக்கான வாழ்க்கை முடியறதுக்கு முன்னாடியே நான் சாகப்போறேன். இல்லயில்ல, சாகடிக்கப்படப்போறேன்......."

"கஜா புயல்ல நிறைய மரங்கள் விழுந்துட்டதா கேள்விப்பட்டேன். அதை என்னால ஜீரணிக்கவே முடியல. ஒரு நாலஞ்சு நாளைக்குப் பச்சையம் தயாரிக்கப் படாதபாடுபட்டேன். ஒருவழியா அதுலேருந்து மீண்டு வர்றதுக்குள்ள போதும், போதும்னு ஆயிடுச்சு. ஆனா இப்ப........"

"ஒரேயடியா கபளீகரம் செஞ்ச இயற்கையை தண்டிக்க முடியாது. ஆனா தன் சுய தேவைக்காக என்னை வெட்டப்போற இந்த மனிதர்களை....... ஓரறிவு புல், பூண்டு மரத்துலேருந்து ஆறறிவு மனிதர்கள் வரை எல்லாருக்கும் இந்த பூமியில வாழ அனுமதி உண்டு. அதைப்புரிஞ்சிக்காம மனி தர்கள் தங்களை எஜமானர்களா நினைச்சிக்கறது எந்தவிதத்துல நியாயம்.........?"

"தினமும் ஒரு பையன் என் நிழல்ல உட்கார்ந்து பாடப்புத்தகம் படிப்பான். அன்னிக்கு ஒருநாள் உணவுச் சங்கிலிபத்திப் படிச்சான். புல், பூண்டுகளை, மான் சாப்பிடறதாகவும், மானை, புலி சாப்பிடறதாகவும், புலியோட மாமிசத்தை, கழுகு சாப்பிடறதாகவும் அவன் படிச்சப்ப ஆச்சர்யமா இருந்துச்சு. ஒவ்வொரு உயிரும் இன்னொரு உயிரை

சார்ந்திருக்குன்னு அப்பதான் எனக்குப் புரிஞ்சது........"

"ஒண்ணு இல்லேன்னா இன்னொண்ணு வாழமுடியாது. உணவுச்சங்கிலி அறுந்தா சமநிலை குலையும். இதைக் கண்டுபிடிச்சதும் மனிதர்களாகிய நீங்கதான். பாழ்படுத்தறதும் நீங்கதான். வேறென்ன சொல்ல............"

"பூமி வெப்பமயமாகிட்டே வருதாம். இதையும் அவன்தான் படிச்சான். அதைத் தவிர்க்கணும்னா நிறைய மரங்களை நடணுமாம். மரம் நட்டா மழை பெய்யுமாம். வெப்பம் தணியுமாம். எங்கே, இருக்கறதையும் வெட்டத் துடிக்கிற நீங்க எங்கேயிருந்துங்க மரத்தை நடப்போறீங்க.....நல்லா தளதளன்னு வளர்ந்து நிக்கிறேன். என்னையே வெட்ட முடிவெடுத்துட்டீங்க. நீங்களாவது விதையை விதைக்கறதாவது.........."

"அன்னிக்கு விதைப்பந்து செய்ய அழைக்கிறோம், வாருங்கள்ன்னு ஒரு வேன்ல கூவிக்கிட்டே போனாங்க. யாரோ சமூக ஆர்வலர்களாம். மரங்களை வெட்டக்கூடாது, பூமியை காப்பாத்தணும்னு போராடு றவங்களாம். மனிதர்களில நல்ல மனசுள்ளவங்களும் இருக்காங்கன்னு அந்தநேரம் சந்தோஷப்பட்டேன்........"

"விதைப்பந்துன்னா என்னன்னு ஒரு ஆசாமி வேனை நிறுத்திக் கேட்டாரு. சாணம், களிமண் ரெண்டையும் கலந்து விதைகளை அதுக்குள்ள வச்சு உருட்டி காய வச்சிடணும். அந்தப்பந்துகளை வெட்டவெளியில வீசணும். அப்படி வீசினா மழை பெய்யிறப்ப சாணமும், களிமண்ணும் கரைஞ்சு விதைகள் மண்ணுக்குள்ள புதைஞ்சு வளர ஆரம்பிக்கும். அப்படின்னு அந்த ஆள் சொன்னாரு. எவ்ளோ நல்ல விஷயம்.........."

"அந்தக் காலத்துல காடுகளை அழிச்சு விளை நிலங்களை உருவாக்கினாங்க. இப்ப விளைநிலங்களை அழிச்சு பட்டா போட்டுடுறாங்க. கொஞ்சம் பந்துக ளையும் போடுங்களேன். பூமியாவது குளிரட்டும்........."

"என்னென்னவோ சொல்லணும்னு தோணுது. மரண தண்டனை கைதி மாதிரி நிக்கிறேன். நாள் குறிச் சாச்சு. இருபது வருஷமா இங்கே நின்னதுக்கு சின்ன தடயம்கூட இல்லாம அழிச்சிடப்போறாங்க. இன்னிக்கு எனக்கு இந்த கதி, நாளைக்கு, அதோ அந்த கொல்லையில நிக்கிற புங்கஞ்செடிக்கு இதே நிலைமை வந்தாலும் வரலாம்..........."

"இந்த இருபது வருஷத்துல நானும் எவ்வளவோ பாத்துட்டேன். எனக்குப் பின்னாடி இருக்க வீட்டுக்கு சொந்தக்காரரு சரியான அடாவடிப் பேர்வழி. அவரோட கொல்லையில அடுத்த வீட்டு தேங் காய் விழுந்துடுச்சுன்னு பெரிசா சத்தம் போட்டாரு. இனி உங்க வீட்டுத் தூசிகூட இங்கே வரக்கூடாதுன்னு மிரட்டினாரு. ஏன்னா அது அவர் இடமாம். அவர் அனுமதியில்லாமக் காத்துகூட அங்கே வீசாதாம். என்ன திமிர் பாருங்க............."

"அவ்ளோ பேசின மனுஷன் அடுத்த நாலுநாளில என் கண்ணெதிர்லேயே லாரியில அடிபட்டு செத்துப்போனாருங்க. ஆள் அடையாளமே தெரியாம உருக்குலைஞ்சு போயிட்டாரு. அவர் பேசின வார்த்தைகளை பக்கத்து வீட்டுக்காரர் மறக்கறதுக்கு முன்னாடியே ஆள் மயானத்துக்கு போயிட்டாரு........."

"அட, ராஜாவா வாழ்ந்தாலும் போகும்போது எதையும் எடுத்துக்கிட்டுப் போகமுடியாது. இது உங்களுக்கும் தெரியும். தெக்குத் தெருவுலேருந்து ஒரு முதுகு வளைஞ்ச பாட்டி பழம் பொறுக்க வரும். பழத்தைப் பொறுக்கி முந்தானையில கட்டிக்கிட்டு அப்படியே கொஞ்சநேரம் உட்கார்ந்துடும். சும்மா உட்கார்ந்திருக்காது. வாய் எதையாவது முணுமுணுத்துக்கிட்டேயிருக்கும். அது வீட்டு வாசலி லேயும் ஒரு வேப்பமரம் இருந்துச்சாம். பாட்டி தண்ணி ஊத்தி வளர்த்த மரமாம். வந்த மருமக உதிர்ற இலைகளைக் கூட்டியள்ள முடியலைன்னு மகனை நச்சரிச்சு மரத்தை வெட்ட வச்சிடுச்சாம். பாட்டி சொல்லிட்டு என்னை தடவிக் குடுத்து அழுதுச்சு. நான் திகைச்சுப் போயிட்டேன். நம்மகிட்ட பாசம் காட்டவும் மனுஷங்க இருக்காங்களேன்னு நெகிழ்ச்சியா இருந்துச்சு..........."

"என்னங்க அப்படிப் பாக்கறீங்க. எங்களுக்கும் உணர்வுகள் இருக்குங்க.......எங்களுக்கு ஓரறிவுன்னும், உங்களுக்கு ஆறறிவுன்னும் பகுத்துக்கிட்டீங்க. உங்களைவிட அஞ்சறிவு குறைவாயிருந்தாலும் நாங்களும் உயிர்கள்தான். எங்களுக்கும் உணர்வுகள் இருக்கு. இதைக் கண்டுபிடிச்சதும் நீங்கதான். இல்லேன்னு மறுத்துடாதீங்க..........."

"நாளைக்கு என்மேல ஒரு அரிவாளோ, கோடாரியோ பாயப்போகுது. என்னைப் பிளக்கப்போகுது. நான் மரிக்கப்போறேன். அப்புறம் அந்தப் பையன் என் நிழல்ல படிக்கமுடியாம போயிடுமே.....அதை நினைச்சா வருத்தமா இருக்கு. விதவிதமான

பறவைகள் என்னைக் காணாம ஏமாந்து போகுங்க. கொடுமை.........."

"அதைவிடுங்க, இதைக் கேளுங்க....போனவாரம் ரோடு அளக்க நாலுபேர் வந்தாங்க. ரோட்டை அளந்தாங்க. வேலை முடிஞ்சதும் வெக்கை தாங்காம என் நிழல்ல வந்து சாஞ்சிட்டாங்க. அதுல ஒருத்தரு, இப்படியே உட்கார்ந்திருக்க சொன்னா சோறு, தண்ணி கூட வேணாம், பேசாம உட்கார்ந்திருக்கலாம்னு சொன்னாரு. நான் மரமாட்டம் நின்னுக்கிட்டிருந்தேன். அடச்சே, நான்தான் மரமாச்சே..... மறந்தே போயிட்டேன்............."

"கொலை செஞ்சவங்களுக்கு மரண தண்டனை விதிப்பாங்களாம். நான் யாரையும் கொல்லலையே. எனக்கேன் இந்த தண்டனை....உயிர்வாழ பிராண வாயுவை தர்ற எனக்கு இப்படி அநீதி இழைக்க லாமா...இதை யார்கிட்ட கேக்கறது.........."

"சாலையைப் பெரிசு பண்ணலைன்னா விபத்துக்கள் அதிகரிக்குமாம். விபத்துக்களைத் தடுக்க வாகனங்க ளைக் குறையுங்களேன். அதை விட்டுட்டு உசிரை கொல்லப் பாக்குறீங்களே. இப்படியே போயிக்கிட்டி ருந்தா நாளைக்கு பூமி பொட்டல் காடாயிடும். உயிர்கள் வாழத் தகுதியில்லாத இடமா அதை மாத்தின புண்ணியம் உங்களையே சேரும்..........."

"படபடன்னு பொரியணும் போல இருக்கு. தாங்கமுடியல. ஜட பாவனையில நின்னுக்கிட்டிருந்தாலும் உள்ளுக்குள்ள கொந்தளிப்பா இருக்கு. பூமிக்குள்ளே யிருந்து தண்ணி உறியறதை நிறுத்திடலாமான்னு தோணுது. சூரிய ஒளியைப் பயன்படுத்தி உணவு தயாரிக்கிறதை விட்டுடலாமான்னு படுது. ஆனா அப்படிச் சும்மா இருந்துட என்னால முடியாது. இயற்கை என்னை இந்தமாதிரி இயங்கத்தான் படைச்சிருக்கு. இயற்கை விதியை என்னால மாத்தமுடியாது. ஆனா நீங்க எதையும் மாத்து வீங்க.........."

"ஓசோன் படலத்துல ஓட்டை விழுந்ததும், ஆர்டிக் பகுதியில பனி உருகுறதும் இயற்கையோட கட்டமைப்பு குலையறதுக்கான அறிகுறிகள். அதைத் தடுக்க என்ன செய்யப்போறீங்க.......? "

"என்னால லட்சக்கணக்கான விதைகளை உரு வாக்கமுடியும். இந்த இருபது வருஷத்துல நான் ஏகப்பட்ட விதைகளை பூமிக்கு தந்திருக்கேன். நான் நிக்கற இடத்துல நிழலை பரப்பியிருக்கேன். காற்றை சுத்தம் செஞ்சிருக்கேன், ஆக மொத்தம் நிறைவா வாழ்ந்திருக்கேன். என்னை இப்படியே விட்டா இன்னும் பலகாலம் என் வேலையை சலிக்காம செய்வேன். விட்டாதானே..........."

"நிறைய சொல்லிட்டேன்னு நினைக்கிறேன். நாளைக்கு எப்படி விடியுமோ தெரியாது. அதுதான் பொறுக்காம புலம்பறேன். எனக்கு பத்தடி தள்ளி ஒரு புளியமரம் இருக்கு பாருங்க. அதுவும் அடிபடப்போகுது. அதுலேருந்து வரிசையா புளியமரங்களா நிக்குது. எல்லாத்துக்கும் என் நிலைமைதான். பக்கத்துல போனீங்கன்னா அதுங்களோட புலம்பலையும் கேக்கலாம்........."

"எங்களுக்கெல்லாம் அநியாயம் நடக்கப்போகுது. விருட்சமா நிக்கிற நாங்க விறகா மாறப்போறோம். எங்களால நிழல் தரிச்சு கிடந்த இடமெல்லாம் வெயில் தகிக்கப்போகுது.........."

"மழை பெய்யிறது குறைஞ்சு போச்சு. வெயிலோட உக்கிரம் நாளுக்குநாள் அதிகமாயிட்டே இருக்கு. காலநிலையில மாற்றம் உண்டாகிட்டே வருது. இதுக்கெல்லாம் என்ன செய்யப்போறீங்க........?"

"உங்க பிள்ளைகளுக்கு சொத்து சேர்த்து வைக்கறீங்க. முதல்ல அவங்க வாழ்க்கைக்கு உத்திரவாதம் குடுங்க. காசு, பணம் சேர்க்கறதை பிறகு பார்த்துக்கலாம்........"

## தகவல் 2 ( நமது பாட்டி)



நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ நாம் எல்லோரும் மனிதக்குரங்குகள் என்ற ஒரு மிகப்பெரிய மிகச் சத் தமான குடும்பத்தைச் சேர்ந்த வர்கள்தான். இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற நம்முடைய மிக நெருங்கிய சொந்தங்களில் சிம் பன்சிகள் கொரில்லாக்கள் ஓராங்குட் டான்கள் ஆகியவையும் அடங்கும். அவற்றில் சிம்பன்சிகள் தான் எமக்கு மிக நெருக்கமானவை. வெறும் 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே ஒரு பெண் மனிதக் குரங்கு இரண்டு மகள்களைப் பெற்றெடுத்தது. அவற்றில் ஒன்று சிம்பன்சிகளின் மூதாதையாகியது. மற்றொன்று வேறுயாருமல்ல நம்முடைய சொந்தப் பாட்டிதான்.

**நன்றி: சேப்பியன்ஸ்**

ஆமுதாவால் கொஞ்சமும் தாங்கிக்கொள்ள முடியவேயில்லை. இரண்டு மார்பகங்களும், கனத்துக் கல்போன்று ஈவிரக்கின்றி விண்விண்என்று வலித்தன. வலியைத் தாங்கவோ, அடக்கவோ யாதொரு வழியும் அறியாது அல்லாடினாள். எவ்வித வலிநிவாரண மாத்திரைகளும் உதவவில்லை.அவளால் அழாமலிருக்கவும் முடியவில்லை.எத்தனை நாட்களுக்குத்தான், பால் சுரக்கும் மார்பகங்களை கையால் கசக்கிக் கறந்து வெளியேற்றுவாள். அதுவும் ஒரே நாளில் பலதடவைகள்........

கணவன் இருந்தாலாவது குழந்தையாகி வலி தீர்ப்பான். அவன் வேலை முடிந்து வர இன்னும் நேரமிருக்கிறது. அதுவரை........தாளமுடியுமா? குமுதாவுக்கு. முதல் குழந்தை நான்கு வாரங்களுக்கு முன்தான் பிறந்தது. அவளது துர்ப்பாக்கியம், இரண்டாம் நாளிலேயே எதிர்பாராது இறந்து விட்டது. குழந்தை இறந்த சோகம் ஒருபுறம், குழந்தைக்காக சுரக்கும் பாலின் வலி மறுபுறம். மருத்தவர் கொடுத்த வலி நிவாரணிகள், சில மணித்துளிகள்தான் சற்று உதவின. எத்தனை நாட்களுக்கு,......எத்தனை மாதங்களுக்கு........இப்படியே....?

# மடிப்பிச்சை





## மயில் மகாலிங்கம்

இப்போது மாலை ஆறு மணி.......கணவன் வேலைவிட்டு வீட்டுக்குவர ஏழு, எட்டாகிவிடும். இருப்புக்கொள்ளாது தவித்தாள். மன அமைதி உடைந்து நொறுங்கிற்று. இயங்கிக் கொண்டிருந்த தொலைக் காட்சியில் மனம் கிஞ்சித்தும் ஒன்றவில்லை. குட்டி போட்ட பூனைபோல், குறுக்கு நெடுக்காய் நடந்து கொண்டிருந்தாள். ஆமாம் அவளும் குட்டி போட்ட பூனைதானே. இயற்கையின் நியதிப்படி தாய்மையின் உபாதை அவளை வாட்டியெடுத்தது.குழந்தை இறந்தது, தாய்மை உடலுக்கு தெரியுமா? இயற்கை நியதிப்படி இயங்கி, பால் அளவின்றிச் சுரந்தது.

அருந்தத்தான் குழந்தையில்லை.தானாகச் சுரந்து வெளியேறும் பால், சட்டையை நனைத்து தொப் பமாக்கியது. தினமும் பல தடவைகள் மாற்றவேண்டி யேற்பட்டது. பால்குடி வயதுக் குழந்தைகள் யாரிடமாவது வாங்கிப் பாலூட்டலாம் என்ற எண்ணம் தோன்றினாலும், என்ன நினைப்பார்களோ, வக்கணை கதைப்பார்களோ என மனம் கூச்சமடைந்தது. அவளுக்கு தெரிந்தவரை அக்கம் பக்கத்தில்கூட குழந்தையுள்ளவர்கள் யாருமே யில்லை.

பெண் பிறவியும் தாய்மையும் இறைவனால் சபிக்கப்பட்டனவா? அழுதுஅழுது கண்ணீர்வரண்டு விட்டது, ஆனால் அளவில்லாமல் சுரக்கும் பால்தான் பெருக்கெடுக்கின்றது.

சூனியத்தை மனம் சுற்றிச் சுழன்றபோது, வீட்டு வாசலில் ஆளரவம் கேட்டது, “அம்மா தாயே,! பசி தாளமுடியல்லம்மா. குழந்தையும், இண்டைக்கு முழு வதும் ஒருசொட்டுப் பாலும் பருகல்ல. ஏதாச்சும் இருந்தா தாங்கம்மா கோடி புண்ணியமாப்போகும்”

வெளியே வாசலிலிருந்து, தீனமாய் நொறுங்கித் தெறித்த ஒரு பெண்ணின் குரல், தொலைக் காட்சிப் பெட்டியின் இரைச்சலையும் மீறிக்கேட்டது.

யன்னலைச் சிறிதாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். காய்ந்து மெலிந்த ஒல்லிக்குச்சியான ஒரு பெண் அழுது கரையும் குழந்தையை இடுப்பில் இடுக்கியவாறு நின்றுகொண்டிருந்தாள். குழந்தை மூக்குச் சளி வழிய சிணுங்கிக் கொண்டு, வாடிய கொடியாய் துவண்டு தொங்கியது. குழந்தையை வாஞ்சையுடன், அணைத்தபடி நின்றிருந்தாள்.

குமுதினி ஒரு நொடிதான் யோசித்தாள். விருட்டென வாசலைத் திறந்தாள். ஏக்கப் பார்வை தொக்கியிருந்த பிச்சைக்காரியின் முகத்தில் நம்பிக்கை ஒளிக்கீற்று மின்னியது. குமுதினி மலர்ச்சியுடன் வரவேற்றாள்.

“ வாம்மா,உள்ளே... !” எதிர்பாரா வரவேற்பைப் பார்த்த பிச்சைக்காரி, தன் காதுகளையே நம்ப முடியாது மலங்க முழித்துத் தயங்கினாள்.

“ அம்மா!,நான் இஞ்சயே நிற்கிறன் ...” என்றாள் தாழ்வு மனத் தயக்கத்துடன்.

“பரவாயில்ல....உள்ள வா.....!.” குமுதினியின் குரலில் இரக்கம் இழையோடியது, மதுரம் குழைந்து வழிந்தது.

“உனக்கு சாப்பாடு தாறன் குழந்தைக்கு என்ன வேணும்? ” அன்புடனும், அக்கறையுடனும் கேட்டாள்.

“எனக்கு,ஏதாச்சும் மிச்ச சொச்சம் கிடந்தால் போடுங்க....குழந்தைக்கு கொஞ்சமா பால்....அதுக்கு இண்டைக்கு முழுக்க குடிக்க ஒண்டுமே குடுக்கல்ல.... எனக்கு தாய்பாலே சுரக்குதில்ல... ” என ஆதங்கத்துடன் சொன்னாள். கவலை தோய்ந்த வார்த்தைகள்...

“ இரண்டு பேருக்குமே உண்டு...! அதுசரி, உன்ர பேர் என்ன ? உனக்கு கணவன், அப்பா அம்மா உறவுகள் ஆருமேயில்லயா? “

“ இல்லம்மா..நாங்க ஆருமில்லாத அநாதைங்க...இது பொறந்து ஆறு மாதத்திலேயே அப்பன முழுங்கிற்றுது...! நான் வீட்டு வேல செஞ்சுதான் காலம் ஓட்டுறன். ஊரில கஸ்டம்..எண்டு, ரவுணுக்கு வந்தா, ஆருமே நம்பி வேலைக்கு சேர்க்கிறாங்கல்ல... குழந்தையோட வேல செய்யமாட்டனாம்.. என்ர பேர் துளசி. “.

பெரும் ஆதங்கத்துடன் சொன்னவளின் குரல் கம்ம,கண்கள் சற்றுப் பனித்தன. குழந்தையை வாஞ்சையுடன் அணைத்து உச்சி மோந்தாள். குமுதினி பச்சாதாபப்பட்டாள். சில நொடிகள் யோசித்தவள் சடுமெனக் கேட்டாள்...

“என்னோட இருந்து வீட்டு வேலைகள் செய்ய விருப்பமா? தங்க இடமும் சாப்பாடும் தாறன். சம்பளமும் பார்த்து போட்டுத் தாறன்...” சொல்லியவாறே துளசியின் முகத்தை ஆழமாகத் துளாவி நோட்டமிட்டாள்.

துளசியின் வாடிய கண்கள் மலர்ந்தன. தன் காதுகளையே நம்பமுடியாத மனவெழுச்சி முகத்தில் வியாபித்தது. கண்கள் பனிக்கக் குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, தடாலென குமுதினியின் காலில்

முட்டுக்காலில் அமர்ந்து கும்பிட்டாள்.

" அம்மா,.! நீங்க தெய்வம் மாதிரி....எப்பிடி நன்றி சொல்லுறதெண்டு விளங்கல்ல....." என்று கசிந்துருகியவள், தொடர்ந்தாள், "அம்மா,ஐயாட்டக் கேட்காம என்னை வேலைக்கு எடுக்கிறீங்களே....அவர் ஏதும் சொல்லமாட்டாரா?.... " ஐயம் தொக்கி நின்றது.

"சேச்சே...அவரொண்டும் சொல்லமாட்டார். நாங்களும் நல்ல வீட்டுவேலைக்காரியா தேடியபடிதான் இருந்தம்.... நல்ல வேளயா, நீயே வந்து சேர்ந்திருக்கிறா. உன்னை நம்பலாந்தானே..? " புன்னகையுடன் குமுதினி கேட்டுவைத்தாள்.

"ஐயோ..அம்மா..!.உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்தா,கோணேசர் எங்கள தண்டிப்பார். என்ர குழந்தை மேல சத்தியம்.. நீங்களா என்னை வேலையைவிட்டு போ..எண்டு சொல்லுறவரையும் உங்க காலடிதான் எங்களுக்கு தஞ்சம்.." என அடிமனதிலிருந்து எழுந்த வார்த்தைகளை சிந்தினாள். குழந்தையின் தலையில் கை வைத்தாள்

"நான் உன்னை முழுசா நம்புறன்......துளசி ! இனிமேல் நீ என்னை அக்கா எண்டே கூப்பிடு..."என்ற குமுதினி, தனது அறைக்குள் நுளைந்து கை நிறைய உடுப்புகளுடன் வந்தாள்.

" இந்தா துளசி! இது என்ர உடு துணிகள்தான். வைச்சுக்கோ...குழந்தைக்கு வேண்டிய சட்டைகளும் இதில இருக்கு...இன்னும் ஏதும் தேவைப்பட்டா நாளைக்கு கடையில போய் வாங்குவம்... "

ஒரு தொகை உடுதுணிகளை, துளசியிடம் கொடுத்தாள் குமுதினி. முகம் பளிச்சென வெளிக்க துளசி அவற்றை வாங்கிக்கொண்டாள். இவ்வளவு தரமான விலைகூடிய உடைகளைத் துளசி தன் வாழ்க்கையில் கண்டதேயில்லை.

" சரி...நீ போய் நல்லபடியா குளிச்சி முழுகிற்று வா. காக்கா குளியல் போடாம ஆறுதலாய் குளி... குழந்தைய நான் பார்த்துக் கொள்ளுறன்." குழந்தையை நோக்கிக் கைகளை வாஞ்சையுடன் நீட்டவும், அது முகத்தை அம்மாவின் மார்பில் புதைத்தபடி தாயை இறுகப்பற்றியது.

" அது, புது ஆட்களிட்டப் போகாது அக்கா, ஆனா பழகிச்சுதெண்டா நான் தேவையில்ல.... பொல்லாத சிறுக்கி" என்று வக்கணையாகச் சொல்லி நமட்டுச் சிரிப்பையுதிர்த்தாள் துளசி. குமுதினி கூடவே, கையில் எடுத்து வைத்திருந்த சூப்பியை குழந்தைக்கு காட்டவும் அதன் கண்கள் விரிந்து மலர்ந்தன. முன்னர், ஒரு சூப்பி வைத்திருந்து, அது நாளாட்டத்தில் நைந்து சீர்கெட்டுவிட்டது. பல நாட்களாக தாயிடம் கேட்டழுது மறந்தேவிட்டது. இப்போது புதிதாகச் சூப்பியைப் பார்த்ததும் ஆவல்பொங்க, வாயைச் சப்புக்கொட்டியபடி குமுதினியிடம் தாவிப் பாய்ந்தது. இருவரும் ஒரே நேரத்தில் வெடிச்சிரிப்பை சிந்தினர். சந்தர்ப்பத்தை குமுதினி பயன்படுத்தி. குழந்தையை வாரியெடுத்தாள். சூப்பி கிடைத்த சந்தோசத்தில்,குழந்தையும் அவளிடம் ஐக்கியமாயிற்று.

துளசி,முறுவலுடன் குளியலறை நோக்கிப்போகவும், குமுதினி குழந்தையை தாய்மை உணர்வுடன் மார்போடு இறுக அணைத்தபடி தனது படுக்கையறையை நோக்கி புயலாகப் பாய்ந்தாள். குழந்தையின் பரிசம் கிடைத்ததும், இரண்டு மார்பகங்களும் விம்மிப் புடைத்து விறைத்தன. கணகணப்புடன் துறுதுறுத்தன. ஒன்றுடனொன்று போட்டியிட்டு பாலைச்சுரந்ததை குமுதினி, பட்ட வர்த்தனமாயுணர்ந்தாள். உடல்முழுவதும் ஊடறுத்து, புளகாங்கிதம் மின்சாரமாய் பரவியது. தாய்மையின் பூரிப்பு..........!!!!!!

பரபரப்பாகவும், விரைவாகவும் சட்டையை விலக்கி மார்பை வெளியே எடுத்து, வாயிலுள்ள சூப்பியை அகற்றவும் குழந்தை அடம்பிடித்து அழுதது. அவசர அவசரமாக மார்புக்காம்பை குழந்தையின் இதழிடையே திணித்தாள். பேராவலுடன் முலைக்காம்பை கவ்வி ஆக்ரோசமாக உறுஞ்சியது. சூப்பிக்கும், மார்புக்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்ததாலோ என்னவோ, குழந்தை இங்கிதமாய் முனங்கியது.

இதுவரை, பால் வற்றிய தாயின் மார்பைச் சப்பிய குழந்தைக்கு வளமான பால் சுரக்கும் மார்பகங்கள் சொர்க்கத்தைக் காட்டின. கால்களை உதைத்து, கைகளால், குதினியின் மார்பையும், கழுத்தையும் பிஞ்சுக் கரங்களால் கீறிப் பிறாண்டி நகக்குறி பதித்தது. குமுதினியின் கண்கள் சுக போதையில் திளைத்து, அரைக்கண்ணாய் சொக்கிச் சுருங்கின. தாய்மையின் பூரிப்பை முற்று முழுதாய் அனுபவித்து நுகர்ந்தாள்.

குழந்தைக்கு வயிறு காற்றூதிய பலூன் போலாகியது. குமுதினியின் மார்பகங்கள் வற்றிச் சுருங்கின. குழந்தை கெக்களமிட்டுச் சிரித்தது. அதன் திருப்தி பட்டவர்த்தனமாய் தெரிந்தது. குமுதினி இறைவனுக்கு மானசீகமாய் நன்றியை செலுத்தினாள்.

"கோணேசா! இந்தப் பந்தப் பிணைப்பு நீடிக்கவேண்டும்" என மனதுக்குள் தியானித்துக் கொண்டாள். குழந்தையை மார்போடணைத்து இறுகத்தழுவினாள். கன்னத்திலும், நெற்றியிலும் முத்தமழை பொழிந்தாள். குழந்தை பூரித்துச் சிரித்தது. அதற்கு இது முதல் ஆனந்த அனுபவம் போலும். படுக்கையறையைவிட்டு குழந்தையுடன் வெளியே வரவும், துளசியும் குளித்து முழுகி, சந்தணச் சவுக்கார மணம் கமகமக்க, வெளியே வரவும் சரியாயிருந்தது. புன்னகையுடன் துளசி,

" என்னக்கா, பாடாய் படுத்திச்சிதா பூனைக்குட்டி? " " இல்லையே! சமத்தாய் சுட்டித்தனமாயிருந் திச்சே...!.இனிமேல் நீ தேவையில்லயாம்..." என்று அம்சடக்கத்துடன் கண்ணைச்சிமிட்டி புன்னகைத்தாள்.

" வாடி ....செல்லம் ! உன்னையும் குளிப்பாட்டி விடுறன்" எனக் கூறிக் கையை நீட்டினாள் துளசி .....ம்....ஹூம்....தாயிடம் போகமறுத்து. குமுதினியை கட்டிப்பிடித்து நையாண்டி பண்ணியது. "அடி.. கள்ளி...உன்ர புத்தியை காட்டுறியா" என சொல்லிச் சிரித்தாள்.

"வயிறு முட்டப் பால் குடுத்தன்... என்னோட ஒட்டிற்றுது...! " என்று உள்ளர்தத்துடன் கூறினாள் குமுதினி.

தனது இறந்த குழந்தைக்காக வாங்கிச் சேர்த்திருந்த எல்லா உடுப்புகளையும் ஒட்டுமொத்தமாய் தூக்கிக் கொடுத்தாள் குமுதினி.

"இவையெல்லாம், இனி உன் குழந்தைக்குதான்..." சோகம் சூழ்ந்த முகத்துடன் அழாக்குறையாகக் கூறினாள்.

"ஏனக்கா இவ்வளவு உடுப்புகள்...? " எதுவும் புரியாது கேட்டாள் துளசி.

"எல்லாம் பிறகு விபரமாய் சொல்லுறன்.....!. நீ போய் வேண்டியதைப் போட்டுச் சாப்பிடு....."

"அக்கா! முன்பின் தெரியாத ஒரு பிச்சைக் காரிக்கு என்னவோ எல்லாம் செய்யுறீங்க.......!"என்று கசிந்து ருகினாள் துளசி. நடப்பது எல்லாம் கனவா நனவா என, ஒன்றும் புரியாது திகைத்து நின்றாள் துளசி.

" இனி.....இந்த வேறுபடுத்திக் கதைக்கிற கதையெல்லாம் வேணாம். இனி, நீயும் குழந்தையும் எங்க குடும்பத்தில் சேர்த்தி...!"

"நீயல்ல பிச்சைக்காரி......நான்தான் பிச்சைக்காரி...... மடிப்பிச்சைக்காரி.." எனத் தனக்குள்ளே முனங்கிக் கொண்டாள் குமுதினி.

**தகவல் 3 (கோவேறு கழுதைகள்)**



உயிரினங்களைப் பல்வேறு சிறப்பினங்களாக உயிரிய லாளர்கள் வகைப்படுத்தப்படுகின்றனர். ஒன்றையொன்று புணர்ந்து ஆரோக்கியமான சந்ததிகளை ஈன்றெடுக்கின்ற விலங்குகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாகக் கருதப் படுகின்றன. குதிரைகளுக்கும் கழுதைகளுக்கும் ஒரு பொதுவான மூதாதை உண்டு. அவ்விரு விலங்குகளின் பல உடலியல்புகள் ஒத்திருக்கின்றன. ஆனால் குதிரைக ளுக்கும் கழுதைகளுக்கும் ஒரு இடையே பரஸ்பரப் பாலி யல் நாட்டம் இருப்பதில்லை. செயற்கையான முறையில் அவற்றைப் புணர வைக்க முடியும். அவற்றுக்குப் பிறக்கின்ற குட்டிகள் கோவேறு கழுதைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் கோவேறு கழுதைகள் மலட்டுத்தன்மை கொண் டவை. எனவே ஒரு கழுதையின் டி.என்.ஏவில் ஏற்படும் மரபுச்சிதைவு மாற்றங்கள் ஒரு போதும் ஒரு குதிரையின் டி.என்.ஏ வின்மீது தாக்கங்கள் ஏற்படுத்துவதில்லை. அதேபோல் ஒரு குதிரையின் டி.என்.ஏவில் எற்படும் மரபுச் சிதைவு மாற்றங்கள் ஒருபோதும் ஒரு கழுதையின் டி.என்.ஏமீது தாக்கம் ஏற்படுத்துவதில்லை. எனவே இவ்விரு வகை விலங்குகளும் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த வையாகக் கருதப்படுகின்றன. அவற்றின் பரிணாம வளர்ச் சிப் பாதைகளும் வெவ்வேறாக இருக்கின்றன.

**நன்றி: சேப்பியன்ஸ்**

**வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமனிதனாகிறான்**

# தாய்

ஷெல்லிதாசன்

“என்னப்பா நான் சொல்லிக்கொண்டிருக்கிறன் நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு கதிரைக் குள்ளை படுத்தபடி ஒரு கதையுமில்லாமல் இருக்கிறியள்.”

சார்மனைக் கதிரைக்குள் கண்களை மூடியபடி கால்களை நீட்டிப் படுத்திருக்கும் கந்தையா மாஸ்ரரைப் பார்த்து அவரது மனைவி கமலம் கத்திக்கொண்டிருந்தாள்.

கந்தையா மாஸ்ரர் இப்ப ஒரு பென்சனியர். அவர் பென்சன் எடுக்கத் தொடங்கி ஐந்து வருசத்துக்கு மேலை ஆச்சு. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலை மற்ஸ் மாஸ்ரராய் தொடர்ந்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

மலையகம். திருகோணமலை. மட்டக்களப்பு. கொழும்பு என மாறிமாறி பணியாற்றியதால் அவரை அவரது கற்பித்தல் ஆற்றலை அறியாதவர்கள் கல்வி உலகில் எவரும் இல்லை என்றே கூறலாம். ‘‘மற்ஸ் கந்தையர்’’ என்ற சிறப்புப் பெயர் கால ஓட்டத்தில் அவருடன் ஒட்டிக்கொண்டது.

ஓய்வு பெற்றபின் பல கல்வி நிலையங்கள் பிரத்தியேக வகுப்பு நடத்த அவரை அழைத் தபோதும் அவர் அதற்கு இணங்கவில்லை. அதற்கு அவரது உடல்நிலையும் ஒரு காரணம். விளங்காத கணக்குகளை யாராவது மாணவர் வீட்டுக்கு வந்து கேட்டுத் தெரிஞ்சு கொள்ளலாம். அதையொரு சேவை மனப்பாங்குடன் அவர் செய்து வந்தாரேயன்றி எந்தவித எதிர்பார்ப்பும் அவரிடம் கிடையாது.



அவரிடம் படித்த பல மாணவர்கள் எஞ்சினியர்களாக டொக்டர்களாக தொழில்நுட்பவியலாளராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணியாற்றி வருவதை எண்ணிப்பார்க்கும் கந்தையா மாஸ்ரருக்குத் தான் தெரிவு செய்த தொழிலின் மகத்துவத் தன்மையிட்டு மனதுக்குள் ஒரு நிறைவு தென்படுவதை அவரால் உணரமுடிகின்றது.

இன்றும் அவரிடம் கற்ற மாணவர்கள் பலர் அவரை வழிதெருவில் கண்டு விட்டால் தாம் செல்லும் வாகனத்தை விட்டிறங்கி ஓடிவந்து வணக்கம் சேர் என பணிவுடன் அவர் முன்நின்று மரியாதை செலுத்துவதைக் காண முடியும்.

இந்தக் காலத்திலையும் இப்படியா என நீங்கள் நினைக்கக் கூடும். அவரிடம் படித்த அந்தக்காலத்து மாணவர்கள் அவரிடம் மற்லை மாத்திரம் பயிலவில்லை மரியாதை பண்புகளையும் சேர்த்துப் பயின்றனரோ என வியக்கத் தோன்றும்.

மாஸ்ரரின்ரை படிப்புக்கும் அறிவுக்கும் அவருடைய இரு புதல்வர்களும் ஏற்றவர்களாக வரவில்லையே என்பது அவரதும் ஏனையோரதும் மனக்கவலை. எதுவித குறைவுமின்றி கந்தையராலும் அவரது மனைவி கமலத்தாலும் வளர்க்கப்பட்ட இரு புதல்வர்களும் படிப்பதில் ஒரு அலட்சியப் போக்கையும் பண்பற்ற சில இளவட்டங்களுடன் சேர்ந்து அடாவடித் தனங்களில் ஈடுபடுவதை தமது இலட்சியமாகவும் கொண்டு கல்விக்கான காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த கந்தையா மாஸ்ரருக்கு ஒரே கவலைதான்.

அதனால் அவரால் நாய்வாலை நிமிர்த்த முடியவில்லை. கெடுகிறன் பந்தையம் பிடி எனச் சொல்லாமற் சொல்லித் திரியும் பிள்ளைகளை இனியும் ஊரிலே வைத்திருந்தால் தனது குடும்ப மானந்தான் கப்பலேறு மெனக் கருதவைத்தது.

தான்படிப்பித்த மாணவர்கள் பலர் எஞ்சினியராய் டொக்டராய் வெளிவரும் பொழுது தனது பிள்ளைகள் எந்த கம்பஸ் வாசலையுமே மிதிக்க நினைக்காத கழிமண் பொம்மைகளாகிப் போனதை எண்ணி மனமுடைஞ்சு போனார் மாஸ்ரர்.

ஊரெல்லாம் கண்டபடி உலாத்தித் திரியும் மகன்மாரைக் கட்டுப்படுத்த அவர் போட்ட கணக்குகள் தப்புக்கணக்காக மாறிவிட்டது. இனியும் இவர்களை இந்த நாட்டிலையே வைக்கக் கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்தவராய்

''இஞ்சேரப்பா உன்ரை செல்லங்கள் அப்பன் பெயரையே விலைபேசுதுகள். அதுகளை இனியும் ஊரிலை வைச்சிருந்து மரியாதை கெடத்தயாரில்லை.''

''அதுக்கு இப்ப என்ன செய்யப் போறியள் நீங்கள். குளத்திலை ஆத்திலை அவர்களை தள்ளப் போறியளே.''

''உனக்கப்பா எப்பவும் இப்பிடியான எண்ணந்தான் வரும். உருப்படியா ஏதாவது சிந்தனை வருமே.''

''அப்ப உங்கடை உருப்படியான சிந்தனை என்ன எண்டு சொல்லுங்கோவன்.''

மாஸ்ரருக்கும் அவர் மனைவிக்கும் பிள்ளையள் இருவராலும் இப்படிப் பலநேரங்களில் பல வாய்ச்சண்டை ஏற்படுவது சகசம். ஆனாலும் அன்றைக்கு மாஸ்ரர் ஒரு இறுதித் தீர்மானத்தை மனைவி பார்வதியின் முன்னால் போட்டுடைத்தார்.

''இஞ்சேரப்பா நீ சீதனமாய்க் கொண்டுவந்த உரும்பி ராய்க் காணி ஐஞ்சு பரப்பு என்ரை முதுசமான தின்னவேலி தோட்டக்காணி நாங்கள் இருக்கிற வீடு எல்லாத்தையும் விக்கப்போறன்.''

''என்னப்பா விசர் கதை கதைக்கிறியள். உங்கடை கணக்கு மூளையெல்லாம் கறிக்குதவாதப்பா. அந்தக் காணியளை வித்துப்போட்டு என்ன ரோட்டிலை நிக்கப் போறியளே?''

''இல்லையப்பா நான் சொல்லுறதை கொஞ்சம் ஆறுதலா கேளும். இவங்கள் ரண்டு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்பப்போறன். அப்படி அனுப்பினால்தான் இவங்கடை காவாலிக் கூட்டத்திலை யிருந்து இவங்களை விடுதலை செய்து ஆளாக்க முடியும்.''

''என்ன இரண்டு பிள்ளையளையும் வெளிநாடு அனுப்பப் போறியளோ? எங்களுக்கு ஆபத்து அந்தரத்துக்கு உங்கடை எட்டிப்பாராத சொந்தக்காரர் வருவினமெண்டே நினைக்கிறியள்?''

''உமக்கெப்பவும் எங்கடை ஆக்களை இழுக்காட்டி நித்திரை வராதே.''

''ஏன் உங்கடை ஆக்களிலை ஆர்கிட்டடியிலை எட்டிப்பார்த்தவை எண்டு சொல்லும்பாப்பம். எல்லாம் பானையிலை சோறிருந்தால் பூனையளும் சொந்தம் எண்டமாதிரித்தான்.''

“சரியப்பா.... அது கிடக்கட்டும் காணியளை வித்து வெளிநாடு அனுப்பிற ஏஜென்சிக் காரரிட்டை கொடுத்து ஒண்டுமில்லாமலே இருக்கப் போறியள்?”

கந்தையா மாஸ்ரருக்கு மனைவி கமலத்தின்ரை வார்த்தைகள் மேலும் சூடேற்றி கொதிக்க வைத்தது.

“அப்பிடி ஏமாற நானென்ன படிப்பில்லாத மொக்கனே. நல்லாய் அறிஞ்ச என்னட்டை படிச்சு வெளிநாட்டிலை வேலை செய்யிறவங்கள் எனக்கு உதவி செய்யிறதெண்டு சொல்லியிருக்கிறாங்கள். எனக்கு வலுத்த நம்பிக்கை உண்டு. அவங்களிடை போக்குவரத்துச் செலவை தந்தால் உங்கடை பிள்ளையள் வெளிநாடு வந்ததும் அவர்களைக் கவனிச்சு வேலை தேடிக் கொடுப்பதும் அவர்களுக்கு வதிவிட உரிமை வாங்கித் தருவதும் தங்கடை பொறுப்பெண்டும் சொல்லி இருக்கிறாங்கள். காணியளை வித்து முதல் இவங்கள் ரண்டு பேரையும் அனுப்புவம். அவங்கள் ரண்டு பேரும் உழைச்சு அனுப்பினால் காணி வீடெண்டு வாங்கிக் கொள்ளலாம். அதுதான் என்ரை முடிவு.”

முடித்த முடிவாக சொன்ன கந்தையா மாஸ்ரர் மனைவியின் ஒப்புதலோடு காணியளை வித்து பிள்ளையளை வெளிநாடு அனுப்பியும் விட்டார். மூத்தவன் கனடாவிலும் இளையவன் ஒஸ்ரேலியாவிலும் செற்றிலாகி வருடங்கள் மூன்றாகி விட்டது.

மாஸ்ரரின் வெளிநாட்டு மாணவர்கள் சொன்ன வாக்குறுதிக்கமைய அவரது பிள்ளைகள் இருவருக்கும் நல்ல வேலைகளை தேடிக் கொடுத்து மாஸ்ரருக்கும் மனைவிக்கும் ஆறுதல்தான்.

ஆனாலும் வெளிநாடு போன பிள்ளைகள் கைநிறைய உழைத்தும் தாய் தகப்பனுக்கு ஒரு சதமும் இவ்வளவு காலமும் அனுப்பியது கிடையாது. தமது பிள்ளைகள் காசு அனுப்பினால் காணி வீடு வாங்கி கஸ்டமில்லாமல் வாழலாமென எண்ணிய அவர்கள் நினைப்புகள் கனவாகியதன்றி வேறொன்றுமில்லை.

மூத்தவன் ஒரு வெள்ளைக்காரியையும் இளையவன் ஒரு ஒஸ்ரேலியாக்காரியையும் கலியாணம் பண்ணி அந்தந்த நாட்டுப் பிரசைகளாகி தாங்களுண்டு தமது குடும்பமுண்டு என இருந்ததன்றி தாய் தகப்பனை எண்ணிப் பார்க்க நினைத்ததில்லை. ஆனாலும் ஆனிக்கொருக்கா ஆவணிக்கொருக்கா அழைப்பெடுத்து அம்மாவுடன் கதைப்பதோடு தந்தையை அடியோடு மறந்து விட்டனர் என்றே கூறத் தோன்றும்.

“இஞ்சேருங்கோப்பா என்ன நித்திரையே கொள்ளுறியள் வெளிக்கிட்டுப் போய் கந்தசாமி கடையிலையாவது கடனுக்கு அரிசி சாமான் வாங்கி வாங்கோவன். இன்டைக்கு வெள்ளிக்கிழமை திங்கட்கிழமை தான் உங்கடை பென்சன். மூண்டு நாளைக்கும் பட்டிணியே கிடக்குறது?”

சென்ற கால நினைவுகளுள் புதைந்து கிடந்த கந்தையா மாஸ்ரர் திடுக்குற்று எழுந்தவராய் நிலைமையை சமாளித்தபடி...

“இல்லையப்பா கொஞ்சம் அசதியாய் இருந்தது தூங்கிட்டன்.”

“உங்களுக்கென்ன வீட்டிலை சமைக்க அரிசி தேங்காய் மரக்கறி சீனி தேயிலை ஒரு மண்ணாங்கட்டியுமில்லை. ஈசிச்சியரிலை நீங்கள் பேப்பர் படிச்சுக்கொண்டிருக்க சமைச்சுப்போடுற எனக்கெல்லோ தெரியும் அதின்ரை வலி.”

கமலா கணவனைப் பார்த்து எரிந்துவிழ “என்னப்பா சொல்லுறீர் அவன் கந்தசாமிக்கு போன மாசமும் கடன் கொடுக்கேல்லை. மாறிமாறி வந்த மருந்துச் செலவாலை ஏலாமல் போச்சு. அவன்ரை கடையடியாலை போகவே வெக்கமாயிருக்கு அப்படியிருக்க திரும்பவும் போய் கடனே கேக்கச் சொல்லுறீர். அதைவிட பிச்சை எடுக்கலாம். சும்மா வெறுந் தேத்தண்ணியை மூண்டு நாளும் குடிச்சு பட்டிணி கிடந்தாலும் என்னாலை கந்தசாமி கடையிலை போய் சாமான் வாங்கேலாது”... .ஓ...

கணவன் சொன்னால் சொன்னதுதான் வேறை அப்பீல் இல்லை என்று எண்ணிய கமலா விறுவிறுவென குசினிப்பக்கம் போய் கையிலை ஒரு பின்னல் கூடையை எடுத்துக் கொண்டு வெளியிலை வந்தாள்.

கந்தையா மாஸ்ரருக்கு மனைவியின் வருகை பெரும் ஆச்சரியமாயிருந்தது. கந்தசாமியிடம் கடன் வாங்கி வர அவளே புறப்பட்டு விட்டாளோ? இருக்காது வாழ்நாளிலே கடைத்தெருவுக்கு தனியாய் போய் சாமான் வாங்கி அறியாள் அவள். அதுவும் தற்போது வாடகைக்கு வீடு எடுத்து ஒரு வருசம் ஆகியும் மாஸ்ரர்தான் கடைக்குப் போய்வாறார். மனைவி கமலாவுக்கு இன்னும் இடமோ புதிசாய்தான் இருக்கிறது. அப்படியிருந்தும் எப்படி கடைக்குப் போகப்போகிறாள் என எண்ணியபடி மனைவியின் வருகையை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த கந்தையா மாஸ்ரரை

அவர் வீட்டு வாசலுக்கு முன்னால் ஒரு அபலைப்பெண் இரு சிறு குழந்தைகளை கையில் பிடித்தபடி அழுது கொண்டு நிற்கும் காட்சி திசை திருப்பியது.

அந்த அபலைப் பெண்ணின் குழந்தைகள் இரண்டும் வீரிட்டு அலறியபடி இருந்தன. "ஐயா உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும். என்ரை பிஞ்சுகளை காப்பாத்துங்கம்மா. இரண்டும் சாப்பிட்டு ரண்டு நாளாச்சும்மா. இந்தப் பாவிக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. சாப்பாடு போடுங்கம்மா. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

கந்தையா மாஸ்ரருக்கும் அவரது மனைவிக்கும் அபலையின் அலறலையும் அவளது கையிலிருந்து அழுதுகொண்டிருக்கும் குழந்தைகளையும் பார்த்ததும் மனசுக்குள் ஏதோ செய்தது.

நாங்களே அடுத்த வேளைக்கு என்ன செய்வது என தவித்துக் கொண்டிருக்கும் போது போயும் போயும் எங்களிடம் யாசிக்க வந்து நிற்கும் அந்தப் பஞ்சைகளை எப்படிச் சமாளிப்பது?

மாஸ்ரரும் மனைவியும் மாறிமாறித் தம்மைப் பார்த்தனர். "என்னப்பா செய்யிறது. பாவங்கள் எங்களை நம்பி வந்திட்டுதுகள் எங்களிட்டையோ வசதியில்லை. கடவுளே என்ன ஒரு சோதனை. புராணக் கதை மாதிரித் பிள்ளைக் கறிகாய்ச்சிக் குடுக்க பிள்ளைகளும் கைவசமில்லை". கந்தையா செய்வதறியாது கலங்கி நின்றார். தனது இயலாமையை எண்ணி வெட்கித் தலைகுனிந்து உள்ளங்கைக்குள் நெற்றியைப் புதைத்தபடி நிலத்தைப் பார்த்தபடியிருந்தார்.

"எடி பிள்ளை இஞ்சை வா என்ன பிரச்சனை? கமலம் அந்த அபலையை உள்ளே அழைத்தாள்."

"அம்மா பிள்ளையள் இரண்டும் சாப்பிட்டு ரண்டு நாளாச்சு. அதுகளை வீட்டிலை விட்டுட்டு வேலைக்கும் போகேலாது யார்ரை உதவியும் இல்லை."

"அது சரி உன்ரை புருசன்காரன் எங்கையடி?"

"அவனோ... அவன் வெளிநாடு எண்டுபோய் அங்கேயே ஒருத்தியை கலியாணம் செய்து எங்களை நடுத் தெருவிலை விட்டுட்டானம்மா" என கண்ணீர் சிந்தியபடி கூற

"உவங்களையெல்லாம் நடுத் தெருவுக்கு இழுத்து வந்து...." கோபத்தோடு பல்லை நெருமிய கமலம்... "சரி.. சரி அழாதை" எனத் தேற்றியவாறு தனது இடுப்பிலை சொருகியிருந்த சேலைத்தலைப்பை உருவி எடுத்தாள்.

ஒரு இனியில்லையெண்ட அவசர தேவைக்காய் ஒரு ஆயிரம் ரூபாயை கணவனுக்குத் தெரியாமல் அந்த சேலைத் தலைப்பில் அவள் முடிந்து வைத்திருந்தாள். அதைத்தான் கணவனிடம் கொடுத்து கடைக்கு அனுப்ப கூடையையும் தூக்கி வந்தாள்.

ஆனால் கொடும் பசியால் அவதிப்பட்டு அழுது வடியும் பிள்ளைகளுடன் தவியாய் தவிக்கும் அந்த அபலையின் நிர்க்கதிக்கு உதவாது வெறுமனே அவளைத் திருப்பி அனுப்ப மனம் வராத கமலம் தனது முந்தானையின் முடிச்சை அவிழ்த்து அதற்குள் இருந்த ஆயிரம் ரூபாவை அந்த அபலையின் கைக்குள் தவழவிட்டு

"ஓடு... ஓடிப் போய் முதலிலை புள்ளையளின்ரை பசியைப்பார் ஓடு" எனச் சொன்ன கமலத்தின் பாதத்தில் விழுந்து வணங்கிய அந்த அபலைப் பெண் அந்த இடத்தை விட்டுப் பிள்ளைகளுடன் அகன்றாள்.

இந்தக் காட்சியைப் பார்வையிட்ட கந்தையா மாஸ்ரருக்கு தூக்கிவாரிப்போட்டது. தனது மனைவியின் பெருந் தன்மையையும் உயர்ந்த தாய்மை உணர்வையும் நினைத்தபடியே இன்னும் ஐந்து நாட்களுக்கு பட்டிணிகிடக்கக்கூடிய தெம்பு அவரின் உடலினிலே ஊற்றெடுத்தவராய் மெய்மறந்து சிலையாய் நின்றார் அவர்.

### தகவல் 4 (உறவுகள்)

நம்மை அதிகமாகப் பாதிக்கக்கூடிய இன்னொரு மாபெரும் ரகசியத்தை ஹோமோ சேப்பியன்ஸ் தொடர்ந்து மறைத்து வைத்து வந்துள்ளனர். நாகரீகமற்ற ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள் நமக்கு இருக்கின்றனர் என்பதோடு ஒரு காலத்தில் நமக்கு ஒருசில சொந்தச் சகோதர சகோதரிகளும் இருந்தனர் என்பதே. ஆனால் நாம் நாம் மட்டுமே மனிதர்கள் என்று எண்ணி வாழ்ந்து வருகிறோம். ஆனால் மனிதன் என்கின்ற வார்த்தைக்கு உண்மையான பொருள் ஹோமோ பேரினத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு என்பதுதான்.

**நன்றி : சேப்பியன்ஸ்**

அது ஒரு அடர்ந்த காடு. அதில் பல பெரிய மரங்கள். அப்பெரிய மரங்களில் ஒரு வேப்பமரம் அவ்வேப்ப மரத்தில் ஒரு சிறிய குருவிக்கூடு.அக்குருவிக்கூட்டில் அம்மாக்குருவியான மாடாவும் சின்னக்குருவியான லீனாவும் வாழ்ந்து வந்தனர். அம்மாக்குருவியான மாடா இரை தேடச்செல்லும் போது லீனாவை பாதுகாப்பாக இருக்கச் சொல்லி விட்டு செல்வார் . ஆனால் லீனாவோ திருட்டுத்தனமாக பக்கத்து மரத்தில் இருக்கும் தனது உயிர் நண்பியான சாராவை பார்க்கச் செல்வாள். மாடா வந்து பார்க்கும் போது சாரா வீட்டில் லீனா நீண்ட நேரமாக விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து கோபமாக லீனாவை, வீட்டிற்க்கு அழைத்துக் கொண்டு வருவார் அம்மா மாடா. தினமும் இவ்வாறே நிகழ்ந்தது. மாடாவும் லீனா விளையாடட்டும் என விட்டுவிட்டார். சில தினங்கள் இவ்வாறே கழிந்தன .

ஒருநாள் லீனா மெல்லப்பறந்து செல்லும் போது பாம்பு ஒன்று லீனாவைக் குறி பார்த்தது. அப்பொழுது அந்தச் சின்னக் குருவி லீனா பயத்தில் "அம்மா அம்மா" என்று அலறியது. இதைக்கேட்ட அம்மாக் குருவி மாடா, அடுத்த நிமிடமே பறந்து ஓடிவந்து லீனாவைக் காப்பாற்றியது. லீனாவிடம் மாடா "இனி நம் வீட்டிலேயே பாதுகாப்பாக இரு வெளியே தனியாக செல்லாதே" என்று கூறியதும் லீனா உடனே "வீட்டில் இருந்து நான் என்ன செய்வேன் அம்மா என்று கேட்டாள்" அவள் இவ்வாறு கேட்டதும் மாடா பேசாமல் படுத்து தூங்கு " என்று திட்டி விட்டார் .

லீனா கோபமாகப் போய் ஒரு மூலையில் இருந்தாள் உடனே மாடா சமாதானம் கூறியதும் லீனா கேட்டுக்கொண்டாள். தினமும் இரைதேட அதி காலையில் செல்லும் போது லீனாவை எழுப்பி விட்டு செல்லும் மாடா இப்போது எழுப்பினால் சாராவை பார்க்கப்போய் விடுவாள் என்று எண்ணியபடி எழுப்பாமல் தலையைக் கோதி புறப்பட்டார் .

மாலை வீடு வரும் போது "அம்மா ,அம்மா " என்றபடி ஓடிவந்த லீனா குருவி தான் ஒரு மாளிகைக்கு சென்றதாகவும் அங்கு தான் மிகவும் ஆனந்தமாக

# சின்னக் குருவியின் குட்டித் தூக்கம்





**தர்மிகா .உமாசுதசர்மா**

**யா /கொக்குவில் இந்துக் கல்லூரி (தரம் 7)**

விளையாடியதாகவும் அங்கே மாடாவையும் சாராவையும் சாராவின் அம்மாவையும் கண்டதாகவும் தானியங்களும் பழங்களும் அந்த அழகான மாளிகைக்குள் நிறைந்து காணப்பட்டதாகவும் அந்தப்பழங்களில் ஒன்றை எடுத்து உண்ணும் போது சாரா ஓடிவந்து விளையாட அழைத்துக்கொண்டு போனதாகவும் அப்போது கையில் வைத்திருந்த பழமும் அந்த அழகான மாளிகையும் மண்ணாக மாறியதாகவும் இதைக் கண்ட அதிர்ச்சியில் தான் எழுந்து விட்டதாகவும் எழுந்து பார்த்தால் தன் வீட்டில் இருந்ததாகவும் நீண்ட கதையை மூச்சு விடாமல் கூறியது லீனாக் குருவி .

அடக்கடவுளே ! எனச்சிரித்தபடி "இவை அனைத்தும் கனவு லீனா" என்று கூறியது மாடா குருவி. ஆனாலும் அதைக் கனவு என ஏற்க முடியாத லீனா , அடுத்தநாள் மாடா குருவி வெளியே புறப்பட்டதும் , சாரா வீட்டிற்கு சென்று அனைத்தையும் கூறினாள். பின்பு சாராவுடன் சேர்ந்து காட்டில் சிறிது தூரம் சென்று லீனா, அந்த மாளிகையை தேடினாள். ஆனால் மாளிகையைக் காண முடியவில்லை .

கவலையோடு வீடு திரும்பும் போது பாம்பு புற்றைக் கண்டாள். இது தான் அந்த மாளிகை என எண்ணி மேலிருந்து எட்டிப்பார்த்தாள் லீனா. சின்னக் குருவியான லீனாவைக் கண்ட பாம்பு சீறிக்கொண்டு துரத்திச் சென்றது. இந்த முறையும் அம்மாக்குருவி தான் சத்தம் கேட்டு வந்து லீனாவைக் காப்பாற்றினார். பின் லீனாவின் குறும்புத்தனத்தைத் தாங்க முடியாத மாடா குருவிக்கூடத்தில் விட்டுச் சென்றார் .ஆனால் லீனாவிற்கு அவ்விடத்தில் வாழ்வதில் விருப்பமே இல்லை . அதனால் அங்கு தரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபாடு இல்லாமல் நடக்க ஆரம்பித்தாள் லீனா. இதனால் கோபமடைந்த ஆசிரியர் எச்சரித்து ஒருதடவை மன்னிப்பு வழங்கினார் .

ஆனாலும் லீனா வழக்கம் போல, குறும்பு விளையாட்டைத் தொடர்ந்தாள். ஆசிரியர் மாடாவை வரவழைத்து லீனாவின் நிலைமை பற்றிக் கூறி எச்சரித்தார். அம்மாவைக் கண்டதும் அம்மாவுடன் செல்ல முடியவில்லையே என்று ஏங்கிய லீனா அழ ஆரம்பித்தது. இதைக்கண்டு அம்மா மாடா தன்னுடனே லீனாவை அழைத்து செல்ல முடிவெடுத்தார். லீனா வளர வளர அவளின் குறும்புத்தனமும் சேர்ந்தே வளர்ந்தது லீனாவை எவ்வாறாவது நல்வழிப்படுத்த எண்ணிய மாடாவிற்கு ஒரு யோசனை தோன்றியது .

பழையபடி சாராவின் வீட்டிற்கு விளையாட லீனாவை அனுமதித்தார் .லீனாவிற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அம்மாவின் சொற்படி கேட்கும் நல்ல பிள்ளையாக நடக்க ஆரம்பித்தாள். அம்மாவின் ஆசையையும் கேட்டது போலும் எனது ஆசையும் நிறைவேறியது எனவும் சந்தோசமாக வாழத் தொடங்கினாள் லீனா .

## தகவல் 5 (பெரிய மூளை)

மனிதனின் பெரிய மூளை சிறப்பான வெகுமதிகளைப் பெற்றுக் கொடுக்கின்றன. ஏனெனில் சிம்பன்சிகளைவிட வேகமாக நகர்வதற்கு நமக்கு உதவக்கூடிய கார்களை நம்மால் தயாரிக்க முடியும். சிம்பன்சிகளோடு மல்யுத்தம் செய்வதற்குப் பதிலாக ஒரு பாதுகாப்பான தூரத்திலிருந்து அவற்றைச் சுட்டுக் கொல்வதற்கான துப்பாக்கிகளை நம்மால் தயாரிக்க முடியும். ஆனால் கார்களும் துப்பாக்கிகளும் சமீபத்திய கண்டுபிடிப்புகளே 20 லட்சம் ஆண்டுகளுக்கும் மேலாக மனிதனின் நரம்பணுப் பிணைப்புகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருந்தன என்றாலும் சிறு கத்திகள் மற்றும் கூரான கம்புகளைத் தவிர மதிப்பு வாய்ந்த வேறு எதையும் மனிதன் உருவாக்கவில்லை. அப்படியானால் அந்த 20 லட்சம் ஆண்டுகளின்போது பண்டைய மனிதனின் மாபெரும் மூளையின் பரிணாம வளர்ச்சியை எது முன்னோக்கி உந்தித் தள்ளியது? உண்மையைக் கூறவேண்டுமென்றால் இதற்கானவிடை எம்மிடம் இல்லை என்பதுதான்.



**நன்றி : சேப்பியன்ஸ்**

**வாசிப்பதால் ஒரு மனிதன்**
**பூரணமனிதனாகிறான்**

# அவனுடன்.....

வான் பிளந்து தார் உருக்கும் உச்சி வெயில் நண்பகல். ஆளரவமற்ற வீதி. காற்றின்றி அசைவற்று நின்றிருந்த இருபக்க நிழல்தரு மரங்கள். நிசப்தம் கிழித்து நடக்கின்ற என் பாதங்களின் ஓசை கேட்டபடி விரைந்து கொண்டிருந்தேன் வீடு நோக்கி. வெயிலின் தன்மைக்கேற்ப, தண்மைக்காகவே அணிந்திருந்திருந்தது போன்றே கரும் நீல ஸ்கேட் அண்ட் பிளவுஸ். அடர்ந்து நீண்ட கூந்தலை ஒற்றைப் பின்னலிட்டு முன்விட்டிருந்தேன். தொடைவரை நீண்டு படிந்திருந்த அப்பின்னலின் பாரத்தை தூக்கிச் சுமப்பது கூட என் அந்நாளைய “ராஸ்க்”இல் ஒன்றாக இருந்தது.



- ஜனார்த்தனி-

கால்களில் எனக்குப் பிடித்த கறுப்பில் பொன்னிற வார் கொண்ட சிறு உயரங் கொண்ட சிலிப் பர்ஸ். பொட்டு அணிவது அந் நாட்களில் எனக்கு ஏனோ பிடிக்காமல் போனது. அதனாலோ என்னவோ என் முகம் மென் சோகம் பூசிய சாந்த சொரூபினியாக பிறர் என்னை உணரும் வகையில் அமைந்தது. என் நண்பிகளிடம் பிறர் நான் முஸ்லீம் பெண்ணாவென வினவ வைத்ததுவும். வெயிலின் உச்சத்திலும் குடை பிடிக்கும் பழக்கமில்லா என் சுபாவமும், சிந்தைக்குட்படாத அசிரத்தையுடனான என் விரைதலும் சமயங்களில் எனக்கே வியப்பளிக்கும்! அகவாழ் உயிரிகள் இது பற்றி வியப்படையத் தேவையல்ல எனினும். வெயிலின் தாக்கம் கூடக் கூடக் கண்கள் சிறிது சிறிதாக வறட்சி பரவி உலர்ச்சியை உறுத்தியபடி ஆயினும் நடைவேகம் குறைப்பவளல்ல இவள். நேர் நோக்கி முன்னேறிய கண்களில் சிறிது சிறிதாக ஒரு காட்சி உள்நகர்கின்றது. கால்களின் வேகம் சற்று மட்டுப்படுத்தப்பட்டு சிரத்தை கண்வழி உள்நுழைகின்றது. மூன்று சாலைகளை இணைக்கும் முச்சந்தியின், மதிலோரம், தன் அகன்று பரத்திய கிளைகளுடன் ஒரு காட்டலரி மரம். பூத்துக் குலுங்கிய மஞ்சட் பொட்டணிந்த வெள்ளிதழ்ப் பூக்களுடன் பரஸ்பரம் பேசி சிலவற்றை உதிர்த்தபடியும், பலதைத் தாங்கி யபடியும் நின்றிருக்க, அதன் நிழலில் ஓர் இரட்டைத் துவிச்சக்கர வண்டி இளைப்பாறிக் கொண்டிருக்க, அதன் ஒரு புறமாக ஒய்யாரமாக அமர்ந்திருந்தான் அவன். கால்களின் அவன் வழக்கமாக அணியும் “சண்டல்ஸ்”( அந்நாளில் அவனை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியதில் இதுவும் ஒன்று) ஒரு கால் துவிச்சக்கர வண்டியிலும் மறுகால் நிலத்திலும் ஊன்றியபடி, பழுப்பு நிற கோடுகள் நிறைந்த சேர்ட், கருமை நிற பாண்ட், சீராக, சரிய வாரப்பட்ட சிகையுடன் வெயிலின் தாக்கம் சிறிதும் தாக்காத நிர்மலமான முகத்துடன் இமைக்காத கரும் ஆழ்(ள்)துளைக் கண்க ளால் நேர்நோக்கியபடி. சகமாணவன் தான். இருவரும் ஒன்றாக சில மணிநேரத்திற்கு முன் தான் விலங்கியல் பாட வகுப்பு முடித்திருந்தோம்.

என்னால் வகுப்பு முடிந்தவுடன் வீடு செல்ல முடியவில்லை. அருகிலிருக்கும் உறவினர் வீட்டிற்குச் செல்ல வேண்டிய வேலையிருந்தது. அதனால் அகாலத்தில் வீடு திரும்ப வேண்டியிருந்தது. அதனாலேயே புத்தகங்களை இறுக அணைத்தபடி அதி வேகத்தில் பயணித்துக் கொண்டி ருந்தேன்.நேர்நோக்கி அமர்ந்திருந்தவனில் சிறுசலன மில்லை.

“இமைக்காமல் நோக்குகின்றானே...!” என நினைத்து என்னுள் ஏக பதட்டம். நேர்நோக்கிய என் பார்வை மெல்லத் தாழ்கின்றது. உடலில் ஒருவித நடுக்கம் கால்களின் வேகம் சீரற்ற கதியில் குறைந்த வண்ணம். முடிந்தளவு முயற்சித்துக் கண்களை மெல்ல நிமிர்த்திப் பார்க்கின்றேன். இருவருக்குமிடையே இருபதடித் தூரமே இருந்தன! அவன் நிலையில் மாற்றமில்லை. இமைக்கா விழிகளுடன் உற்று நோக்கியபடி சிந்தனை வயப்பட்டவனாய். சட்டென்று என் பார்வை மண் நோக்கியது. என் கால்களின் வேகம் சடுதியாக குறைந்து கொண்டே இருந்தது. நடக்க முயன்றும் முடியாதபடி கால்கள் இடறின. ஒரு கட்டத்தில் இதற்கு மேல் ஒரு அடி எடுத்து வைத்தால் விழுந்து விடுவேனோ என்ற பயம். எப்படியாவது இவனைக் கடந்து விடவேண்டுமென என் கால்கள் பிரயத்தனித்தன.

“இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க” எனும் கம்பனின் வாசகத்திற்கேற்ப நான்.

“முடிந்தால் கடந்து பார்..!” எனும் மிடுக்கோடும் வாயிற் குமிண் சிரிப்போடும் அவன் நிற்க, நான் உணர்ந்தேன், நிமிர்ந்து பார்க்கத் திரணியற்று. நெருங்கி விட்டேன் அவன் கடப்பை. என் இதயத் துடிப்பு எனக்கே பேரிடியாகக் கேட்டது! சிறுவயதில் ஓடுவதில் நாட்டமுடையவள் நான். அதுவும், ஆண் நண்பர்களுடன். பாடசாலை மணி அடித்தால் வீடு வரும்வரை கண் மண் எதுவும் தெரியாமல் ஓடி வருபவள். அன்று, ஒரு அடி, ஒரு கணம்.... ஒரே....கணம் அவனைத் தாண்டி விடப் படாத பாடு பட்டேன். தாண்டி விட்டேன்! கால்கள் அவனைத் தாண்டி விட்டதாக வெற்றிக் களிப்பில்,காலமும் கூட. ஆனால், அங்கேயே இன்னும் நின்றிருக்கின்றான்....அவன் அவனுடன்,



# மஞ்சரி சிறுகதைகள்: ஒரு பார்வை

**பேராசிரியர் செ. யோகராசா**

### கழுத்துச் சங்கிலியும் கண்மணியும்:

“காலம் என்பது கறங்குபோற் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய் மாறிவரும் சமூகச் சூழலில் களவெடுக்கும் தொழில்முறை கூட மாற்றங்காண்பது தவிர்க்க இயலாததே” இவ்வாறான கரு சார்ந்து எழுதப்பட்டுள்ள இச் சிறுகதை வெகு நேர்த்தியான முறையில் யதார்த்தபூர்வமான விதத்தில் நகர்ந்து செல்வது பாராட்டிற்குரியது. முடிவு வரையும் அந்த இளைஞன் எத்தகையவனென்பது கண்மணியக்காவிற்கு மட்டுமன்றி எமக்கும் புலப்படாத விதத்தில் எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த இளைஞனுக்கு பெயர் சூட்டப்படாமையும் பொருத்தமானதுதான். எனினும் முடிவில் கண்மணியக்காவிற்கு ஏற்பட்ட அதிர்ச்சி வாசகரிடமும் ஏற்படும்படி விவரித்திருப்பின் இச் சிறுகதையின்தரம் இன்னும் உயர்ந்திருக்கும்.

### கோணல்

தெளிவுறவே மொழிந்திடுதல் என்பது பாரதி வாக்கு. சிறுகதைக்கும் இது பொருந்துவதே. ( பின்நவீனத்துவ பாணியில் எழுதப்படும் இன்றைய சிறுகதைகள் தவிர)இவ்விதத்தில் இச் சிறுகதை இன்னும் செப்ப னிடப்படுவது அவசியமாகும்.

### அன்றாடங்காய்ச்சி

வறுமையையே தங்கள் செல்வங்களாகக் கொண்டுள்ள குடும்பங்கள் பல உள்ளன. இத்தகைய குடும்பங்களின் ஒரு நாள் ஒரு யுகமாகக் கழிவதே வழக்கமாகும். நீச்சல்வீரன் ஆனந்தனின் சாதனைகளை எனது சிறுவயதில் கேட்கின்ற சூழுல் ஏற்பட்ட வேளைகளில் ஆனந்தனைவிட சாதனை செய்பவர்கள் இத்தகைய அன்றாடங்காய்ச்சிகளே என்று நான் எண்ணுவதுண்டு. இவ் விதத்தில் புதுமைப்பித்தனின் ஒருநாள் கழிந்தது மிக அற்புதமான ஒன்று. நந்தினி சேவியரின் ஒரு நாள் பொழுது படைப்பிலும் இவ்வாறான அன்றாடங் காய்ச்சிகளை சிருஸ்டித்துள்ளார். இந்த வரிசையில் இச் சிறுகதை ஆசிரியரையும் இங்கு சேர்க்கிறேன். கனகி போல் இருக்கின்ற இன்னும்பலரை எமது இளம் எழுத்தாளர்கள் இனங்கண்டு அவர்களுக்கு எழுத்தினூடாகவாவது வாழ்வு கொடுக்க வேண்டும்.

### திருப்பம்:

இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலொன்று இச் சிறுகதையாகியுள்ளது. மஞ்சரியில் வெளியான சிறுகதையொன்றில் குமாரி போன்ற ஒருத்தி இவ்வாறான செயலுக்கு ஆட்பட்டு அதன்விளைவுகளை பின்பு உணர்கின்றாள். இதில்வரும் குமாரியை முன்னரே தடுத்தாட்கொள்பவளாக பங்கஜம்மா காணப்படுகின்றாள். செப்பனிடப்படுவது அவசியமாயினும் கவனத்திற்குரிய சிருஸ்டி என்பதில் ஐயமில்லை.

### மேகா

சிறுகதையொன்றின் பேசுபொருள் புதிய விடயமெனில் பழையது என்னும் படியாகவும் பேசு பொருள் பழையதெனில் புதியது என்னும்படியாகவும் எழுத வேண்டும் என்பர். இச் சிறுகதையின் பேசுபொருள் இரண்டாவது வகையைச் சார்ந்தது என்ற வித்தில் கவனத்திற்குரியது இச் சிருஸ்டி. எனினும் கதைப்பின்னலில் இன்னும் கவனஞ் செலுத்தி இருக்கலாம். முடிவுப் பகுதியும் சிறுகதை அமைப்பிற்கு முரணானதென்பதை நிதானமாக வாசிக்கும்போது புரியக் கூடியதாக உள்ளது. அற்புதமான சிருஸ்டியாக உருவாகி இருப்பதனை இழந்தமை மன்னிப்புக்குரியதே.


### பிற்குறிப்பு:

சிறப்புச் சிறுகதையாக வ.அ.இ யின் தோணி பிரசுரமாகியிருப்பது பாராட்டப்படவேண்டியதே. உலகத் தரத்தில் அமைந்த சிறுகதையென்பது ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும். வ.அ.இ சிறுகதையின் மொழியாக பேச்சு மொழியில் எழுதாது எழுத்து மொழியிலேயே எழுதுவார். தோணியின் பெரும்பாலான உரையாடல்கள் எழுத்து மொழியிலேயே உள்ளன. தாய் என்கின்ற அவரது கதை முழுமையாய் பேச்சுமொழியிலேயே அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# எழுத்தின் அனுபவங்கள்.....

## நந்தினிசேவியர்



## வியாகுலம்

இதுவும் ஒரு பெருநாள் சம்பந்தமான கதை தான். மேய்ப்பன் கதைபற்றிய அனுபவத்தை ஏலவே எழுதிவிட்டேன். அது பத்திரிகைக் கதை. இது சஞ்சிகைக்கு எழுதிய கதை. எழுபதுகளில் சிறு சஞ்சிகை சூழலில் வெளிவந்த ஒரு சஞ்சிகை.

பெயர்: ஒளி ஆசிரியர்.:எஸ்.பஞ்சரத்தினம். வெளியீட்டாளர்: எம்.எம். லா.ஃ.பிர். முகவரி:38- பீ.எஸ்.என். லேன் யாழ்ப்பாணம். விலை: 45 சதம். சில இதழ்களே வெளிவந்து நின்றுபோன அந்த சஞ்சிகையின் டிசம்பர் - 1971. 4 வது இதழில் (கிறிஸ்மஸ் சிறப்பிதழில்) இக்கதை பிரசுரமானது. அந்த இதழ் சம்பந்தமான யாரோடும் எனக்குப் பழக்கம் இருக்கவில்லை. எனது தொழில்.நுட்பக்கல்லூரி நண்பன் ஒருவன் இக்கதையை 3 ஆவது இதழுக்கு என்று கேட்டு வாங்கியிருந்தான். அவனுக்கு அவ்விதழ்காரரோடு தொடர்பிருந்தது.
4. ஆவது இதழிலேயே அக்கதை பிரசுரமானது. காரணம் அது கத்தோலிக்கப்பாத்திரங்கள் கொண்ட ஒரு கதை. பெருநாளுக்கும் அக்கதைக்கும் சம்பந்தமே இல்லை. அக்கதை வந்த பிரதியை நான் யாழ்ப்பாணத்தின் ஏதோ ஒரு புத்தகசாலையில் வாங்கினேன்.

ஒளியில் " நந்தினி ". என்ற பெயரில் அது பிரசுரமாகியிருந்தது. அன்புடீன். திக்குவல்லை கமால்.முருகையன், சசி.கிருஸ்ணமூர்த்தி, நல்லை அமிழ்தன், ச. பாலதேவி என பலர் ஒளியில் எழுதியுள்ளனர். இதில் என்ன வியாகுலம் என்றால் அந்தக்கதை என் தொலைந்துபோன கதைகளில் ஒன்றாகிவிட்டது. சில பிரதிகளே வைத்துள்ள தெளிவத்தை, திக்குவல்லை, அன்புடீன் போன்றவர்களிடம் அந்த 4 வது இதழ் இருக்கவில்லை. சுவடிகள் திணைக்களத்திலும் நூலகம் இணையத்திலும் அவ்விதழ் இருக்கவில்லை. தேடித்தேடி ஏமாற்றமடைந்தேன். உண்மையில் "வியாகுலம்" கதை கிடைக்காமல் போனமை பெரியதொரு வியாகுல சம்பவமே.!

## கையெழுத்துச் சஞ்சிகைக் கதைகள்!.

ஞாபகசக்தி குறைந்துவரும் காலம். வரலாற்றை வரிசைப் படுத்துவதில் சிலவேளை தவறுகள் ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரண்டு கதைகள் கையெழுத்து சஞ்சிகைகளில் எழுதினேன். ஒன்று நம்மூர் கையெழுத்துச் சஞ்சிகை பெயர் நினைவுக்கு வரமாட்டேன் என்கிறது. கதையின் பெயர்.

"அவர்களிடமிருந்து அவர்களுக்கு! " அந்த கையெழுத்துச் சஞ்சிகை முற்போக்கு சிந்தனைவயப்பட்ட நம் இளைஞர்களால் உருவாக்கப்பட்டது. ஒரு கார் நிறுத்தும் இடத்தில் உருவாக்கப்பட்ட படிப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த சஞ்சிகை. ஆலயப்பிரவேசப் போராட்டம் ஒன்றில் மேட்டுக்குடியினரின் ஆயுதங்களைப் பறித்து அந்த ஆயுதங்களை அவர்களுக்கு எதிராக பாவிப்பதைக் கூறும் கதை. எதிரணியினரால் அந்தச் சஞ்சிகை கிழித்தெறியப்பட்டமை பின்னர் நடந்த சம்பவம். அந்தக்கதை தொலைந்து போன என் கதைகளில் ஒன்றாகி விட்டது.. மற்றைய கதை அல்வை சுந்தரன் வெளியிட்ட ஒரு அழகான சஞ்சிகைக்காக நான் எழுதிய கதை. அந்தக் கதையை பலர் பாராட்டிக் குறிப்பெழுதியதை நான் அச்சஞ்சிகையில் பிற்குறிப்புகளில் வாசித்திருக்கிறேன். என்னைத் தெரியாதபோதும் என் அந்தக்கதையை பேரா. கைலாசபதி பாராட்டி குறிப்பு எழுதியமையையும் நான் வாசித்துள்ளேன். இதற்கு சாட்சியம் அல்வை சுந்தரன். எப்போதும் வாசிப்பதில் கவனம் பெரிதும் இருந்தமையால் எழுதுவதில் கவனம் செலுத்தவில்லை. அந்த அசண்டையீனம் நான் அறியப்படாதவனாக இருப்பதற்கு காரணமாகிவிட்டது. இப்போதைய தொழில் நுட்பவசதிகள் அப்போது இல்லாமையும் எழுதப்பட்ட படைப்புகள் இல்லாமல் போனமைக்கு மற்றொரு காரணம்.

**வாசிப்பதால் ஒரு மனிதன்**
**பூரணமனிதனாகிறான்**


SKM
BOOKS
COMING SOON!
WWW.SKM-BOOKS.COM
BUY & SELL YOUR BOOKS ONLINE